கோகுலம்

GOKULAM

நவம்பர் '89 ரூ. 3/-





கோகுலம்

1989 நவம்பர் மாத இதழ்
மலர் — 7 * இதழ் 10



அன்புத் தம்பி, தங்கைகளே!

உங்களுக்கு என் உளமார்ந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

நலம்தானே?

உங்கள் முகத்திலே, நெஞ்சிலே, செயலிலே தீப ஒளி சுடர் விடட்டும்! அந்த ஒளியிலே அகிலத்தைச் சூழ்ந்த அறியாமை இருள், எழுத்தறியாக் குருட்டு இருள், குரோத இருள், பகைமை இருள், சோம்பல் இருள், சாதி மத வேற்றுமை இருள், ஏழை பணக்கார பேத இருள், லஞ்ச லாவண்ய மோசடி இருள், சுயநலச் சுரண்டல் இருள், இன்னும் கேடு செய்து மூடும் வகை தெரியாத தீய இருள் அத்தனையும் திசை கெட்டு ஓடட்டும்!

இருள் கவிந்த இடத்தில் எல்லாம் —
அன்புத் தீபம் ஏற்றுங்கள்!
அறிவுத் தீபம் ஏற்றுங்கள்!
பண்பு தீபம் ஏற்றுங்கள்!
படிப்பு தீபம் ஏற்றுங்கள்!
ஒழுக்க தீபம் ஏற்றுங்கள்!
ஒற்றுமை தீபம் ஏற்றுங்கள்!
சத்திய தீபம் ஏற்றுங்கள்!
சாதனை தீபம் ஏற்றுங்கள்!

'எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம், எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற ஒருமைப்பாட்டு உணர்வு தீபம் ஏற்றி வைத்துக் கொள்ளுங்கள்!

தீபாவளிக்கு வைக்கும் தீ இருக்கிறதே, அது வேள்வித் தீ! வேள்வித் தீ பற்றிப் பாட்டுக்கொரு புலவன் பாரதி இப்படிச் சொல்கிறார்:

நெஞ்சிற் கவலைகள் நோவுகள் யாவையும்
நீக்கிக் கொடுப்பவனை — உயிர்
நீளத் தருபவனை — ஒளிர்
நேர்மைப் பெருங்கனலை — நித்தம்
அஞ்ச லஞ்சேலென்று கூறி எமக்குநல்
ஆண்மை சமைப்பவனை — பல்வெற்றிகள்
ஆக்கிக் கொடுப்பவனை — பெருந்திரள்
ஆகிப் பணிந்திடுவோம் — வாரீர்!

இந்தத் தீபாவளித் திருநாளிலே தீபம் ஏற்றி வைத்து, அதன் எதிரில் நின்று இந்தப் பாடலை ஒரு முறை வாய்விட்டுச் சொல்லிப் பாருங்கள். உங்கள் உள்ளத்திலே தன்னம்பிக்கையோடு கூடிய உற்சாக ஊற்றுப் பெருக்கெடுக்கும். அது உங்கள் நெஞ்சிலே அப்படியே நின்று நிலவட்டும். உங்கள் வாழ்வு வளம் பெறட்டும்!

அன்பு அண்ணன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் — தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் — பாரதியார்.

• டி. திவ்யா





ஆர். கிருஷ்ணகுமார்: காசைக் கரியாக்கறதுன்னு சொல்வாங்களே... அது இந்தப் பட்டாசு விஷயத்துல தான் நூறு சதவீதம் நிஜம். காசைக் கொடுத்துப் பட்டாசு வாங்கிக் கொளுத்திக் கொளுத்திப் போடற போதுதான் புரியுது, நிமிஷ நேரச் சந்தோஷத்துக்காக நூற்றுக்கணக்காய் ரூபாய்களை வேட்டு விடறோம்னு! எதுக்கு இந்த வீண் விரயம்? 'பட்டாசு வாங்கித் தர்றதாய் இருக்கீங்களே, அந்தப் பணத்தை என் கையில் கொடுத்துடுங்க'ன்னு கேட்டு, சேமிப்பில் சேர்த்து, அம்மா அப்பாவுக்குத் தேவை வர்றப்போ தரணும்! தீபாவளின்னா வெறும் இனிப்பு போதாதோ?

தீபாவளி சற்று

பள்ளி மாணவ, மாணவியரிடையே வித்தியாசமாகத் தீபாவளியை எப்படிக் கொண்டாட விருப்பம் என்று கேட்டபோது, தங்கள் மனத்தில் உள்ளதைக் கொட்டி விட்டார்கள்.

எப்படி? இப்படி —

டி. திவ்யா: நமக்கு ஆண்டவன் பணத்தைக் கொடுத்திருக்கான். அதனால பண்டிகைன்னு கொண்டாடி ஸ்வீட், பட்டாசுன்னு செலவழிக்க முடியுது. ஆனா... எத்தனை ஏழைங்களுக்கு அன்றாடச் சாப்பாடே பெரிய பிரச்னையாய் இருக்கு! அதனால... டிரஸ்ஸுக்குப் ஸ்வீட்டுக்கும் பட்டாசுக்கும் என் வரையில் எத்தனை செலவாகுமோ, அந்தப் பணத்தை அப்பாகிட்டே வாங்கி அதில் ஏழைகளின் அடிப்படைத் தேவை எதையாச்சும் பூர்த்தி செய்ய மனசில் ஒரு ஏக்கம் உண்டு!




• ஆர். கிருஷ்ணகுமார்



வி. சிவகுமார்: மளிகைச் சாமான்களெல்லாம் விலை ஏறிக்கிட்டு வர்றது! அன்றாடச் சமையலுக்கே கல்யாணம் போல் செலவழிக்கிற காலம் வந்துடுமோன்னு ரொம்பவும் பயம்மா இருக்கு! குறிப்பா இந்தச் சர்க்கரை இருக்கே... டேயப்பா... ஒவ்வொரு மாசமும் இரண்டு பங்கு விலையாயிக்கிட்டுப் போகுமோன்னு தோணுது. அதனால தீபாவளிக்கு ஸ்வீட் செய்யக் கூடாதுன்னு ஒரு நியதி வெச்சுக்கணும். அதான், வெவ்வேற பண்டிகைக்கு வெவ்வேற விதமாய் ஸ்வீட் பண்ணித் திங்கறோமே! தீபாவளிக்கு ஸ்வீட் சாப்பிடலைன்னா, குறைஞ்சா போயிடுவோம்!

வித்தியாசமாகக்

வி. சந்திரகலா: தீபாவளியன்னைக்கு யாருக்காவது ஏதாவது நல்லது செய்தே ஆகணும்ங்கற உறுதியோட கண் முழிக்கணும். பெரியவங்களோட ஆசி வாங்கிக்கிட்டு அன்னைக்கு முடிஞ்ச அளவு ஆஸ்பத்திரிகளுக்கும் குடிசைகளுக்கும் விசிட் பண்ணி, கோயில் பிரசாதங்களை வினியோகம் பண்ணிக் குறைகளைக் கேட்டு ஆறுதல் சொல்லலாம். மற்றவர்கள் மனசைப் புண்படுத்தற மாதிரி ஒரு வார்த்தை கூட வாயில் வரக் கூடாதுன்னும், யார்கிட்டேயும் கோவிச்சுக்கவே கூடாதுன்னும் உறுதியாய் இருக்கணும். (தீபாவளிக்கு ஆரம்பிச்சு, அப்புறம் அதைத் தினசரிப் பழக்கமாகவே ஆக்கிக்கலாமே!)



• வி. சிவகுமார்



டி. இ. ஸ்ரீவித்யா: ஸ்வீட்டு போர். பட்டாசெல்லாமும் வீண் செலவு. மேலும் காதுக்கும் கண்ணுக்கும் நல்லதில்லைன்னு டாக்டர்ஸ் சொல்றாங்க. அந்தப் பணத்தை யெல்லாம் சேர்த்துப் போட்டு டக்கராய் டிரெஸ் எடுத்துடணும். முடிஞ்சா ரெண்டாவது செட் கூட எடுத்துடலாம். ஸ்வீட்டையும், பட்டாசையும்போல அன்னிக்கோ ரெண்டாவது நாளோ செலவழியாமல் ஜோராய் வருஷக்கணக்காய் உபயோகிக்கலாமே! நீதிக் கதைகள் சொல்ற கேஸட்டுகளை வாங்கிக் கேட்கணும்.



* கே. கணேஷ்

கொண்டாடிப்



* டி. இ. ஸ்ரீவித்யா

கே. கணேஷ்: அட... தீபாவளின்னா எப்பவும் காசை விரயம் பண்ணி அற்ப ஆசைகளை நிறைவேத்திக்கறதுன்னு ஏன் சாதாரணப் பாதையிலேயே புத்தி போகணும்! கொஞ்சம் வித்தியாசமான ஆசையாய்த்தான் வெச்சுப்போமே! அது, வாழ்க்கைக்கு உபயோகமான முறையில.. உயர்வான ஆசையாய் இருக்கலாம். அதனால, தீபாவளியன்னிக்கு, எல்லா ஃப்ரெண்ட்ஸையும் வரவழைப்பேன். எல்லாருமாய்ச் சேர்ந்து நாள் முழுக்க.. மயங்கி விழுந்துடாதீங்க. பாடம்.. பாடம்.. பாடம்.. மட்டுமே டிஸ்கஸ் பண்றதுன்னு தீர்மானிச்சா நல்லாயிருக்கும். ஆனா.. இது நிஜத்தில் சாத்தியமான்னுதான் தெரியலை! நண்பர்கள் ஒத்துழைக்கணுமே! அட.. இல்லாட்டி நான் மட்டும் படிக்கறேன். பக்திப் பட வீடியோ கேசட்களை வாங்கி ஃப்ரெண்ட்ஸ் கூடச் சேர்ந்து பார்க்கணும்.



டி. ராகவசிம்ஹா: அதென்ன? நாலு மணிக்கு எழுந்து, கண் சிவக்க எண்ணெய் தேய்ச்சுக் குளிக்கறதுன்னு ஒரு பழக்கம்? வித்தியாசமா லேட்டா எழுந்துக்கணும். தினமும் ப்ரஷ்லே பல் விளக்கறோம்! அன்னைக்கு மட்டும் வேப்பங்குச்சியாலே தேய்க்கணும். ஒரு கிராமத்துலே போய் அந்தப் பழக்க வழக்கங்களைப் பழகணும். தீபாவளி அன்று ஒரு கிராமத்துலே போய், அந்த ஊர் சிறுவர்களோட பேசி விளையாடற சொகம்! ம்.. மா.. மத்தியானமா அவங்களோட குடிசையிலே போய், மண் தரையிலே உட்கார்ந்துண்டு சாப்பிடணும்!

* கே. தீபா



பார்க்கலாமே!



* டி. ராகவசிம்ஹா

கே. தீபா: ஆண்டவன் எனக்கு ஒரு மாபெரும் வரத்தைக் கொடுத்திருக்காரு! உலகமே மதிப்போடும் தலைவணங்கியும் பார்க்கிற ஸ்ரீ திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளோட பேத்தியாய் என்னைப் படைச்சிருக்கார்! அதுக்கு நன்றி சொல்லும் வகையில் தீபாவளியைப் பக்தி மார்க்கத்தில் கொண்டாடுவேன். அன்றைக்குத் தாத்தாவோட உபன்யாச-காஸெட்டைப் போட்டுக் கேட்பேன். தாத்தாவை நமஸ்காரம் பண்ணி எழறதே பெரிய கொடுப்பினை அல்லவா? தாத்தா சொல்றா மாதிரி, தீபாவளி என்பது எட்டு விரதங்களில் ஒன்று. அதனால் அதை விரதமாகத்தான் கொண்டாடுவேன்.

தொகுப்பு: 'சின்னமுருகன்'
படங்கள்: பிரபுசங்கர்

நாம் யாரை நோவது?



• திருமுருக கிருபானந்தவாரியார்

நல்லவர்களுக்குப் பல துன்பங்கள் நேருகின்றன. அவ்வாறு துன்பத்தில் துடிக்கின்றபோது தெய்வத்தை நொந்து புலம்புகின்றார்கள். 'ஆண்டவனே, உன்னை அல்லும் பகலும் மறவாமல் துதிக்கின்றேனே. நான் யாருக்கும் ஒரு கெடுதியும் செய்தேனில்லையே. அப்படி இருக்க இந்தத் துன்பத்தை எனக்குத் தந்தனையே? இது முறையா? உன் அருளுக்கு அழகா? இறைவனே, உனக்குக் கருணையில்லையா?' என்று கூறி, தெய்வத்தின் மீது குற்றம்சாட்டி நோவுகின்றார்கள். இது பிழை.

கருணையே வடிவாய இறைவன், நம்பி வழிபடும் அடியவர்க்கு அல்லல் தருவானா? ஒரு பக்தனை அல்லல் பட வைப்பதில் அவனுக்கு என்ன லாபம்? ஆதலால் ஆண்டவன் மீது குறை கூறுவது அறியாமையின் சிகரமாகும். இறைவனை நோவக் கூடாது.

தேவர்கள் மிகவும் நல்லவர்கள், தெய்வ சிந்தனையுள்ளவர்கள், உத்தம குணம் படைத்த அமரர்களைச் சூரபன்மன் சிறையில் அடைத்து 108 யுகங்கள் துன்புறுத்தினான்.

இன்பத்தின் உச்சியில் வாழ்ந்த தேவர்கள் துன்பத் தீயில் துடித்தார்கள். சிறையில் ஈரமான — மேடு பள்ளமான தரையில் பாயும் தலையணையும் இன்றிப் படுத்தார்கள். அலம்பாத பாத்திரத்தில் உப்பில்லாத பழங்கஞ்சியைக் குடிக்குமாறு அமரர்களை அரக்கர்கள் அடித்துத் துன்புறுத்தினார்கள். இலந்தைப் பழம் அளவுள்ள அசுர மூட்டைப் பூச்சிகள் வரிசை வரிசையாக அவர்களைக் கடித்தன. நெல்லிக் காயளவுள்ள கொசுக்கள் தேவர்களைக் கடித்து வேதனைப்படுத்தின. அமரர்கள் 108 யுகங்கள் துன்புற்றார்கள். இந்திராதி இமையவர்கள் சூரபன்மனால் வேதனையடைந்து சத்திய உலகம் போந்து பிரமதேவனை வணங்கி முறையிட்டார்கள்:

"பிரமதேவரே! வாணி கேள்வரே! யாருக்கும் எந்தக் குற்றமும் செய்யாத நாங்கள் சூரபன்மனாலும் அவருடைய ஏவலர்களாலும் எல்லையில்லாத துன்பத்தையடைகின்றோம். என் செய்வோம்? படமுடியாதினித் துயரம், பட்டதெல்லாம் போதும்," என்று கூறி, அழுது தொழுது புலம்பினார்கள்.

பிரமதேவர் அமரர்களைப் பார்த்துக் கூறுகின்றார்: "நமக்கெல்லாம் பரமபதி சிவபெருமான். பரம கருணைக் கடலாகிய கண்ணுதற் கடவுளை நிந்தித்துத் தக்கன் வேள்வி செய்தான். சிவநிந்தை செய்த தக்கனுடைய யாகத்தில் நாம் கலந்து கொண்ட பாவத்தால் 108 யுகங்களாகச் சூரபன்மனால் துன்பம் அடைகின்றோம். நாம் யாரை நோவது? நம்மை நாமே நொந்து கொள்ள வேண்டும்.

"இறைவன் பட்சபாதமில்லாத

திருமுருக

வன். விருப்பு வெறுப்பு இல்லாதவன். தண்ணருள் புரியும் தயாநிதி. மாம்பழங்களை அதிகம் உண்டவனுக்கு வயிற்று வலி உண்டாகும். அவரவர்கள் செய்த வினைகளை அவரவர்கள் அனுபவித்தே தீர வேண்டும். நாம் செய்த வினைப் பயனை நாம் நுகர்வது முறைதானே? ஆதலால் சிவமூர்த்தியை நோவது கூடாது,'' என்றார்.

அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அநுபவம்
எவரெவர்க் குதவினர் எவ ரெவர்க்குதவிலர்
தவரவர் நினைவது தமை உணர்வதுவே

மாண்டவ்யர்

சாலவ நகருக்கு அருகில் உள்ள கானகத்தில் ஒரு பர்ணசாலையில் மாண்டவ்யர் என்ற முனிவர் சிவத்தை நாடித் தவத்தைச் செய்து கொண்டிருந்தார். அவர் பிரம தேவருக்கு நிகரானவர். சிறந்த தபோதனர். இரவிலே அவருடைய திருமேனியில் இருந்து ஒளி வீசும்.

கள்வர்கள் சாலவ மன்னனுடைய அரண்மனையில் பொன்னும் மணியும் களவு செய்தார்கள். அரண்மனைக் காவலர்கள் கள்வர்களை விரட்டிக் கொண்டு தொடர்ந்து ஓடினார்கள். கள்வர்கள் ஓடியோடி அயர்ந்து மாண்டவ்ய முனிவருடைய பர்ண சாலையில் நுழைந்து அவருடைய திருமுன் மூட்டைகளை வைத்து விட்டு ஒளிந்து கொண்டார்கள்.

காவலர்கள் கள்வர்களையும் மாண்டவ்யரையும் கையில் விலங்கிட்டுச் சிறையில் அடைத்தார்கள். பொழுது புலர்ந்தபின் மன்னன் எதிரில் நிறுத்தி.

''மன்னர் பெருமானே! இவன் ஒரு திருடன். இவர்கள் இவனுடைய சீடர்கள். நேற்றிரவு அரண்மனையில் இவர்கள் பொன்னும் மணியும் களவு செய்தார்கள்,'' என்றனர்.

கள்வர்களைச் சிரத்சேதம் செய்யுமாறும் மாண்டவ்யரைக் கழுவில்

கிருபானந்த வாரியார்



ஏற்றுமாறும் கட்டளை இட்டான்.

அரசன் இட்ட கட்டளைப்படி கள்வரைக் கொன்றார்கள். பரம ஞானியாகிய மாண்டவ்யரை நெஞ்சில் ஆணி அறைந்து கழுவில் ஏற்றினார்கள்.

காவலன் ஏவலர்களைப் பார்த்து, "இவன் கள்வர்களுக்குக் குரு என்று கூறினீர்கள். இரவில் கழுவுக்கு அருகில் ஒளிந்திருங்கள். இவனுடைய சீடர்கள் வருவார்களாயின் அவர்களையும் பிடித்து வாருங்கள்," என்று பணித்தனன்.

ஒற்றர்கள் ஒளிந்திருந்தார்கள்.

விடியற்காலையில் வசிஷ்டர், காசிபர், அகத்தியர் புலஸ்தியர், கபிலர் முதலிய முனிவர்கள் கங்கையில் நீராட விண்வழியே சென்றவர்கள், மாண்டவ்ய முனிவரைக் கண்டு திடுக்கிட்டு, அவரருகில் வந்து அவரை வணங்கி, "மாதவமணியே! தங்களைக் கழுவில் ஏற்றிய பாதகன் எவன்? தாங்கள் பார்வையால் மூன்று உலகங்களையும் சாம்பராக்கும் தவ வலிமையுடையவர் ஆ! ஆ! தாங்கள் கழுவில் இட்டவர்களை எரிக்காமல் இருக்கின்றீரே! என்ன காரணம்?" என்று வினாவினார்கள்.

மாண்டவ்யர், "முனிவர்களே! உங்களுக்கு விளக்கம். என்னை யாரும் கழுவில் ஏற்றவில்லை. எனக்கு யாரும் பகையில்லை. நான் யாரை நோவது? என் வினைதான் என்னைக் கழுவில் ஏற்றியது. வினையை நோவாமல் வினை செய்த என்னை நோவாமல் யாரை நோவது? நீங்கள் இது குறித்து வருந்த வேண்டாம். உடம்பு செய்த வினை நுகர்ந்தே தீர வேண்டும் நீங்கள் 'போய் வாருங்கள்," என்று ஆறுதலாகக் கூறியருளினார்.

இந்த உரையாடலைக் கேட்ட ஒற்றர்கள் சாலவ மன்னனிடம் கூறினார்கள். அரசன் அஞ்சி, கழுவினிடம் வந்து அருந்தவ முனிவரைக் கழுவில் இருந்து இறக்கி அவருடைய உடம்பில் இருந்த சிறு சிறு ஊசிகளைப் பிடுங்கினான். கழுத்தில் இருந்த பெரிய இரும்பாணியைச் சுற்ற முடியாமையால் அரம் இட்டு அராவினான். அந்த ஆணி நான்கு விரற்கடையளவு இருந்த போது, முனிவர், "மன்னவனே! இந்த ஆணி அப்படியே இருக்கட்டும். நான் தினம் சிவபூசைக்கு மலர் பறிப்பது வழக்கம். இந்த ஆணி பூக்குடலையை மாட்டி வைக்கப் பயன்படும்." என்றார்.

என்னே அவருடைய சிவபக்தி. ஆணியிருந்தபடியால் ஆணிமாண்டவ்யர் என்று பேர் பெற்றார்.

அவர் ஒரு சமயம் அறக் கடவுளைச் சந்தித்தார். அவரை அறக் கடவுள் வணங்கினார். மாண்டவ்யர், "அறக்கடவுளே! என் உடம்பில் இவ்வாறு ஓர் இரும்பாணியிருக்க நான் என்ன வினை செய்தேன்?" என்று கேட்டார்.

அறக்கடவுள், சித்திரகுப்தனை அழைத்து அவருடைய கணக்கைப் பார்க்குமாறு செய்தார்.

"அவர் இளமையில் ஒரு தும்பியைப் பற்றி அதன் வாலைக் கிள்ளியெறிந்து ஒரு முள்ளைச் செருகிப் பறக்க விட்டார். அந்த வினையால் இது நேர்ந்தது." என்றான் சித்திரகுப்தன்.

மாண்டவ்யர், "வினை செய்த என்னை நோவாமல் யாரை நோவது?" என்று கூறி விட்டுத் தவஞ்செய்யலாயினார்.

உயிர்கட்கு இடர் செய்வது எத்துணைப் பாவம் என்பதனைக் கண்டு உணர்மின்கள்.



நதியின் பிழையன்று

கைகேயி வரம் கேட்க, அவ் வரத்தின்படி இராமர் கானகம் போகப் புறப்பட்டார். அதனையறிந்த இலட்சுமணன் எரிமலை போல் சீறினான். பகைத்தவரைக் கொன்று எதிர்த்தவரை வென்று என் அண்ணனுக்கு முடி சூட்டுவேன் என்று கொதித்தான். பாதங்களால் பூமியை மிதித்தான்.

அருட்கடலாகிய இராமச்சந்திர மூர்த்தி தம்பியின் கரத்தைப் பற்றி, "என் அருமைத் தம்பி! சீற்றம் விளையாத சாந்தி நிகேதனமான இந்த மண்ணில் உனக்கு எவ்வாறு கோபம் வந்தது?" என்று கேட்டார்.

இலட்சுமணன், "அண்ணா! தங்கள் மகுடாபிஷேகத்துக்கு ஊறு விளைவித்த இந்த வேளையில்

கோபம் வராமல் அது எப்போது தான் வரும்?'' என்றான்.

''தம்பி! நதியில் நீர் இல்லையானால் அது நதியின் பிழையா? நாம் யாரை நோவது? தந்தையின் பிழையன்று, பத்து மாதம் சுமந்து பெற்று வளர்த்த தாயின் பிழையன்று, தம்பி பரதன் பிழையுமன்று, இது விதியின் பிழை.'' என்றார்.

நதியின் பிழையன்று நறும்புனலின்மை
அற்றே
பதியின் பிழையன்று! பயந்துநமைப்புரந்தாள்
மதியின் பிழையன்று! மகன் பிழையன்று:
மைந்த
விதியின் பிழை: நீ இதற்கென்னை
வெகுண்டதென்றார்

தன் மகுடாபிஷேகத்துக்கு ஊறு விளைவித்த கைகேயி மீது சீறினாரில்லை. அவளை மாற்றிய கூனியை நோவவில்லை. தன் வினையையே நொந்து கொண்டார். எத்துணைப் பெரிய சாந்தம்!

கிளி தந்த சிறை

இராமதாசர் தன் பொருளைக் கொண்டும் தானீஷாவின் பொருளைக் கொண்டும் பத்திராசலக் கோயிலைப் புதுப்பித்தார். தங்கத்தால் தூபியமைத்தார். மன்னன் வெகுண்டு அவரை 12 ஆண்டுச் சிறையில் அடைத்துத் துன்புறுத்தினான்.

பக்தனுடைய துயரத்தைக் கண்டு திருவுளம் இரங்கிய சீதாதேவி இராமரைப் பார்த்து, ''கருணைக் கடலே! இராமதாசன் பரம பக்தன், திருப்பணி செய்த இவன் சிறையில் கிடந்து துன்புறலாமா?'' என்று கேட்டாள்.

இராமர், ''தேவி! அவன் முற்பிறப்பில் ஒரு கிளியின் சிறகையரிந்து 12 நாள் கூட்டில் அடைத்தான். அதனால் இந்த வினை நேர்ந்தது. அவனுடைய வினையை நோவாமல் யாரை நோவது?'' என்று கூறியருளினார்.

தன் விருப்பம் போல் பறந்து மகிழும் கிளியைக் கூட்டில் அடைத்த பாவத்தால் ராமதாசர் 12 ஆண்டுகள் சிறையில் இருந்து துன்பத்தைத் துய்த்தார்

ஆதலால் அணுத்துணையும் பாவம் செய்யாது சிவபுண்ணியம் செய்து உய்வு பெறுவோமாக.

நேருஜியைக் கடனாளி ஆக்கிய பெண்

காக்கிநாடா என்று ஒரு நகரம். அங்கு ஒரு சமயம் காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய மாநாடு நடைபெற்றது. எப்போது?

நம் நாடு விடுதலை அடைவதற்கு முன்பு. அதாவது, இந்திய தேசிய காங்கிரஸ் அன்னியரை எதிர்த்து விடுதலைக்காகப் போராடிய சமயம் அது.

'சமுதாய முன்னேற்றமும் பொருளாதார முன்னேற்றமும், அரசியல் மாற்றங்களுடன் கைகோத்துச் செல்ல வேண்டும்' என்பது காந்திஜியின் கொள்கை.

எனவே, அவரது போராட்டத்தில், ஹரிஜன முன்னேற்றம், அவர்களது ஆலயப் பிரவேசம், பெண் கல்வி போன்றவை இடம் பெற்றன. அவற்றுடன், காதி, கிராமக் கைத் தொழில் முன்னேற்றத் திட்டங்களும் இடம் பெற்றிருந்தன. நிர்மாணத் திட்டங்கள் எனப் பெயர். அவற்றையெல்லாம் அவர் எப்படிச் செயல்படுத்தினார் தெரியுமா?

ஜானகி மணாளன்

எங்கு காங்கிரஸ் மாநாடு நடைபெற்றாலும் சரி. அதற்குச் சில தினங்கள் முன்னும் பின்னுமாக, அந்த இடத்தில் ஒரு பொருட்காட்சிக்கு ஏற்பாடு செய்து விடச் சொல்வார்.

அதில் நாடு முழுவதிலும் இருந்து, பல்வேறு கிராமியக் கைவினைப் பொருள்களைக் காட்சிக்கு வைப்பார்கள். அங்கு செயல்முறை விளக்கம் இடம்பெறும். அந்தப் பொருள்களின் விற்பனையும் உண்டு. எனவே, காங்கிரஸ் பொருட்காட்சி என்றால் கூட்டம் நெரியும். மக்கள் விரும்பி வந்து பார்த்துச் செல்வார்கள்.

நம் நாடு விடுதலை பெற்ற பிறகு, இந்தப் பணியைச் 'சர்வோதய சங்கங்கள்' செய்து வருகின்றன.

காக்கிநாடா காங்கிரஸ் மாநாட்டை ஒட்டியும் அத்தகைய ஒரு பொருட்காட்சிக்கு ஏற்பாடாகி இருந்தது.

நாடு முழுவதிலும் இருந்தும் பலவிதமான 'ஸ்டால்கள்' வந்து முகாம் இட்டிருந்தன. பல்லாயிரக் கணக்கான மக்கள் வந்து பார்த்து



மகிழ்ந்தனர். பெரிய கூட்டம். அக் கூட்டத்தை முறையாகக் கட்டுப் படுத்த வேண்டாமா?

அதற்காகப் பல இளைஞர்கள் ஈடு படுத்தப்பட்டிருந்தனர். அனைவரும் காந்திஜியின் தொண்டர்கள். 'சேவா தளத் தொண்டர்கள்' என்று பெயர். அவர்களில் பெண்களும் உண்டு.

அதில் ஒரு பெண்தான் துர்க்கா பாய். அவருக்கு வழங்கப்பட்டிருந்த பணிதான் என்ன?

அந்தப் பொருட்காட்சியைக் காண நுழைவுக் கட்டணம் உண்டு. நபருக்கு இரண்டு அணா, அதாவது, இன்றைய மதிப்பில் பன்னிரெண்டு காசுகள்.

நுழைவாசலில் நின்று கொண்டு, வருவோரிடம் நுழைவுச் சீட்டு இருக் கிறதா என்பதைச் சரிபார்த்து, அவர் களை உள்ளே போக அனுமதிக்க வேண்டும். இதுதான் துர்க்காவின் வேலை.

அன்று மாநாட்டின் முக்கியமான தினம். பெரிய பெரிய தலைவர்கள் எல்லாம் உரையாற்ற வந்திருந்தனர். அவர்கள் அனைவரும் பொருட் காட்சியையும் பார்க்க விரும்பி வந்தனர்.

துர்க்காபாய் அவர்களுடைய நுழைவுச் சீட்டைச் சரிபார்த்து,




* நேருஜி

அவர்களை உள்ளே போகச் சொல் லிக் கொண்டிருந்தார்.

அப்போது ஒரு கும்பல். ஏறத்தாழ இருபது பேர் இருக்கும். பொருட் காட்சியைக் காண வந்து கொண் டிருந்தனர். அவர்களின் நடுநாயக மாக ஒரு பெரும் தலைவர். அவர் யார்? நேருஜி!

எல்லாரும் நுழைவாசலுக்கு அருகில் வந்து விட்டனர். சட்டென்று துர்க்காபாய் கையைக் காட்டி, அனைவரையும் மறித்து நிறுத்தினார்.

நேருஜி உள்பட எல்லாரும் திகைத்து நின்று விட்டனர்.

துர்க்கா, அவர்களைப் பார்த்து, "பெரியோர்களே! தயவு செய்து நான் சொல்வதைக் கேட்டுக் கொள் ளுங்கள். இந்தப் பொருட்காட்சியைச் சென்று காண நுழைவுக் கட்டணம் உண்டு. இரண்டு அணாதான்..." என்றவாறு, சீட்டு விற்கும் இடத் தைச் சுட்டிக் காட்டினார். "அதோ அங்கு போய்த் தயவு செய்து சீட்டு வாங்கி வந்து விடுங்கள்..." என்று அன்புடன் கூறி விட்டு, சீட்டு வைத் திருந்தவர்களை, ஒவ்வொருவராக உள்ளே அனுமதிக்கத் தொடங்கி னார்.

அந்தக் கூட்டத்தில் சிலர் சீட்டு வைத்திருந்தனர். அவர்கள் ஒவ்வொருவராக உள்ளே போனார் கள். சிலர் ஓடிச் சென்று சீட்டு வாங்கி வந்து காட்டி விட்டு உள்ளே

போனார்கள். கடைசியில் ஒரே ஒருவர் மட்டும்தான் உள்ளே செல்ல வில்லை. ஏன் தெரியுமா?

அவரிடம் நுழைவுச் சீட்டு இல்லை. சென்று வாங்கி வரவும் அவரால் முடியவில்லை. ஏனெனில், அவர் கையில் அப்போது காசும் வைத்திருக்கவில்லை.

அந்த நபர் வேறு யாருமல்ல; நேருஜிதான்!

ஆனால், அவருடன் நின்றிருந்த இரண்டு மூன்று பேர், ''ஐயா! ஏன் நிற்கிறீர்கள்? உள்ளே வாருங்கள்,'' என்று அழைத்தனர்.

ஆனால் நேருஜி அசையவில்லை. அவர் சொன்னார். ''நீங்கள் எல் லாம் போய் உள்ளே பார்த்து விட்டு வாருங்கள். என்னிடம் சீட்டு இல்லை. நான் காசும் கொண்டு வர வில்லை. நாளைக்குக் காசுடன் வந்து, நுழைவுச் சீட்டு வாங்கி உள்ளே சென்று பார்த்துக் கொள் கிறேன். நீங்கள் எல்லாம் போங் கள்.''

நேருஜி கூறியதை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. ''உங்களி டம் சீட்டு இல்லாவிட்டால் என்ன? எங்களிடம் உள்ளதே! அது போதுமே.. எங்களுடன் சேர்ந்து வந்து விடுங்கள் உள்ளே'' என்று கட்டாயப்படுத்தத் தொடங்கினர்.

ஆனால் அவர் இணங்கவில்லை. ''கூடவே கூடாது. விதிமுறை என்று வகுத்து விட்டால், அதை யாராக இருந்தாலும் மீறக் கூடாது. பின் பற்றியே ஆக வேண்டும். தயவு செய்து என்னைக் கட்டாயப்படுத் தாதீர்கள். நீங்கள் எல்லாம் உள்ளே போங்கள்,'' என்று கேட்டுக் கொண் டார்.

அவர்களிடம் தயக்கம். அப்போது, தூரத்திலிருந்து அங்கு நடப்பதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஒருவர் ஓடோடி வந்தார். நேருஜி யைப் பார்த்து, ''ஐயா, தவறு நடந்து விட்டது. சிறு பெண். விவரம் புரி யாமல் இப்படி...'' என்று மன்னிப் புக் கேட்கத் தொடங்கி விட்டார்.

பிறகு, துர்க்காபாயைப் பார்த்து, ''என்னம்மா நீ என்ன காரியம் செய்து விட்டாய்? எட்டிப் போ,'' என்று கோபமாக அதட்டினார். தொடர்ந்து நேருஜியிடம், ''நீங்கள் உள்ளே வாருங்கள்,'' என்று அழைத் தார். அந்தப் பெண்ணிடம் திரும்பி னார்.

''அசட்டுப் பெண்ணே! இப்போது இப்படி நீ தடுத்து நிறுத்தியிருக்கும் நபர் யார் என்பது தெரியாமல், வீணில் பிடிவாதமாக விதி — கதி என்று பேசாதே! எட்டிப் போ,'' என்றார், சற்றுக் கோபத்துடன்.

அதற்கு துர்க்காபாயின் பதில் என்ன தெரியுமா? அவர் சிறிதும் அஞ்சவில்லை. ''ஐயா...! இவரையா எனக்குத் தெரியாது என்கிறீர்கள்? இவர்தான் நேருஜி. நன்றாகத் தெரி யும் எனக்கு.''

''தெரிந்துமா இப்படி உள்ளே நுழைய அனுமதிச் சீட்டு வேண்டும் என்று கேட்கிறாய் இவரிடம்?'' என் றார் வந்தவர்.

''ஆம் ஐயா. எனக்கு இடப்பட் டுள்ள பணி, நுழைவுச் சீட்டு உள்ள வரை மட்டுமே உள்ளே போக அனு மதிக்க வேண்டும் என்பது. எனவே சீட்டு இன்றி வருபவர் எவராக இருந் தால் என்ன? தடுத்து நிறுத்தி விட வேண்டியதுதானே என்னுடைய கடமை?'' என்றார் துர்க்கா, துணிவு டன்.

அதைக் கேட்டுச் சுற்றி நின்றவர் கள் அனைவரும் வாயடைத்துப் போனார்கள். ஆனால், நேருஜி மட்டும் மிகவும் மகிழ்ந்து போனார். புன்முறுவலோடு மெல்ல நகர்ந்து துர்க்காவுக்கு அருகில் வந்தார்.

நேருஜி தனக்கு அருகில் வரு வதைக் கண்ட துர்க்கா, அவரை வணங்கி வரவேற்றார். ''வணக்கம்

''என்னடா ராமு, 'வெங்காய வெடி' இவ்வளவு பெரிசா இருக்கு?''

''இது பெல்லாரி வெங்காய வெடிடா...!''

— வலங்கை ஜி. ராஜசேகர்.



நேருஜி அவர்களே...''

அதற்கு நேருஜி, ''வணக்கம் பெண்ணே! உன் பெயர் என்னம்மா?''

''துர்க்காபாய் ஐயா...''

''அப்படியா? ரொம்ப மகிழ்ச்சி துர்க்கா,'' என்ற நேருஜி, அவருடைய முதுகைத் தட்டிக் கொடுத்தவாறு சொன்னார். ''நல்ல பெண்... இப்படி நீ, உன் கடமையை மீறாமல், நேர்மையோடு செயலாற்றுவதை எண்ணி, நான் பெருமைப்படுகிறேன் துர்க்கா. பாராட்டுக்கள்!'' என்றார்.

துர்க்காவுக்குப் பெருமையாக இருந்தது. அதே நேரத்தில், நேருஜியின் புகழ் மொழியைக் கேட்டதும் வெட்கமாகவும் இருந்தது. எனவே, கூச்சத்துடன், ''நன்றி,'' என்றார்.

நேருஜி தொடர்ந்து, ''இந்த நாட்டிலுள்ள ஒவ்வொருவரும் உன்னைப் போல் இப்படி அவரவர் கடமையைப் பொறுப்புடன் செய்தால் போதும்.. நம் நாடு எதிர்காலத்தில் சிறப்படையும்,'' என்றார்.

''என்றாலும் எனக்கு மிகவும் மன வருத்தமாக இருக்கிறது ஐயா,'' என்றார் துர்க்கா.

''ஏன் அப்படிச் சொல்கிறாய்?''. இது நேருஜி.

''ஆமாம்... பிறகு என்ன? ஆவலோடு இந்தப் பொருட்காட்சியைப் பார்க்க வந்தீர்கள். நுழைவுச் சீட்டு அது, இது என்று சொல்லித் தடுத்து நிறுத்தி, உங்களை உள்ளே போக முடியாமல் செய்து விட்டேனே! அதை நினைக்கும் போது...'' என்றவாறு கண்கலங்கினார் துர்க்கா.

அதற்கு நேருஜி சிரித்தபடி, ''என்னாலேயா உள்ளே போக முடியாது என்கிறாய்? இதோ பார்த்துக் கொண்டே இரு. நான் என்ன செய்கிறேன் பார்,'' என்று சவால் விட்டபடி அங்கிருந்து விரைந்து எங்கோ சென்றார்.

சற்று நேரத்துக்கெல்லாம் நேருஜி திரும்பி வந்த போது, அவர் கையில் ஒரு நுழைவுச் சீட்டு!

துர்க்காபாய் அது ஏது, என்ன என்றெல்லாம் கேட்கவில்லை. அதை வாங்கி இரண்டாகக் கிழித்து, ஒரு பாதியைத் தான் வைத்துக் கொண்டு இன்னொரு பாதியை நேருஜியிடம் திருப்பிக் கொடுத்தார்.


துர்க்காபாய்

அதைப்பெற்றுக்கொண்டநேருஜி, மகிழ்ச்சியுடன் விடைபெற்று உள்ளே சென்றார். துர்க்காபாயிடமும் மகிழ்ச்சிக் களை மின்னியது.

சரி, நேருஜி கொண்டு வந்து கொடுத்த அந்த நுழைவுச் சீட்டு, அவருக்கு எப்படிக் கிடைத்தது?

விரைந்து சென்ற நேருஜி, சீட்டு விற்பனையாகும் இடத்துக்கு அருகில் இருந்த ஒரு நண்பரிடம் போனார். 'நண்பரே! எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டுமே,'' என்றார்.

''தங்களுக்கு இல்லாத உதவியா? சொல்லுங்கள். உடனே செய்கிறேன்,'' என்றார் அந்த நண்பர்.

''வேறு ஒன்றுமில்லை. எனக்குக் கடனாக இரண்டணா வேண்டும். நாளை தந்து விடுகிறேன்,'' என்றார்.

அந்த நண்பருக்கு மிகுந்த மகிழ்ச்சி. நேருஜி அல்லவா கேட்கிறார்! உடனே எடுத்துக் கொடுத்தார்.

அந்தக் காசில் வாங்கியதுதான், அவர் கொண்டு வந்து கொடுத்த நுழைவுச் சீட்டு!

அது சரி, நேருஜியை இவ்வாறு ஒரு கடனாளியாக்கிய அந்தப் பெண் துர்க்கா யார் தெரியுமா?

பிற்காலத்தில் தேஷ்முக் என்பவரை மணந்து, 'துர்க்காபாய் தேஷ்முக்' என்ற பெயரில் நாட்டு விடுதலைப் போரிலும், அதன் பிறகும் பொது நலச் சேவை செய்து புகழ் பெற்ற பெண்மணிதான் அவர்!

நேரு பிறந்த நவம்பர் மாதம்
நல்ல தேதி ஏழிலே
'யார் பிறந்தார்?' — என்ற செய்தி
எனக்குச் சொல்ல முடியுமா?

அருணா சலம் தேனப் பனாம்
அழகு வள்ளி கூடவே
பிறந்து வேறு ஒருவர் வீடு
போன தத்துப் பிள்ளையாம்!




அன்புத் தந்தை அழகப் பராம்,
அன்னை உமை அம்மையாம்!
பண்பு காட்டும் இராய வரம்,
பள்ளி 'காந்தி' மாணவர்!

சிறுவ னாக இருந்த போதே
சினிமா 'போஸ்டர்' கண்டதும்
கரும்பு போன்ற 'காணாக் காடு'
கவிதை பாடிக் களித்தவர்!

சின்ன வயதில் மாமி சத்தைச்
சேர்க்க மறுத்த உத்தமர்!
அன்னை மீது பக்தி-கொண்டு
அழகுக் கவிதை யாத்தவர்!

யார் அந்தச் செம்மல்?



பெருந் துக்குத் தந்த காசைப்
பெருமை யோடு சேர்த்தவர்;
வாரந் தோறும் நூல்கள் வாங்கி
விருப்பம் போலப் படித்தவர்!

நிறையச் சேர்த்த நூலைக் கொண்டு
நூல் நிலையம் அமைத்தவர்!
சிறுவர் மகிழக் கொடுத்து வாங்கிச்
சிறந்த கல்வி வளர்த்தவர்!

அனந்தம் பிள்ளை சொல்லித் தந்த
அழகுக் கவிதை கற்றவர்;
தினமும் பாடிக் கவிம ணிபோல்
தேர்ந்த கவிஞர் ஆனவர்!

காந்தி வழியில் நின்று கதரைக்
கடைசி வரையில் அணிந்தவர்!
சாந்த மான முறுவ லோடு
சுற்றம் சூழ வாழ்ந்தவர்!

அண்ணாவுக்கு அஞ்சலி



ஜி. ஜெயராமன்

அழகப் பனாம் தேவி, உமை,
அலர்மே லு,கஸ் தூரியாம்:
வழங்கும் ஐந்து மக்கள் பெற்று
வாழ்ந்து களித்த உத்தமர்!

பார திக்குச் சங்கம் வைத்துப்
பெரிய விழாக் கண்டவர்!
சார தியாய் நின்று பல
சங்கங் களை வளர்த்தவர்!

ஒரணா பாப்பா மலரில் எழுதி
உயர்ந்த கவிஞர் ஆனவர்;
திரண்ட நூலாய் 'உள்ளம் மலர'த்
தந்து பெருமை கொண்டவர்!

'மலரும் உள்ளம்' திறந்து காட்டி
மேலும் சிறுவர் நூல்களாம்;
பலவும் எழுதிக் 'குழந்தைக் கவிஞர்'
பட்டம் பெற்றுச் சிறந்தவர்!

குழந்தைக் காக எழுது வோரைக்
கூட்டிச் சங்கம் அமைத்தவர்!
பிழைகள் இன்றிப் போட்டி வைத்துப்
பலரை வளர்த்துத் தந்தவர்!

ராஜா ஜியின் நட்பைப் பெற்று
ராஜ நடை போட்டவர்!
'ராஜா வாவா' என்றே திரைக்கு
ராகப் பாட்டுத் தந்தவர்!

திறமை கண்டு மதுரைக் கழகம்
தந்த பட்டம் பெற்றவர்;
சிறந்த 'தமிழ்ப் பேர வையின்
செம்மல்' அந்தப் பட்டமாம்!

எழுந்த பாட்டைப் பாலர் கூடி
ஏற்ற பிறகே அச்சிலே
வழங்கும் பழக்கம் கொண்டி ருந்த
வையம் போற்றும் கவிஞராம்!

இறுதி மூச்சு இருந்த வரையில்
எழுதி எழுதிக் குவித்தவர்!
சிறந்த வீடு கோகு லத்தில்
சேர்ந்து வாழ்ந்து மகிழ்ந்தவர்!

செம்மல் பட்டம் தந்த மதுரைச்
சீமை தன்னில் மறைந்தவர்!
செம்மல் பெயரைக் கூற இன்னும்
சிறுவர் களே தயக்கம் ஏன்?

அந்தச் செம்மல் அழகு அப்பர் —
அன்னை உமை மைந்தராய்
வந்து அவத ரித்த அழ.
வள்ளி யப்பா! தெரியுதா?


ஹாண்டிப்ளாஸ்ட் வேடிக்கை விளையாட்டிலே பங்குபெறுங்கள்
சரியான முறையில் இப் புள்ளிகளைச் சேர்த்துப் பாருங்களேன், என்ன நடக்கிறது என்று.
(1 முதல் தொடர்ந்து 44 வரை இணையுங்கள்.)
எல்லா புள்ளிகளையும் சரியாக இணைத்தபின் முடிந்தவரை நன்கு அதில் வண்ணம் தீட்டுங்கள். ஆஹா! அருமையான வேடிக்கை இது! வாருங்கள், பங்கு பெறுங்கள்!
நட்புறவாடும் பட்டிகள்
Handyplast
HTA 1423



பீம பலம்

சியோல் ஒலிம்பிக்கில் நம் இந்தியா ஒரு பதக்கம் கூட வாங்காதது நந்துவுக்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது.

முறையாக, தொடர்ச்சியாகப் பயிற்சி பெற்றிருந்தால் தங்கப் பதக்கம் இல்லாவிட்டாலும் ஏதாவது ஒரு விளையாட்டில் வெண்கலப் பதக்கமாவது பெற்றிருக்கலாம் என்பது அவன் திடநம்பிக்கை.

எதற்காக மற்றவர்களை எதிர்பார்க்க வேண்டும்? நாமே பயிற்சி பண்ணினால், முதலில் அகில இந்திய விளையாட்டிலும் பிறகு ஆசிய அளவிலும் அதன்பின் ஒலிம்பிக்கிலும்...

அவனுக்குப் பளு தூக்குவதில் மிக விருப்பம்.

அவனுக்கு வாய்த்த உடற்கல்வி யாசிரியர் சுப்பிரமணியம் அவனை எல்லா வகையிலும் ஊக்குவித்தார்.

நாள்தோறும் அதிகாலை கிழக்கு வெளுக்கு முன்பே நந்து விளையாட்டு மைதானத்துக்குப் போய் விடுவான். நானூறு மீட்டர் சுற்றளவுள்ள அந்த மைதானத்தை முதலில் இரண்டு சுற்றுச் சுற்றுவதில் தொடங்கி, இப்போது ஐந்து சுற்றுகள் கொஞ்சம் கூடக் களைக்காமல் ஓடிச் சுற்றத் தேர்ச்சி பெற்றிருந்தான்.

நாள்தோறும் காலையில் உடற்கல்வி ஆசிரியர் அதே விளையாட்டு மைதானத்துக்கு வந்து ஐம்பத்திரண்டு வயதிலும் அவரும் நந்துவுடன் ஓடுவார். தாம் தோற்று விட்டதாகப் பாவனை பண்ணி நந்துவை ஜெயிக்க வைப்பார்.

பளு தூக்குவதிலும்.. முதலில் நூற்று இருபது கிலோ தூக்குவதற்குத் திணறிய நந்துவை இப்போது நூற்று எண்பது கிலோ எடையை அனாயாசமாகத் தூக்கப் பயிற்றுவித்து விட்டார்.

அன்று அதிகாலைப் பொழுது புலரும் நேரம் ஓடி முடித்து, பளு தூக்கும்போது நூற்றுத் தொண்ணூறு கிலோவைத் தூக்கக் கொஞ்சம் சிரமப்பட்டான் நந்து.

அன்று தற்செயலாகவோ, வேடிக்கை பார்க்கவோ விளையாட்டுத் திடலுக்கு வந்திருந்த செல்வம் நந்துவைக் கிண்டல் பண்ணினான்.


''டேய் நந்து, தவளை ஒன்று காளை மாடு மாதிரி பருக்கணும்னு ஆசைப்பட்டு ஊதி ஊதி, கடைசியில் வயிறு வெடிச்சுச் செத்த கதை தெரியுமா?'' என்றான் ஏளனமாக.

அப்போதுதான் அங்கு வந்த ஆசிரியர் சுப்பிரமணியம் செல்வத்தின் கிண்டலைப் புரிந்து கொண்டார். ''ஒரு கன்னுக் குட்டியை அது பிறந்த நாளிலிருந்து தொடர்ந்து ஒவ்வொரு நாளும் தூக்கிக் கொண்டே வந்தால் அது காளையாகும்போது

ரா. பொன்ராசன்



''அப்பா! நீங்க போட்டுத் தர்ற ஹோம் வொர்க் தப்புத் தப்பாயிருக் குன்னு எங்க வாத்தியார் திட்டறார். இனிமே ஹோம் வொர்க்கை நானே செய்துக்கிட்டுப் போறேன்!''



''அவனும், இவனும் ஃபெயிலான விஷயத்தை அப்புறம் சொல்லலாம். முதல்லே உன் விஷயத்தைச் சொல் லித் தொலை!''

கூடத் தூக்க முடியும் என்று நம்ம பெரியவங்க சொல்லியிருக்காங்க; அது தெரியுமா?'' என்று அவனிடம் திருப்பிக் கேட்க, செல்வம் முகத் தைத் திருப்பிக் கொண்டு போய் விட்டான்.

மாலையில் பள்ளி முடிந்த போது செல்வம் நந்தகுமாரைத் தன் வீட்டுக்கு வருமாறு அழைத்தான்.

நந்து போனபோது அவனுக்குச் சில விஷயங்களை ஆதாரபூர்வமாக உணர்த்தவே செல்வன் அழைத்தான் என்று புரிந்தது.

செல்வன் வீட்டு மாடிக் கைப்பிடிச் சுவரில் ஒரு பலகை உள்புறமாக நீட்டிக் கொண்டிருக்கும்படி கட்டப் பட்டிருந்தது.

எதற்காக இது என்று நந்துவுக்குப் புரியவில்லை.

''சில சமயம் படித்தவர்கள் கூட முட்டாள்களாக மூடநம்பிக்கை மிக்க வர்களாக இருக்கிறார்கள். நம்ம சுப்பி அந்த ரகம்,'' என்றான் செல்வன்.

நந்துவுக்குச் சுருக்கென்றது. கற் பிக்கும் ஆசிரியர்களை மரியாதைக் குறைவாகப் பேசுவதைக் கொஞ்சம் கூடத் தாங்கிக் கொள்ள முடியாத வன் அவன்.

''உன் பேச்சிலே குறை சொன் னால் உனக்குக் கோபம் வரும். நான் குறை சொல்லவில்லை. உண்மை யைத்தான் சொல்கிறேன்,'' என்றான் செல்வன்.

''கன்னுக்குட்டியை ஒவ்வொரு நாளும் தூக்கிக் கொண்டே வந்தால் அது காளையாகும் போது கூடத் தூக்கி விட முடியும் என்றாரே உன் கோச், அவர் சொன்னது உண் மையா? இப்போது இங்கே இருக்கி றதே பலகை அதில் கொஞ்சம் கொஞ்சமாகக் கிலோ படிகளை வைக்கிறேன் என்ன ஆகிறது பார்.'' என்று சொல்லிக் கொண்டே எடைப் படிகளை வைத்துக் கொண்டே வந் தான்.

ஐம்பது கிலோ படியில் தொடங்கி, பத்துப் பத்துக் கிலோவாகக் கூட்டிக் கொண்டே போனான். தொண்ணூ றாவது கிலோவில் பலகை வளைந் தது. நூறாவது கிலோ வைக்கும் போது புடீர் என்று ஒடிந்து விழுந் தது.

நந்து திடுக்கிட்டான். செல்வம் கலகலவெனச் சிரித்தான்.

''நம்ம சுப்பிரமணி சொன்னது முழுக்கத் தப்பு. முட்டாள்தனமான துன்னு இப்பவாவது ஒப்புக்கறியா?'' என்று செல்வம் சொன்னபோது, அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று நந்துவுக்குப் புரியவில்லை.

மிகுந்த யோசனையோடு வீட்டிற்கு வந்தான்.

மறுநாள் காலை விளையாட்டுத் திடலில் அவன் மனக் கலக்கத்தை அந்த உடற்கல்வி ஆசிரியர் புரிந்து கொண்டார்.

விசாரித்தார்.

செல்வத்தைப் பற்றி முற்றாகத் தவிர்த்து விட்டுத் தனக்கே ஏற்பட்ட சந்தேகமாக —

படிப்படியாகக் கனம் ஏற்றிக் கொண்டே போனால் ஒரு கட்டத் தில் தாங்கும் பலகை ஒடிந்து விழு வதைச் சொன்னான்.

அந்த நல்ல ஆசிரியர் கலகல வெனச் சிரித்தார். ''நீ பிரச்னையின் ஒரே பக்கத்தை மட்டும்தான் பார்த்

திருக்கிறாய்...'' என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த போதே —

'டொர்ர்...' என்று மைதான முன்புறத்துக்கு ஸ்கூட்டரில் செல்வம் வந்தான்.

''செல்வம், உன் ஸ்கூட்டரோடு இங்கே வா...'' என்று அழைத்தார் ஆசிரியர்.

வண்டியைத் தள்ளிக் கொண்டே அவன் வந்தான்.

''உன் வண்டி மணிக்கு அதிகபட்சமா எத்தனை கிலோ மீட்டர் போகும்?'' என்று கேட்டார்.

''எண்பது கிலோ மீட்டர்,'' என்றான் செல்வம் பெருமிதத்தோடு.

''அதற்கு மேலே வேகமாகப் போக வேணும்னா?''

''இந்த ஸ்கூட்டராலே முடியாது.''

''இந்த ஸ்கூட்டரில் போய்க் கொண்டிருக்கும் போது, பின்னாலே எதிரிகள் துரத்தறதா வச்சுக்குவம். அப்போ....?''

''எதிரிகள் துரத்தினாலும், எமனே துரத்தினாலும் அந்த வேகத்துக்கு மேலே போக முடியாது. அது தான் 'இதனுடைய உச்சபட்ச வேகம் இதுதான்னு' உற்பத்தி செய்யற போதே இதன் சக்தியை நிர்ணயிச்சுட்டாங்களே?'' என்றான்.

ஓர் ஆசிரியருக்கு அதுவும் உடற்கல்வி ஆசிரியருக்கு இந்த அடிப்படை அறிவு கூட இல்லாமலிருக்



கிறதே என்று கோபம் செல்வத்துக்கு.

உடற்கல்வி ஆசிரியர் சிரித்தார். ''உன் நண்பன் நந்து. மனித சக்தியும் அப்படி இந்த அளவுதான்'னு இயந்திரங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டது போல ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருக்கும் என்று நினைக்கிறான்.''

உண்மையில் ஆசிரியர் என்ன சொல்கிறார் என்று செல்வத்திற்கு மட்டுமல்ல; நந்துவுக்கும் புரியவில்லை.

ஆசிரியர் சொன்னார். ''பிராணிகளிடத்திலும் மனுஷர்களிடத்திலும் 'ரிசர்வ் எனர்ஜி'ன்னு ஒண்ணு இருக்கு உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது,'' என்றான் நந்து.

''நந்து, சாதாரணமாக நீ பயிற்சிக்காக ஓடறதுக்கும் பந்தயத்திலே ஓடறதுக்கும் வேறுபாடு இருக்குமா இருக்காதா?''

''நிச்சயமாக இருக்கும்,'' என்றான் செல்வம் முந்திக் கொண்டு.

''நல்லது. ஒரு பாதையிலே நீ போய்க்கிட்டிருக்கிறதா வச்சுக்குவோம். திடீர்ன்னு பின்னாலே ஒரு புலி துரத்தினா எந்த வேகத்திலே ஓடுவே?''

''நிச்சயமாப் பந்தயத்திலே ஓடறதைக் காட்டிலும் படுவேகமாகத்தான் ஓடுவேன்...உயிரைக் காப்பாத்திக்கணுமே...'' என்றான் நந்து.

எதுக்காக இந்தக் கேள்வி என்று

தீவிளி


''என்னடா, மைசூர் பாகோட யானை வெடியைக் கட்டி நெருப்பு வைக்கிறே?''

''அப்பவாவது மைசூர்பாகு உடையாதா'ன்ற ஒரு நப்பாசைதான்.''



''அவன் சரியான கஞ்சன்னு சொல்றியே, எப்படி?''

''அஞ்சு வருஷத்துக்கு முன்னே வெடிச்சதையெல்லாம் டேப் செய்து வச்சிருந்து, ஒவ்வொரு வருஷமும் அதையே போட்டுக் கேட்டுக்கிட்டு இருக்கான்னாப் பார்த்துக்கோயேன்!''




''போன வருஷ தீபாவளிக்கு உங்க கடையில வாங்கின ஸ்வீட்டெல்லாம் ரொம்ப நல்லா இருந்துச்சிங்க.''

''அது அப்படியேதான் இருக்கு. ஒரு ரெண்டு கிலோ இப்பக் கொடுக்கட்டுமா?''



''நான் கொடுத்த ஸ்வீட்டெல்லாம் எப்படி இருந்தது?''

''ரொம்ப நல்லாயிருந்தது. ஆனா ரெண்டே ரெண்டு 'பொய்ப்பல்' கட்ட வேண்டியதாப் போச்சு!''



புரியாமல் செல்வன் திகைக்க, 'ரிசர்வ் எனர்ஜி' பற்றிய உண்மை புரிந்து விட்ட மகிழ்ச்சியில் நந்து குதித்தான்.

"நம் மூளையிலும் சரி. உடம்பிலும் சரி. வங்கியிலே வைத்திருக்கும் நிரந்தர வைப்பு நிதிபோல பெரும் அளவு சக்தியை இயற்கை இட்டு வச்சிருக்கு. சாதாரணமான நேரங்களிலே அது பயன்பாட்டுக்கு வர்றதே இல்லே! கட்டாயம் தேவைப்படற நேரத்திலே அந்த 'ரிசர்வ் எனர்ஜி' அதாவது இருப்பிலுள்ள சக்தி பயன்பாட்டுக்கு வருது."

செல்வத்திற்கும் இப்போது இது புரிந்தது.

'மனிதனின் மூளைச் சக்தியில் எழுபது சதவீதமும், உடல் சக்தியில் எண்பது சதவீதமும் பயன்படுத்தப் படாமல் கடைசி வரை வீணாக்கப் படுகிறது.' என்று எங்கோ படித்தது அவனுக்கு நினைவிலே வந்தது.

பாரம் தாங்கிய பலகையில் 'ரிசர்வ்' என்று ஒன்று இல்லை. பளு தூக்கும் மனித உடலில் அது இருக்கிறது!

படிப்படியாக அது காளையைத் தூக்கும் அளவு பயன்படுகிறதோ இல்லையோ, சாதாரணக் காலத்தை விடப் பயிற்சி செய்யச் செய்ய, அது பயன்பாட்டுக்கு வரும் என்பதைச் செல்வம் புரிந்து கொண்டான்.

ஸ்பெஷல்

"தீபாவளி எப்படி இருந்துச்சி?"


"கண்ட கண்ட ஸ்வீட்டெல்லாம் சாப்பிட்டதால, வயித்திலே தீபா'வலி'யாப் போச்சு!"



பையன்: நீங்க கொடுத்த விதவிதமான வெடிங்க எல்லாமே பாம்பு வெடியா மாறிடுச்சி!

கடைக்காரர்: என்ன சொல்றே, புரியலையே?

பையன்: எல்லாமே 'புஸ்ஸ்'னு போயிடுச்சி!



"நம்ம வீட்ல இருந்த பாம்பு பட்டாசெல்லாம் திடீர்னு பக்கத்து வீட்டுக்கு ஓடுதா, ஏன்?"

"அங்கே யாரோ மகுடி ஊதிக்கிட்டு இருக்காங்களாம்!"





வீட்டுக்காரி: இந்தாப்பா மைசூர் பாகு. தீபாவளி ஸ்பெஷல்!

பிச்சை: பார்த்து மெதுவாப் போடுங்கம்மா, திருவோடு உடைஞ்சிடப் போவுது!



— மு. இருதாவுக்கரசு.


எட்டுக்கு எட்டு 6
கதை: தேசபந்து
படம்: ஜெ...
பீதாம்பரத்தின் வீடு...
இந்தப் படத்தில் இருக்கிறவர் யார் மிஸ்டர் பீதாம்பரம்?
எங்க தாத்தா, ஜமீந்தார் ஜகவீர பாண்டியன் ஊத்துக்கோட்டை போனா அவரைப்பற்றிக் கதை கதையாச் சொல்லு வாங்க.
கன்னையா.. அந்த ஊத் துக்கோட்டை எங்கே இருக்குன்னு உனக்குத் தெரியுமா?
ஒகேனக்கல் பக்கம்தாங்க. ஊத்துக்கோட்டை ஜமீன்னு இன் னைக்கும் அதுக்குப் பேரு... நான் கூட்டிப் போறேன்
ரஞ்சித் பீதாம்பரத் திடம் திரும்பி–
சேலம் தொழிலதிபர் கோபால்ராம் இருக்காரே, அவர் உங்களுக்குச் சொந்தமா..?
அட! இதுவரை நாங்க வெளியே சொன்னதில்லை. நீங்க எப்படிக் கண்டுபிடிச் சீங்க?



பீதாம்பரம் வாசலுக்கு வந்தார்-
தாங்க்யூ. என்பிள்ளை முரளியோட நீங்க எப்ப வரப் போறீங்கன்னு காத்திருப்பேன்!
கண்டுபிடிக்க வேண்டியது நிறைய இருக்கு. டோன்ட் ஒரி. கண்டுபிடிச் சுடுவோம். வர்றோம்!
அதெப்படிசார் அவங்க சொந்த பந்தமெல்லாம் துருவிப் பிடிச்சிட்டீங்க?
நாம போய்ப் பார்த்த அந்த மூணு பேர் வீட்டிலேயும் அந்த ஜமீன்தார் படம் இருந்ததே, கவனிக் கலே?
ஆமா... ஊத்துக்கோட்டை ஜமீன்தார் படம்!..ஆமா சார்....
மரமண்டையிலே இப்பவாவது ஏறுச்சா!


ஜமீந்தாருக்குச் சொந்தக்காரங்க புள்ளைங்களாக் குறிவச்சுக் கடத்திட்டுப் போயிருக் காங்க, இல்லே சார்?
பேஷ், பேஷ்! ரொம்பப் புத்தி சாலியாயிட்டே.... இப்ப நாம என்ன செய்யப் போறோம்?
எதிரே இளநீர் வண்டிக் காரன் —
எது வேணா செய்யலாம் சார்... முதல்லே ஒரு இளநி குடிப்பமா?
ஏம்ப்பா, ஊத்துக் கோட்டை ரொம்ப தூரமோ?
நான் அங்கிருந்து தான் சார் வரேன். ரெண்டு கல்லு தூரம் தான்!
ஜமீந்தார் ஜகவீர பாண்டி யன்னு...
எங்க தாத்தாவைப் போய்க் கேளு ங்க, கதை கதையாச் சொல்லுவார்..


வண்டிக்காரனின் தாத்தா குடிசை ஒரு இடிபாடான மாளிகைப் பக்கத்தில் இருந்தது-
யெஸ் சார்!
குடிசை உள்ளே யாரு பாரு.
கன்னையாவுடன் ஒரு கிழவர் வெளியே வந்து-
என் பேரு மாரப்பனுங்க. ஜமீன் காவல்காரனா இருந்தப்ப உங்களை மாதிரி தான் டிரஸ் பண்ணிட்டிருந்தேன்.
உங்களைமாதிரி ஒருத்தரைத்தான் தேடிட்டிருந்தேன்.
நீங்க எதுக்கு இங்கே வந்திருக்கீங்கன்னு எனக்குத் தெரியும் சார்!
தொடரும்.

பிருந்தாவனக்




பாரதி என்றொரு பகலவன்

புதுவையிலே பகலவனாய் பிறந்தவராம் — பாரதி
புரட்சிகளைச் செய்வதிலே சிறந்தவராம்!
புதுமையான புத்தகங்கள் படைத்தவராம் — பாரதி
பாரதத்தின் தூசுகளைத் துடைத்தவராம்!
பொதுத்தொண்டு பலகோடி செய்தவராம் — பாரதி
புயல்போன்ற கவிதைகளை நெய்தவராம்!
'எதுவரினும் அச்சமில்லை' என்றவராம்— பாரதி
எண்ணியதை நனவாக்கி வென்றவராம்!

நாட்டுக்கே ஒளிகொடுக்க வந்தவராம் — பாரதி
நாள்தோறும் தேசநலம் காத்தவராம்!
பாட்டெழுதிச் சுதந்திரத்தைப் பெற்றவராம் — பாரதி
பல்வேறு மொழிகளையும் கற்றவராம்!
தீட்டிவிட்ட வைரம்போல் ஜொலித்தவராம் — பாரதி
திண்மையுடன் உண்மையினை ஒலித்தவராம்!
வேட்டுவைத்து வெள்ளையரை வென்றவராம் — பாரதி
விதியையெல்லாம் மதியாலே கொன்றவராம்!

— அணக்குடி சிதா.

குடை வள்ளல்



இருண்ட மேகம் திரண்டு வந்து
இடிஇடித்து மின்னலை,
இருவிழியின் ஒளி பறிக்க
இறக்கிவிட்ட போதிலும்
பெருமழையின் பலம் மிகுந்து
பிறங்கு கம்பித் தூறலே
புறமுதுகைத் துளைத்தெடுத்து
புண்களாக்கும் போதிலும் —

மரம் முறித்து மலர் உதிர்த்து
மண் பறக்கக் கூரைகள் —
பிரித்தெறியும் காற்று வந்து
எலும்பொடித்த போதிலும்
பிறர் நலமே எண்ணுகின்ற
பெரியமனம் கொண்டிங்கு,
பிறந்துவந்த குடையதுதான்,
பெரிய தியாகி அல்லவோ!

— ம. பாலசுப்பிரமணியன், வந்தவாசி.

கவியரங்கம்

கங்கையா கடவுளா?

கங்கை இமயம் தன்னில் தோன்றி
எங்கே வருகிறது? — அது
எங்கள் பாரத மண்ணை நோக்கி
இனிதாய் வருகிறது!

மண்ணை நோக்கி கங்கை நதியும்
வருவது எதற்காக? — இந்த
மண்ணை வளமாய் ஆக்கிட வேண்டும்
வருவது அதற்காக!

மண்ணும் வளமாய் ஆவதனாலே
என்ன கிடைக்கிறது? — நாம்
உண்ண உணவு மரம் செடி மூலம்
உயர்வாய்க் கிடைக்கிறது!

உண்ணும் உணவை மட்டும் தானோ
அந்நதி கொடுக்கிறது? — இல்லை,
தண்ணீர் தன்னை நிறைவாய்த் தந்து
தாகமும் தணிக்கிறது!

தண்ணீர் உணவு கங்கை தருவது
சரி, சரி, சரி, தம்பி! — வேறு
என்ன பலனும் அதனால் உண்டு?
இயம்பிடு நீ தம்பி!


உடலின் அழுக்கும், உடையின் அழுக்கும்
ஒழிப்பதும் அதுதானே! — மற்றும்
கடவுள் போலப் புண்ணியம் அளித்துக்
காப்பதும் அது தானே!

புரிந்தது, புரிந்தது கங்கையின் பெருமை.
போற்றுவோம் அதை நாமும், — மனம்
விரும்பிய யாவும் அருளுக வென்று
வேண்டுவோம் அதை நாளும்.

— புவனை கலைச்செழியன்



அறிவை நாட நூல்



அறிவை நாட நூல்;
அன்பில் கூட நூல்;
அகிலம் அதனில் காணும் — நூல்
அமுதாய் நின்று பேணும்!

செறிவை ஊட்ட நூல்;
செம்மை நாட்ட நூல்.
செங்கோல் அதனில் துள்ளும் — நூல்
செழுமை மிளிர வெல்லும்!

குறியை எட்ட நூல்;
குறையை வெட்ட நூல்;
குமுறல் அதனில் ஊடும் — நூல்
குன்றாய் வென்று சூடும்!

உரிமை ஏற்க நூல்;
உவகை திற்க நூல்;
உலகம் அதனில் தோன்றும் — நூல்
உயர்நூ லகமே ஊன்றும்!

— ச. கலியனார், பொன்மலை.





பல நாள் திருடன்

பாட்டி வீட்டில் ஒருபானை
பாங்காய் இருக்கும் தயிர்ப்பானை!
பாட்டி வைக்கும் தயிர் அந்தப்
பானை நிறைய இருந்திடுமே!

வெளியில் சென்ற பாட்டியுமே,
வீடு திரும்பி வருமுன்னே,
களவில் தேர்ந்த ஒருபூனை,
கட்டித் தயிரைக் குடித்திடுமே!

திரும்பி வந்து பார்க்கையிலே,
தயிரைக் காணாப் பாட்டியுமே,
'திருட்டுப் பூனை கெடுக' என்று,
திட்டித் தீர்ப்பாள் சினத்துடனே!

ஒருநாள் அந்தப் பூனை தயிரை
உறிஞ்சி உறிஞ்சிக் குடிக்கையிலே,
உருண்டு விழுந்து தரையினிலே,
உடைந்தே போனது பானையுமே!

அழகுப் பானை உடைந்ததனால்,
அழுதாள் பாட்டி. பிறகுஒரு
கழுத்துச் சிறுத்த பானையிலே,
கட்டித் தயிரை வைத்தனளே!

என்றும் போலப் பூனையுமே,
எம்பித் தயிரைக் குடிக்கையிலே,
குண்டுத் தலையும் பானைக்குள்,
நன்றாய் மாட்டிக் கொண்டதுவே!

மாட்டிக் கொண்ட பூனையுமே,
மண்ணில் உருண்டது பானையுடன்!
வீட்டைத் திறந்த பாட்டியுமே,
விளங்கிக் கொண்டாள் நடந்ததனை!

துடைப்பக் கட்டை ஒன்றாலே,
திருட்டுப் பூனை முதுகினிலே,
புடைக்கும் படியாய்ப் போட்டவளும்,
பலநாள் கோபம் தீர்த்தனளே!

வகையாய் மாட்டிக் கொண்டதனால்,
வாங்கிக் கொண்ட பூனைக்கு,
முகமும் புண்ணாய் ஆகியதே,
மூச்சுத் திணறி ஓடியதே!

சுற்றிச் சுற்றி ஓடியதால்,
சுவரில் பானை மோதியதே!
முட்டிப் பானை உடைந்ததனால்,
முரட்டுப் பூனை தப்பியதே!

பாட்டி வீட்டுத் திசையதனைப்
பார்த்துக் கும்பிடு போட்டுவிட்டு,
காட்டுக் குள்ளே விரைந்தோடி,
கள்ளப் பூனை மறைந்ததுவே!

பலநாள் திருடன் எப்படியும்,
பிடிபடு வானே ஒருநாளில்!
உலகோர் சொல்லும் முதுரையை,
உணர்ந்து கொள்வீர் குழந்தைகளே!

— புலேந்திரன், விக்கிரபாண்டியம்.



எங்கள் வாத்தியார்

மதிப்புக் குரியவர்,
  எங்கள் வாத்தியார்;
மகிமை யுடையவர்,
  எங்கள் வாத்தியார்.

தலைப்பாகை அணிவார்,
  எங்கள் வாத்தியார்;
திலகம் இடுவார்,
  எங்கள் வாத்தியார்.

வகுப்பில் நுழைவார்,
  எங்கள் வாத்தியார்;
வாழ்த்துக் கூறுவார்,
  எங்கள் வாத்தியார்.

நேராய் நிற்பார்,
  எங்கள் வாத்தியார்.
நயமாய்ப் பேசுவார்,
  எங்கள் வாத்தியார்.

பாடம் சொல்லுவார்,
  எங்கள் வாத்தியார்;
பாட்டுப் பாடுவார்,
  எங்கள் வாத்தியார்.



பிழைகள் திருத்துவார்,
  எங்கள் வாத்தியார்.
பிழைகள் தவிர்ப்பார்,
  எங்கள் வாத்தியார்.

தவறுகள் செய்தால்,
  எங்கள் வாத்தியார்;
தட்டிக் கேட்பார்,
  எங்கள் வாத்தியார்.

வினாக்கள் கேட்பார்,
  எங்கள் வாத்தியார்;
விடைகள் தருவார்,
  எங்கள் வாத்தியார்.

உலகம் போற்றும்,
  எங்கள் வாத்தியார்;
உலகம் வாழ்த்தும்
  எங்கள் வாத்தியார்.

யாரையும் மதிப்பார்,
  எங்கள் வாத்தியாரவர்
பெயரைக் கேட்டால்,
  அனைவரும் வணங்குவார்.

— மாலன், சென்னை

டேய் தம்பி!





சூரியவொளி போல்நீயும் தலையைத் தூக்கு
  கடிதினிலே அருஞ்செயல்கள் நலமா யாக்கு;
ஞாலமெலாம் ஏழைகளின் துயரைப் போக்கு;
  நல்மனதாய்க் கடைப்பிடிப்பாய் பெரியோர் வாக்கு!

ஆற்றுமடை திறந்ததுபோல் எங்கும் ஓடு;
  ஆனாலும் அறிந்திடுவாய் பள்ளம் மேடு;
நேற்றுவரை வாழ்ந்ததுவோ குருவிக் கூடு;
  இன்றுமுதல் வாழ்வதெலாம் முழுதும் நாடு!

பிறந்ததுவோ வாழ்வதற்குத் தான்டா தம்பி
  பயத்துடனே பதுங்கியிருப்பின் போவாம் வெம்பி;
இறந்தாலும் துணிவிருந்தால் தங்கக் கம்பி;
  வான்முட்டக் குதித்திடுவாய் துள்ளி எம்பி!

உலகத்தின் எதிர்காலம் உந்தன் கையில்;
  உயர்வதுவும் தாழ்வதுவும் உந்தன் பையில்;
நலமெல்லாம் சொல்லிவிட்டேன் அறியாப் பேதை:
  நாடுவரும் நீசெல்லும் அந்தப் பாதை!

— வீரம்பாக்கம் கவிதாசன்



நீரிலே மிதக்கலாம் வினோத்(த்)தம்

விடுமுறைக்குக் கேரளா சென்று இருந்தோம். அங்கு மிதக்கும் சிறுவனையும், அவன் நீரில் மிதப்பதையும் கண்டு வாயடைத்துப் போனோம்.

நீரில் நீந்த முடியும். ஆனால் எல்லாராலும் மிதக்க முடியுமா?

முடியும் என்று இதோ காட்டுகிறானே ஒரு சிறுவன். தண்ணீரில் எத்தனை சுகமாய் மிதந்து கொண்டு புத்தகம் படிக்கிறான், பாருங்கள். இப்படி எத்தனை நேரம் கிடப்பானாம்? தொடர்ந்து நாலு மணி நேரத்துக்கும் மேலாக!

சிறுவன் பெயர் வினோத்குமார். வயது எட்டு. உயரம் மூன்றரை அடி. எடை சுமார் 25 கிலோ. மார்புச் சுற்றளவு 35 செ. மீ. ஐந்தாம் வகுப்புப் படிக்கிறான்.

இவன் தண்ணீரில் மிதப்பதற்காக எந்தவிதப் பயிற்சியும் எடுத்துக் கொள்ளவில்லையாம்.

தண்ணீரில் பல மணி நேரம் குளிக்கிறான் என எண்ணிய இவனது பெற்றோர் இவனைத் திட்டியும் கண்டித்தும் வந்து இருக்கின்றனர். அவன் நீரில் நீந்தாமலும் கை காலை அசைக்காமலும் நீரின் மேற்பரப்பில் மிதக்கிறான் என்று பலரும் சொன்ன பிறகு தான், அவனது பெற்றோருக்கு வினோத்குமாரின் சிறப்பு தெரிய வந்துள்ளது.

இப்போது கேரளா முழுதும் வினோத் நீரில் மிதக்கிறான் என்ற அபூர்வச் செய்தி தீவிரமாகி விட்டது. தினமும் அவன் எப்படி மிதக்கிறான் என்பதை நேரில் வந்து பார்த்து நூற்றுக்கணக்கானோர் வியப்புடன் பாராட்டிச் செல்கின்றனர்.

தனக்கு இயற்கையாகக் கிடைத்துள்ள நீரில் மிதக்கும் சக்தியைச் சிறுவன் 5 மணி, 6 மணி என நேரத்தை அதிகரித்துக் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெற விரும்புகிறான்.

தண்ணீரிலேயே வினோத்குமார் மிதப்பதன் காரணமாக அவன் உடல் நிலை பாதிக்குமோ என அவனது பெற்றோர்கள் அஞ்சுகின்றனர்.

சிறுவனின் குடும்பம் மிக மிக ஏழ்மையான குடும்பம். அவனை அரசாங்கம் இப்போதே தத்து எடுத்துக் கொண்டு, அவனுக்குத் தேவையான வசதிகள் எல்லாம் செய்து தந்து உதவி செய்தால் சிறுவனின் புகழ் உலக அளவில் புகழ் பெறும்.

— வி. பி. கே. மூர்த்தி, பாபநாசம்.



அன்று

வினோதானந்த்

அன்று மாலை தேர்வு முடிவுகள் வரவிருந்தன.

மணிமேகலை பத்தாம் வகுப்புத் தேர்வு எழுதியிருந்தாள்.

தான் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையைவிட, பெருமளவு அச்சமே அவள் உள்ளத்தில் குடிகொண்டிருந்தது. அதன் விளைவாக ஒருவித பரபரப்பும், படபடப்பும் அவளை ஆக்கிரமித்திருந்தன.

தான் தேர்வில் வெற்றி பெறவில்லை என்றால்?.....

உடன் படித்த அவளுடைய நெருங்கிய தோழிகள் முன் நிற்கக் கூசும். உடன் பிறந்தவர்களின் ஏளனப் பார்வை அவளைக் கொல்லாமல் கொல்லும். 'பேசாம போன வருடத்தோட படிப்பை நிறுத்தியிருக்கலாம். தண்டச் செலவு, ம்....' என்று அப்பா பெருமூச்செறிவார். 'ஏண்டி! கொஞ்சம் புத்தியைச் செலுத்தி எழுதியிருக்கக்கூடாது? இப்படி செஞ்சிட்டியே! உனக்கு வெட்கமாயில்லே?...' என்று அம்மா தணிந்த குரலில் கடுமையைக் குறைத்து இடித்துக் காட்டுவாள்.

அதோடு மட்டும்தானா?

அவளுடைய உறவுகாரர்கள் மாமா, சித்தப்பா, பெரியப்பா என்று பல்வேறு கிளைகள் வெளியூரிலிருந்து கடிதம் எழுதி விசாரிக்கும். 'மேலே என்ன செய்யப் போவதாக எண்ணம்?' என்று கேள்வி ஒரு சிறு அஞ்சலட்டையில் புறப்பட்டு வந்து சேரும்.

அவர்களுக்கெல்லாம் என்ன பதில் எழுதுவது?

முடிவு வருவதற்கு முன்பே ஒரு விபரீதக் கற்பனையை வளர்த்துக் கொண்டு தன்னைத்தானே வருத்திக்கொண்டிருந்தாள் மணிமேகலை.

சமீபத்தில் ஒரு செய்தித்தாளில் அப்பா படித்துக் காட்டிய செய்தி நினைவுக்கு வந்தது.

தேர்வில் தவறிய மாணவி ஒருத்தி அவமானம் தாங்காமல் மூட்டைப் பூச்சி மருந்தைக் குடித்து உயிரை மாய்த்துக்கொண்டு விட்டாளாம்.

நினைவில் அச்செய்தியை மீண்டும் கொணர்கையில் உடல் குலுங்கிற்று.


அன்று வரவிருக்கும் தேர்வு முடிவு தன்னையும் அந்த ஒரு முடிவுக்குத் துரத்திவிடுமோ என்று அஞ்சினாள்.

மனநிலை எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டால் அதுமாதிரியான ஒரு முடிவுக்கு வரத் தோன்றும்?

"இன்னும் குளிக்கப் போகலியா?.....

அம்மாவின் கேள்வி அவளுடைய சிந்தனையைக் கலைத்தது.

எதிலும் பற்றில்லாமல் போய்விட்ட ஒரு துறவியைப் போல் சலன



''ஏண்டா! பிராக்ரஸ் ரிப்போர்ட்ல எல்லா சப்ஜெக்ட்களிலும் குறைவாக மார்க் வந்திருக்கே. உங்க டீச்சர் என்ன சொன்னாங்க?''
'' 'என்கிட்டே பிரைவேட் வைச்சுக்கச் சொன்னா, மாட்டேன்னியே, அனுபவி'ன்னு சொன்னாங்க!''

மின்றி எழுந்தாள். மாற்றுடைகள், சோப்பு, துண்டு என்று அள்ளியெடுத்துக் கொண்டு குளியலறையை நோக்கி நடந்தாள்.

மணி பதினொன்று.

அப்பாவும், இரண்டு சகோதரர்களும் வேலைக்குப் புறப்பட்டுப் போயிருந்தார்கள்.

அப்பா புறப்படும்போது சொன்னார்: ''வரும் போது ஸ்வீட்டோட வர்றேன்....''

''மணிமேகலை! இனிமே நீ 'மணிமேகலை, பத்தாம் வகுப்பு'ன்னு ஒரு போர்டு தயார் செஞ்சு வாசல்ல மாட்டலாம்.'' இது அண்ணன்மார்களின் கிண்டல்.

உணவை முடித்துக் கொண்ட மணிமேகலை கட்டிலில் சென்று படுத்தாள். மனத்தை அலைபாய விடாமல் சஞ்சலப்படாமல் தடுக்கும் முகமாக ஒரு கதைப்புத்தகத்தைக் கையிலெடுத்துப் பிரித்தாள். இரண்டு வரி படிப்பதற்குள் சிந்தனை அவளுடைய கண்களைக் கட்டிப் போட்டது. கதையில் மனம் ஒப்பவில்லை. புத்தகம் பிரித்தது பிரித்தபடி நெஞ்சில் படுத்துக் கொண்டது.

மணி ஒன்று.

வீட்டு வேலைக்காரி கதவைத் தட்டினாள்.

தரையில் தலைப்பை விரித்துப் போட்டுப்படுத்திருந்த அம்மாவைப் பார்த்தாள். எழுப்ப மனமில்லை. தானே எழுந்து கதவைத் திறந்தாள். பத்துப் பாத்திரங்களை விளக்குவதற்காக அவற்றைக் கொல்லைப்புறம் கொண்டு வைத்தாள்.

''என்ன, புள்ள! ஏன் முகம் வாடிக் கெடக்குது? உடம்பு சரியில்லையா?....''

வேலைக்காரி அப்படிக் கேட்டதும், கண்கள் லேசாகக் கலங்கின. அந்தக் கலக்கத்தை மிகவும் கஷ்டப்பட்டு மறைத்துக் கொண்டு, ''ஒண்ணுமில்லே. நல்லாத்தான் இருக்கேன்,'' என்று சொல்லி ஒரு போலிச் சிரிப்பை உதிர்த்தாள்.

''பாப்பா பொய் சொல்லுது. மொகத்தைப் பார்த்தாலே வெளங்குதே!....''

''ஏய்! ஒண்ணுமில்லேன்னு சொன்னேனில்லே? ஏன் உசிரை வாங்கறே? சும்மா சும்மா கேள்வி கேட்டிட்டு...'' எரிந்து விழுந்தாள்.

வேலைக்காரி எவர் எப்படிக் கடிந்து பேசினாலும் கோபமோ வருத்தமோ கொள்ளாத அப்பாவி ஜன்மம். அதே சமயம் சொற்களில் கிண்டலும் கேலியும் கலந்து பூவாய் அள்ளித் தெளிப்பாள்.

''இனிமே உன் சோலிக்கு வரலே, தாயி...'' என்று அபிநயித்தபடி கன்னத்தில் போட்டுக் கொண்டு தன் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள்.

மணிமேகலைக்கே சிரிப்பு வந்துவிட்டது.

மணி நான்கு.

''அக்கா! பேப்பர் ஏழு மணிக்கு வருதாம் கடைக்காரர் சொன்னாரு...''

எதிர் வீட்டுப் பையன் ஓடிவந்து செய்தி சொல்லி விட்டுப் போனான். ஏதோ எச்சரிக்கை செய்து விட்டுப் போனாற்போலிருந்தது.

நெஞ்சில் திடீரென்று ஒரு வேதனை. நரம்பை வாகாகப் பற்றி

ஒரு சுண்டு சுண்டிவிட்டாற்போன்று வலி.

தவிப்பு அதிகமாயிற்று.

''மேகலை! இட்லிக்கு ஊறப் போட்டிருக்கேன். வந்து கொஞ்சம் அரைச்சுக் கொடுக்கறியா?...''

அம்மா கேட்டாள்.

பதிலில்லை.

''ஏண்டி! வாய்ல என்ன கொழுக்கட்டையா? முடியும் முடியாதுன்னு சொல்லிட்டுப் போகவேண்டியது தானே?''

பதிலில்லை.

''என்னடி ஆச்சு உனக்கு?....''

அம்மாவே அடுக்களையைத் தாண்டி நடுக்கூடம் வந்தாள்.

மணிமேகலை குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள்.

அம்மாவுக்குப் பதைபதைப்பு.

''மேகலை! ஏன் அழுவறே? அரைச்சுக் கொடுக்க முடியுமான்னு தானே கேட்டேன்? வேற உன்னை எதுவும் சொன்னேனா?...''

அழுகை இன்னும் அதிகமாயிற்று.

''என் கண்ணில்ல! வெசயத்தைச் சொல்லு. என்ன செய்யுது உனக்கு?...''

நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள். கழுத்துப் புறத்தைத் தொட்டுப் பார்த்தாள். ஆதரவோடு பாசம் மிக அவளைத் தன்னுடன் சேர்த்தணைத்துக் கொண்டாள். அடர்ந்த கூந்தலைப் பரிவுடன் கோதிவிட்டாள்.

''ராஜாத்தி! என் செல்லம்!.... என்னம்மா செய்யுது? வாயைத் தொறந்து சொல்லேன்....''

அவள் அப்படிக் கேட்டதும். ''அவ என்ன சொல்லுறது? நானே சொல்றேன். பரீட்சை ரிசல்ட் வந்



திட்டுது. அவ நம்பரை மட்டும் காணும். அவளோட கூடப் படிச்சவங்கள்லாம் பாஸ் செஞ்சிட்டாங்க....'' என்று ஆவேசமாகச் சொல்லிக்கொண்டே உள்ளே வந்தான் மணிமேகலையின் அண்ணன்.

''உனக்கு எப்படிடா தெரியும்?''

''பத்திரிகை ஆபீஸ்ல என் சினேகிதன் ஒருத்தன் இருக்கான். போன் செஞ்சு கேட்டேன். உன் தங்கச்சியை அக்டோபருக்கு முயற்சி பண்ணச் சொல்லுடான்னிட்டான்!....''

அவனது குரலில் இருந்த நையாண்டி மணிமேகலையின் அழுகையை இன்னும் உச்சத்திற்குக் கொண்டு சென்றது.

''ஒழுங்காப் படிச்சாதானே? பாடப் புத்தகத்துக்குள்ள கதைப் புத்தகத்தை ஒளிச்சுவச்சுப் படிச்சா இப்படித்தான் ஆவும். அதான் ரிசல்ட்டும் வெறும் கதையாப் போயிட்டுது....''

அவளுடைய துயரத்தை அதிகப் படுத்திவிட்ட நிறைவோடும் பெருமிதத்தோடும் அவன் அந்த இடத்தை விட்டு அகன்றான்.

''போனாப்போகுது. விடு. நல்லாப்படிச்சு அடுத்ததடவை பாசாகி விடலாம்,'' என்று சொல்லி அவளைத் தேற்றினாள் அம்மா.

தாயுள்ளத்தின் தனிச் சிறப்பே அதுதானே?

அசைபோடுங்கள்

* விதியை மதியால் வெல்லலாம் என்பார்கள். அப்படியே வென்றாலும் அதுவும் விதிதான்!

— சங்கராச்சாரியார்.

* உண்மைக்காக எதையும் துறக்கலாம், ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறத்தல் ஆகாது.

— விவேகானந்தர்.

* தோல்வி எப்பொழுது வருகிறது? தோல்வி அடைந்து விடுவோமோ என்று எண்ணிய பொழுதில்தான்.

— தமிழ்வாணன்.

தொகுப்பு: எஸ். ராமமோகன், ஈரோடு — 10.



இரவு எட்டுமணியளவில் அப்பா வந்தார்.

அவர் கையில் ஒரு பெரிய பொட்டலம்!

உள்ளே வந்தவர், ''மணிமேகலை எங்கே?...'' என்றுதான் முதலில் கேட்டார்.

''பரீட்சையில தவறிட்ட சோகத்துல உள்ளே படுத்திட்டிருக்கு. அவ அழுகையை நிறுத்தறதுக்குள்ள நான் பட்டபாடு... அப்பப்பா...'' என்று ஆரம்பித்தாள் அம்மா.

''பரீட்சையில தவறிட்டாளா? யார் சொன்னது?....''

மணிமேகலையின் தாய் அவரை வியப்போடு பார்த்தாள். ''என்ன சொல்றீங்க?''


''அவ பாஸ் பண்ணிட்டா! அதுக்காகத்தானே ஸ்வீட் வாங்கிட்டு வந்திருக்கேன்?....''

''பின்னே, அவ பரீட்சையில தேறலேன்னிட்டு சிவக்கொழுந்து சொன்னானே! பத்திரிகை ஆபீசுக்குப் போன் செஞ்சு தெரிஞ்சுக்கிட்டானாம்....''

''அவளை வெறுப்பேத்தறதுக்காக அப்படிச் சொல்லியிருப்பான். முதலில் அவளைக் கூப்பிடு....''

படுத்திருந்த மணிமேகலையைப் பரிவுடன் எழுப்பி அணைத்தபடி வெளியில் வந்தாள் அம்மா.

''மேகலை! இந்தா முதல்ல



இந்தப் பொட்டலத்தைப் பிரிச்சு எங்களுக்கெல்லாம் ஸ்வீட் கொடு....''

சிரித்தபடி சொன்ன அப்பாவைப் பார்த்தாள் மணிமேகலை.

ஓர் அவதாரம் போல் அண்ணன் சிவக்கொழுந்து அங்கே தொப்பென்று வந்து குதித்தான்.

''அம்மா! நான் பத்திரிகை ஆபீசுக்குப் போன் செய்யவும் இல்லே. அங்கே எனக்குத் தெரிஞ்சவங்க யாரும் இல்லே. அவளுக்கு அவ திறமையிலேயே நம்பிக்கையில்லே. ஒழுங்காப் படிச்சு நல்லபடி எழுதியிருந்தால், தான் நிச்சயம் தேறிடுவோம்னு அவளுக்குத் தெரியும். ஆனா அவ எங்கே படிச்சா? கதைப் புத்தகங்கள் பொழுதுபோக்குக்காகவும், அறிவு வளர்ச்சிக்காகவும் படிக்கறதுல தப்பில்லே. பாடப் புத்தகங்களை அவ தொட்ட நேரம் ரொம்பக் குறைவு. நல்ல வேளையா பாஸ் மார்க் வாங்கித் தேறிட்டா'. நல்லாப் படிச்சிருந்தா, இன்னைக்கு ரிசல்ட் வருதுன்ன உடனே முகத்துல சுரத்தில்லாம போயிருக்குமா? அவளுக்கே அவமேல நம்பிக்கையில்லே. இதுக்கு என்ன காரணம்? அவ பாடங்களைப் படிச்ச நேரம் ரொம்பக் குறைவு...'' என்றவன் மணிமேகலையைப் பார்த்துச் சொன்னான்:

''இந்தா! உனக்கு என்னோட ஸ்பெஷல் அன்பளிப்பு. நீ பாஸ் பண்ணிடுவே என்கிற நம்பிக்கையில முன்கூட்டியே வாங்கி வந்திட்டேன்.....''

ஒரு விலையுயர்ந்த பேனாவை அவளுக்குப் பரிசாக அளித்தான்.

''இனிமே அக்கறையா படிச்சு முதல் மாணவியா வர முயற்சிக்கணும். ப்ளஸ்டூவுல உன் பெயரும் போட்டோவும் பேப்பர்ல வரணும் புரியுதா?....''

''இனிமே ஒழுங்காப் படிக்கறேண்ணா.''

இதுநாள் வரையிலான கவனக் குறைவும், மெத்தனப் போக்கும் அன்றைக்கு முழுதும் தன்னை மிகவும் வாட்டி வதைத்துவிட்டதை உணர்ந்து அந்தக் கணத்திலேயே திருந்தி விட்டவளாக, இவ்வளவு நேரமும் முகத்தில் விரவிக் கிடந்த சோகம் மறைந்து இளநகை அரும்ப அண்ணன் தந்த பரிசைப் பெற்றுக் கொண்டாள் மணிமேகலை.

எந்த ஒரு காரியத்திலும் நம்பிக்கையும், முழு ஈடுபாடும் இருந்தால் ஐயப்பாட்டிற்கோ, சஞ்சலத்திற்கோ இடமில்லை; வெற்றி நிச்சயம் என்பது அவளுக்கு இப்போது முற்றிலுமாகப் புரிந்துவிட்டிருந்தது.



முன்னொரு காலத்தில்.

பறவைகளுக்குள் அழகுப் போட்டி ஒன்றை நடத்தி, வெற்றி பெறும் பறவைக்குப் 'பறவை திரு' பட்டம் கொடுப்பது என்று தீர்மானிக்கப் பட்டது. அந்த அழகுப் போட்டியின் மூலம் ஒருமைப்பாட்டினை வலியுறுத்துதலை ஒரு நோக்கமாகக் கொள்ளப்பட்டது.

சரி!

இந்த அழகுப் போட்டிக்கு யாரை நடுவராக நியமிப்பது என்று காட்டு விலங்களுக்குள் ஒரு பெரிய 'போட்டா போட்டி' நடந்தது.

முடிவாக, சித்திர அறிவும் இசைத் திறனும் கவிதை உணர்ச்சியும் மகிழ்ச்சி உள்ளமும் கொண்ட மனிதனையே நடுவராக நியமிப்பது என்று ஏக மனதாகக் காட்டு விலங்குகள் தீர்மானித்தன. மனிதனும் ஒப்புக் கொண்டான்.

காட்டு ராஜா சிங்கமும் விலங்கின மந்திரி யானையும் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டனர். நாட்டு மக்களுக்கும் அழைப்புகள் அனுப்பப் பட்டன.

யாரோ ஒரு பல்லவ அரசன் கட்டிய காட்டுக் கோயிலின் ஆயிரங் கால் மண்டபத்தில் போட்டியை நடத்துவது என்றும் முடிவாகியது. புலிகள் போட்டிகளை முன்னின்று நடத்தின.

குறிப்பிட்ட நாளில், ஆயிரங் கால் மண்டபம் போட்டிப் பறவைகளால் நிரம்பி வழிந்தது. குரங்கு ஒன்று, எங்கிருந்தோ தூக்கிக் கொண்டு வந்த காமெராவுடன் பெரிய போட்டோகிராஃபர் போல இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தது.

ஒரு பக்கம் —

அழகுப் போட்டியில் கலந்து கொள்ளும் காகம் ஸ்டைலாக, 'கூலிங் கிளாஸ்' அணிந்து கொண்டு மற்றப் பறவைகளைத் தலை சாய்த்துப் பார்த்துக் கொண்டிருந்தது. அதைச் சுற்றி மற்றக் காகங்கள் ஏதேதோ பேசின, கேட்டன. ஆனால், ''கா... கா'' என்கிற இரைச்சல்தான் ஓங்கிக் கேட்டது.

பத்திரிகை நிருபரான கரடி

அடவியிலே ஓர் அழகுப் போட்டி



அண்ணா அந்தக் காகத்தைப் பேட்டி கண்டார்.

"இந்தப் போட்டியைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?"

"என்னைப் பொறுத்தவரையில் இப் போட்டியை எப்பொழுதோ நடத்தி முடித்திருக்க வேண்டும். நல்ல வேளை, இப்பொழுதாவது நடத்திட முன்வந்தார்களே! எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி!"

காகத்தின் கர்வத்தைப் பார்த்துக் கரடி அண்ணா தேகத்தைக் குலுக்கிக் கொண்டார். அதே குலுக்கலில் அடுத்த கேள்வியைத் தொடுத்தார்.

"போட்டியில் யாருக்குப் பரிசு கிடைக்கும்?"

"கண்டிப்பாக அழகில் சிறந்தவருக்குத்தான் பரிசு கிடைக்கும்!"

விடுவாரா கரடி? அடுத்த கேள்வியைச் சற்று விளக்கமாகவே கேட்டார். "போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள்?"

"சந்தேகமென்ன? எங்கள் இனத்தவர்தான். காகத்தின் ராஜ பார்வை யாருக்கு வரும்? பளபளக்கும் கருமை நிறத்திற்கு ஒரு தனிக் கவர்ச்சி உண்டு."

ஒரு கோடியில் —

பச்சைக் கிளி தனக்குத்தான் பரிசு என்று நிச்சயமாக நம்பியது. மனிதன் அழகாக இருக்கும் எதையுமே, 'கிளி கொஞ்சுகிறது,' என்றுதானே சொல்கிறான்! கிளி திரும்பத் திரும்ப அதையே சொல்லிக் கொண்டு பறந்தது. அதன் நண்பர்கள், "பஞ்சவர்ணக் கிளி கூடப் போட்டியில் கலந்து கொள்கிறதே! ஒருவேளை..." என்று இழுத்தனர்.

"அதனாலென்ன, அதனுடைய காட்டமான வண்ணங்கள் கண்களுக்கு எரிச்சலூட்டுமே!" என்று பதில் சொன்னது, பச்சைக் கிளி.

அதே சமயம் மைனாவோ, "பச்சைக் கிளியின் வளைந்த மூக்கு, அதற்கு ஒரு துரதிர்ஷ்டம். எப்படியும் வெற்றி நமக்குத்தான்," என்று மனக்கூடு கட்டியது.

மற்றொரு புறத்தில் —


"மயிலின் தோகை எவ்வளவு அழகாக இருக்கிறது! ஆனால் பாவம், அந்தக் கால்கள்தான்... பரிசு பெறுவதைத் தடுக்கின்றன," என்று சில பறவைகள் பேசிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகியது.

போட்டியில் பங்கேற்கும் பறவைகள் வரிசையாக மேடைக்கு வந்தன. சிறிது தூரம் சொகுசாக நடந்து காட்டின. சற்று உயரம் அழகாக பறந்து காட்டின.

மயில், புறா, வானம்பாடி, குயில், சிட்டுக் குருவி, மைனா, காகம், கோழி, பருந்து, கிளி, பஞ்சவர்ணக் கிளி, கொக்கு என்று எல்லாவிதமான பறவைகளும் போட்டியில் கலந்து கொண்டன. போட்டி பகலில் நடந்ததால் ஆந்தை மட்டும் கலந்து கொள்ள

மாயன்



தந்தை: ஏண்டா... சைக்கிள் உயரம் கூட இல்லே... நீயெல்லாம் சைக்கிள் ஓட்ட ஆரம்பிச்சிட்டே...?

மகன்: பஸ் டிரைவர் என்ன பஸ் உயரமா இருக்கிறாரு?

— திலக்மன்.

வில்லை.

குரங்கு அவ்வப்போது தன் மனம் போனபடி 'கிளிக்' செய்தது.

ஒருவழியாகப் போட்டிகள் முடிவுற்றன.

போட்டியின் முடிவைப் பற்றி மனிதன் யானையையும் சிங்கத்தையும் கலந்தாலோசித்தான். குரங்கும் கரடியும் கூடத் தங்கள் கருத்துக்களைக் கூறின.

புலி ஒன்று மைக் அருகில் வந்து, ''இப்பொழுது நடுவர் திருவாளர் மனிதன் அவர்கள் போட்டியின் முடிவை அறிவிப்பார்,'' என்று உறுமி விட்டுச் சென்றது.

மனிதன் எழுந்து மைக் அருகில் நின்றான். முதலில் போட்டியில் கலந்து கொண்ட பறவைகளின் ஆர்வத்தைச் சம்பிரதாயமாகப் பாராட்டினான். இதுபோன்ற பரிசுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடைபெற வேண்டும் என்றும் சொன்னான். அது மட்டுமன்று. இனி, இப்போட்டிகள் காட்டில் மட்டுமின்றி நாட்டில் குறிப்பாகக் கிராமங்களில் நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான்.

பிறகு, போட்டிப் பறவைகளின் கம்பீரம், உறுதியான தன்மை, நீண்டு உருண்ட தலை, தடித்த அலகுகள், அழகான சிறகுகள், விசாலமான கண்கள் ஆகியவை பற்றியெல்லாம் விளக்கிப் பேசினான்.

கடைசியாக, பரிசு பெறும் பறவையைக் குறிப்பிட வந்தான்.

அப்பொழுது அந்த ஆயிரங்கால் மண்டபம் எங்கும் அமைதி. அனைவரின் நெஞ்சிலும் பெரிய ஆவல்! 'யாருக்கோ பரிசு யாருக்கோ?' என்று ஒவ்வொருவரின் நெஞ்சிலும் துடிப்பு.

''எனவே, நண்பர்களே, அழகாக வாலை விரித்துச் சிறிது முன்பக்கம் வளைத்தும் கழுத்தைப் பின்புறம் சாய்த்துக் கொண்டும் அலகு மேல் அலகு வைத்து அலங்கார நடை நடந்தும், சிறகு விரித்துச் சிங்காரமாக பறந்து காட்டியும் அடக்கத்தில் அழகைக் கூட்டிக் கொண்டு நம்மை வியக்க வைத்துப் பரிசைத் தட்டிக் கொண்ட பறவை...''

இந்தச் சமயத்தில் எல்லாப் பறவைகளின் நெஞ்சிலும் 'பக் பக்' என்று அடித்துக் கொண்டன.

''பரிசு பெறும் அந்தப் பறவை, மணிப்புறா!'' என்று அறிவித்தான் மனிதன்.

மண்டபம் முழுவதும் பறவைகள் சிறகடித்தும் கத்தியும் கூவியும் மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்பின.

ஆனால், அங்கும் பொறாமை உணர்ச்சி வெளிப்படாமலில்லை. தன் வெற்றியில் அபார நம்பிக்கை கொண்டிருந்த காகம், ''கா... கா...'' என்று கூட்டம் கூட்டி இரைச்சலிட்டது.


மயில், ''கூ... கூ...'' என்று கர்ணகடூரமாகக் கத்திக் கொண்டேயிருந்தது.

ஆத்திரம் கொண்ட கிளியும் மைனாவும் மனிதனைக் கொத்திட முயற்சித்தன.

ஆனால், பரிசு பெற்ற மணிப்புறா இன்றும் தேவாலயங்களிலும் மாதா கோயில்களிலும் மசூதிகளிலும் தன் அழகையும் ஒருமைப்பாட்டினையும் விளக்கும் நல் உதாரணமாகப் பறந்து திரிகிறது.

மனிதனின் தீர்ப்பு மகத்தானது.

குறுக்கெழுத்துப் புதிர்



இங்கு எண்கள் குறிப்பிட்ட கட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் கீழ் அதே எண்களுக்கான துப்புக்களும் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தத் துப்புக்களை வைத்துக் கொண்டு சரியான சொற்களைக் கண்டுபிடித்து இடமிருந்து வலமாகவோ, மேலிருந்து கீழாகவோ எழுத வேண்டும். சொற்களிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையும் அடைப்பானுக்குள் கொடுக்கப்பட்டுள்ளது. புதிரின் சரியான விடை பக்கம் 68—இல் காண்க.


இடமிருந்து வலம்:


1. இது தமிழர்க்கெல்லாம் பொதுவானது (3).
4. பெண்ணின் கணவன் (5).
6. பிறவி (4).
7. தன்பின் வந்தவன் (3)
8. டூத்பேஸ்ட் அல்ல (4)
9. வியாபாரிகளின் குறிக்கோள் (3).
11. வயதானவர் (3).
12. அடித்தால் இது ஓசை எழுப்பும் (5).
14. இது போனால் தலைகுனிந்துவிடும் (3)
15. தண்ணீரில் மூழ்கி எழு (2)
16. கஷ்டம் (4).
18. திருமண ஊர்வலம் இத்துடன்தான் போகும் (5).
21. கல்வி நிறுவனத்தின் அதிபதி (8).
23. இதை ரங்கோலி என்றும் சொல்வார்கள். (3).
24. மைதானம் (4).

மேலிருந்து கீழ்:

2. இது இடியை முந்தும் (4).
3. மனிதர்கள் ஆடாத ஆட்டம் (7).
4. நிலாவாவது, புத்தியாவது? (2).
5. குரங்கின் சந்ததியா? (4).
6. உடனே, தாமதியாமல் (3).
8. பள்ளி இறுதியாண்டு (5).
10. மரத்தால் ஆன (2).
13. ஆக்களை மேய விடுதல் (7).
14. மாவின், மாமரத்தின் (எனும் முன்னொட்டு) (2).
15. குளத்தின் (எனும் முன்னொட்டு) (2).
17. குழப்பமோ, பயமோ ஏற்பட்டால் இது இருக்கும் (5).
20. நாட்டுச் சாராயம் (20).
22. ஆஸ்தியுடையோர் அரகக்குச் செலுத்துவது. ஜீப்ராவின் உடலிலும் உண்டு. (2).

தயாரிப்பு: பீலிஜே


அந்தச் சேவலை ஏண்டா கல்லால அடிக்கிறே?
சேவல் முட்டை இடாதுன்னு அஞ்சு ரூபா பந்தயம் கட்டினேன். முட்டை இட்டுத் தொலைச்சிட்டுது!
டாக்டர் என்னுடைய வயித்துக்குள்ளே கடாமுடானு இடி இடிக்கிற மாதிரி சத்தம் கேட்குது!
என்ன சாப்பிட்டே?
இடியாப்பம்.
அவருக்கு வெள்ளை மனசு!
அவர் என்ன செய்யறார்?
லாண்டரி கடை நடத்திட்டு இருக்கார்!
உனக்கு ஞாபகமறதி அதிகமா? ரயிலை நிறுத்திட்டு ஏறி, உட்காராம நின்னுக்கிட்டு இருக்கியே?
உனக்குத் தான் ஞாபக மறதி அதிகம். இது ரயில் இல்லை, பஸ்!
அவன் என்னிடம் வாலை ஆட்டறான்.
கடிக்க வாறானே!
வாலை ஒட்ட வெட்டிட வேண்டியது தானே?
முட்டையை ரொம்பச் சின்னதா போட்டது ரொம்பத் தப்பாய் போச்சு.
ஏன்?
கோழிமுட்டைனு சொல்றதுக்குப் பதிலா கோலி முட்டைன்னு சொல்லி அந்தப் பசங்க கிண்டல் பண்றாங்க!
கருத்து: கடலூர் கன்னியப்பன்



வைரச் சுரங்கத்துக்கு ஒரு தங்கச்சாவி!





சில காலம் சென்று.... பகையரசன் படை எடுத்து வருவதாகச் செய்தி வர...
யுத்தம் எப்படி முடியுமோ.. .. இவனைச் சிறந்த அரசனாக வளர்க்க வேண்டியது உன் பொறுப்பு.
மகனிடம் மன்னன் விடை பெற்றான்...
வாளைச் சுழற்றினால் போதாது; வாய்மையுடன் விளங்க வேண்டும்...
யுத்தத்தில் மன்னன் வென்ற போதிலும்...
பலமான காயங்களுடன் திரும்பியிருக்கிறார்; வைத்தியம் செய்து பார்ப்போம்...
மருத்துவர் முயற்சி பலிக்கவில்லை; மரணத் தறுவாயில்....
ஜயின்! முகஸ்துதி செய்வோரை நம்பாதே. உண்மை தெரியாமல் தண்டனை தராதே! இன்னும்...
தந்தை காலமானதும் ஜயின் அலஸ்னம் அரியணை ஏறினான்...
மகனே! உன் தந்தையின் அறிவுரைகளை மறக்காதே...


தாய் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் ஜயின் புரிந்து கொள்ளவில்லை... நாளடைவில்...
நான்தானே அரசன்! அதனால் நான் சொன்னபடி எல்லோரும் கேட்டு நடக்கிறார்கள்...
காலம் சென்றது... ஜயின் கர்வமும் பெருமையும் கொண்டான்...
அரசே! மழையின்றி பூமி வறண்டிருக்கிறது...
அதைப் பற்றி என்ன? நான் குளிப்பதற்கு உடனே ஒரு நீச்சல் குளம் கட்ட வேண்டும்...
கேளிக்கைகளில் அரண்மனைப் பொக்கிஷத்தைக் கரைத்தான்...
சில தினங்கள் சென்று...
நீச்சல் குளம் கட்டியாச்சா?
தயார்தான், ஆனால் தண்ணீருக்குப் பஞ்சம்....
நூறு காத தூரத்திலிருந்து ஆயிரம் வண்டிகளில் தண்ணீர் கொண்டுவந்து நிரப்புங்கள்!




அவ்வாறே தண்ணீர் வர...
இதென்ன அநியாயம்... குடிக்கத் தண்ணீர் இல்லை; அரசரின் நீச்சல் குளத்துக்கு வண்டி வண்டியாகத் தண்ணீர் போகிறதே...
ஜமீனின் ஆடம்பர விளையாட்டுக்களின் விளைவாக...
அரசே! அரபுக்குதிரைகள் வாங்கியதிலும் நீச்சல் குளம் வெட்டியதிலும் கஜானா காலியாகி விட்டது!
அதனால் என்ன? மக்களிடம் வரி வசூலித்து கஜானாவை நிரப்புங்கள்!
மழையின்றித் தவிக்கும் மக்கள் வரி எப்படி கொடுப்பார்கள்?
அன்றிரவு தன் தாயிடம் பேசினான் ஜமீன்....
அம்மா! கஜானாவோ காலி! மந்திரியோ வரி விதிக்கக் கூடாது என்கிறார்....
ஜமீன்! உன் மக்கள் ஏழைகளாக இருப்பதால் தான் நீயும் ஏழை ராஜாவாக இருக்கிறாய்! மக்களின் மேன்மைக்காகப் பாடுபடு!


அன்றிரவு ஜயின் அலஸ்னம் கனவில்...
ஜயின், நீ சிறந்த அரசனாக விரும்பினால் கெய்ரோ சென்று வா...
காலையில்...
அம்மா! குடிமக்கள் என்னை நேசிக்கும் விதமாக நான் ஏதாவது செய்ய வேண்டும்... போய் வருகிறேன்!
சரி.
கெய்ரோ நகரில்...
நான் கனவில் கண்ட பெரியவரை எங்கே தேடுவது...?
களைப்பினால் ஒரு மசூதியின் தோட்டத்தில் கண்ணயர்ந்தான்...
கனவில் மீண்டும் முதியவர் தோன்றி...
இந்த மசூதியின் பின் சுவர் ஓரமாக ஓர் உயரமான கல்... அதன் பின்னால் பார்!


ஜயின் கனவில் கூறப்பட்ட கல்லை அடைந்து அசைத்தான்.
அட! இதன் பின்னால் ஒரு தங்கச்சாவி இருக்கிறதே!
சில நாட்கள் கெய்ரோவில் இருந்து விட்டு ஊர் திரும்பினான்...
வா மகனே!... கெய்ரோவில் என்ன கண்டாய்?
என் கனவில் மீண்டும் அந்தப் பெரியவர் வந்தார்...
இந்தத் தங்கச்சாவி இருக்குமிடத்தைச் சொன்னார்... ஆனால் இதன் மர்மம் புரியவில்லை!
கனவில் வந்தவர் உன் தந்தையாகத் தான் இருக்க வேண்டும். அவரைப் பிரார்த்தனை செய்!



ஜயின் அவஸ்னம் காலம் சென்ற தன் தந்தையின் அறைக்குள் சென்று...
தந்தையே, எனக்கு வழி காட்டுங்கள்...
பிரார்த்தனை முடிந்து ஜயின் எழுந்த போது ஜன்னல் வழியே சூரிய ஒளி பாய...
அட! இந்தச் சுவரில் ஏதோ கதவுபோல் தெரிகிறதே...
சுவரோடு சுவராக உள்ள கதவு... இதோ சாவித் துவாரம்...
தங்கச் சாவி பொருந்தியது. ஜயின் கதவைத் திறந்தான்.
இப்படி ஒரு நிலவறை இருப்பது யாருக்குமே தெரியாதே...
சுரங்க வழியாகச் சென்றான் ஜயின்....


அதன் முடிவில்...
ஆஹா! இதுவல்லவா செல்வம்!
அன்னையை அழைத்து வந்து காட்டினான் ஜயின்...
எட்டு வைரமிழைத்த சிலைகள்... ஆனால் அந்த ஒன்பதாவது பீடத்தில் சிலை ஏதுமில்லையே?
இந்தப்பீடத்தில் ஏதோ எழுதியிருக்கிறது...
உன் தந்தையின் கையெழுத்துதான்!
ஜயின் அதைப் படித்தான்...
மகனே! இந்தச் செல்வத்தை மேலும் விருத்தி செய்யும் விதமாக மக்கள் நலனுக்குப் பயன் படுத்து...
கெய்ரோவில் என் நண்பன் முபாரக் இருக்கிறான்...
...ஒன்பதாவது பீடத்தில் வைக்க ஒரு சிலை இருக்குமிடத்தை முபாரக் காட்டுவான்... அம்மா! என் தந்தையின் கட்டளைப்படி...
மறுபடி கெய்ரோ சென்று வா...



ஜயின் உற்சாகத்தோடு கெய்ரோவுக்கு விரைந்தான்...
யாரங்கே?
அஹமத் முபாரக்கைச் சந்திக்க வந்திருக்கிறேன்...
அஹமத் முபாரக் மாளிகையின் உள்ளே....
நான் பல்ஸாரா நாட்டு மன்னன்...
அதை எப்படி நான் நம்புவது?
ஜயின் தங்கச் சாவியை எடுத்துக் காட்டியதும்...
ஜயின்! உன் தந்தை என் நண்பர்.. அவருக்காக ஒன்பதாவது சிலையை உனக்குப் பெற்றுத் தருகிறேன்... ஆனால்...
..நாம் பல ஆபத்துக்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்...
அதற்கு நான் தயாராயிருக்கிறேன்.


ஜயினுக்கு ஒரு பெரிய விருந்து அளித்தான் மூபாரக்...
இன்று விருந்து, கேளிக்கை... நாளை முதல் வீர சாகசம்!
மறு நாள் அவர்கள் ஓர் ஏரிக்கரையை அடைந்தனர்....
ஜயின்! இந்த ஏரியை நாம் கடக்க வேண்டும். என்ன நடந்தாலும் வாய் திறக்காதே! ஒலி எழுப்பாதே! பேசினால் மூழ்கி விடுவோம்!
திடீரென்று... ஒரு படகு தோன்றி... விசித்திர படகோட்டி...
இருவரும் படகில் ஏரியை கடந்தனர்... மௌனம் காத்தனர்...
அக்கரையில் இறங்கினர்... படகு திரும்பிச் சென்று மறைந்தது...
இனி நாம் பேசலாம்... என் நண்பனான ஒரு தேவதையின் நாடு இது... ஆனாலும் அந்நியனாகிய நீ....


அப்போது இரு ராக்ஷஸர்கள் தோன்றினர்...
...இந்தக் காவலர்களை வென்றால் தான் மேலே செல்ல முடியும்!
ஜுபின் அவனும் வீராவேசமாகப் போரிட்டான்.
மாயா ராக்ஷஸர்கள் இறந்து வீழ்ந்தனர்...
ஜுபின்! நீ தைரியமாகப் போரிட்டாய். வெற்றிக்கு அடித்தளமே துணிச்சல்தான். ...வா, மேலே செல்வோம்.
ஒரு முள் காடு எதிர்ப்பட்டது...
வெட்டி வீழ்த்தி வழி ஏற்படுத்துவேன்!
வேண்டாம்! ஒன்று வெட்ட, பத்தாக முளைக்கும்!
முபாரக் ஒரு கம்பளத்தை விரித்து...
இதில் அமர்ந்து கொள்வோம்!




முன் காடு மீதாக மந்திரக் கம்பளம் பறந்து சென்றது...
காட்டைக் கடந்து தரை இறங்கியது...
அப்போது பயங்கர இடி யோசைக்கிடையே...
ஒரு கந்தர்வன் தோன்றினான்...
ஜயின் அலஸ்னாம்! வருக! வருக! நான் உன் தந்தைக்கு எட்டு வைரச் சிலைகள் தந்தேன்...
ஒன்பதாவது சிலையைத் தேடி நான் வந்திருக்கிறேன்!...
உன் தந்தையைப் போல நீயும் வீரனாக மட்டுமின்றி நல்லவனாகவும் இருந்தால் கிடைக்கும்...
அப்படியே இருப்பேன். சத்தியம் செய்கிறேன்!...
அப்படியானால் ஒன்று செய்! கெட்ட எண்ணமே தோன்றாத, கடுமையாகப் பேசி அறியாத ஒரு பேரழகியைக் கண்டு பிடித்து அழைத்து வா! அவளை என் மனைவிக்குத் தாதியாகக் கொடு! ஒன்பதாவது சிலை உனக்குக் கிடைக்கும்!



அழகியைக் கண்டு
பிடித்து விடலாம்;
ஆனால் அவள் குணவதியா
என்று எப்படி அறிவது?
இந்தா, இந்தக் கண்ணாடியில் எந்தப்
பெண் முகம் தெரிகிறதோ, அவளே
நல்லவள்!
பேரழகியே!
நான் கண்ணாடி
வியாபாரி...
இதில் உங்கள்
சுந்தர முகத்தைப்
பார்த்து வாங்கிக்
கொள்ளுங்கள்...
ஜயின் அலஸ்னம்
கெய்ரோ சென்று,
குணவதியான
அழகியைத் தேடினான்...
விளையாடுகிறாயா? இதில்
என் முகமே தெரியலையே!
நீ மோசக்காரன்!...
..யாரங்கே!...
கண்ணாடியைப் பெற்றுக் கொண்டு
'தப்பினோம் பிழைத்தோம்' என்று
அங்கிருந்து அகன்றான் ஜயின்...
நாட்கள் சென்றன...
கெய்ரோ முழுதும் தேடியும்
பயனில்லை; வேறு பல ஊர்களிலும்
ஏமாற்றம்... இந்த பாக்தாத் நகரத்
திலாவது நான் தேடி வந்தவள்
அகப்படுவாளா?...



களைத்துப் போய் ஜயின் தாக சாந்தி செய்ய...
யாரப்பா நீ...? உன் முகத்தில் ராஜ களை இருக்கிறதே...! மூட்டை தூக்குகிறாய்...?
நான் பல்ஸாரா நாட்டு மன்னன்... குணவதியான அழகியைத் தேடி அலைகிறேன்...
அப்படிப்பட்ட அபூர்வமான ஒரு பெண் இருக்கத்தான் செய்கிறாள்! அழகிலும் பண்பிலும் ஜுபைதாவுக்கு நிகர் இல்லை. பேரறிஞர் காஸிமின் மகள்...
காஸிம் வரவேற்றான்...
பல்ஸாரா நாட்டு மன்னர் என் குடிலுக்கு வந்தது என் பாக்கியம். என் மகள் ஜுபைதா...
ஜயின் தன்னிடமிருந்த கண்ணாடியைத் தந்து அவளைப் பரிசோதித்தான்...
ஆ! கண்ணாடியில் இவள் முகம் தெரிகிறதே! நான் பட்ட கஷ்டம் வீண் போகவில்லை...


ஓரிரு தினங்களில்...
அரசனே! என் மகள் ஜுபைதாவைத் தாங்கள் மனைவியாக ஏற்றுக் கொள்ள வேண்டும்...
நான் பாக்கியசாலி!
ஜுபைதாவை மணந்துகொண்டு சில காலம் ஆனந்தமாக இருந்தான் ஜயின்...
அன்பே...
ஒரு நாள்...
காஸிம்! நான் என் நாட்டுக்குத் திரும்ப வேண்டும்...
என் மகளைப் பிரிவது எனக்குத் துயரம் தான்... ஆனாலும்... சந்தோஷமாகப் போய் வாருங்கள்...
ஜுபைதாவை அழைத்துக்கொண்டு ஜயின் கந்தர்வனுடைய நாட்டை அடைந்தான்...
அன்பே! இங்கு கந்தர்வ ராஜனுக்கு நான் வாக்களித்துவிட்டு வந்திருக்கிறேன்....
ஐயோ! பணிப்பெண்ணாக நான் வாழ்வது பெரிதில்லை.... ...உங்களைப் பிரிய வேண்டுமே...
அப்போது கந்தர்வன் தோன்ற...
இதோ உங்கள் மனைவிக்குத் தாதி...
உன் மனைவியை, பேரழகியைப் பிரியச் சம்மதித்தாய். சொன்னசொல் தவறாத நேர்மையாளன், உழைப்பாளி என்று நிரூபித்தாய்... நீ சிறந்த அரசனாக இனி விளங்குவாய்!


நீங்கள் எனக்குத் தருவதாக வாக்களித்த ஒன்பதாவது சிலை...?
நீ அரண்மனை திரும்பியதும் நிலவறைக்குச் சென்று பார்!
நாடு திரும்பி தாயை வணங்கினான் ஜயின்...
வாலிபனாகச் சென்று, அனுபவ அறிவுடன் அரசனாகத் திரும்பியிருக்கிறாய்....
அம்மா! எனக்கு நிலவறைக்குள் போகவே பிடிக்கவில்லை... ஜுபைதாவை இழந்த பிறகு ஒன்பதாவது சிலையை அடைந்து நான் என்ன பயன்?
எதற்கும் போய்ப் பார்க்கலாம் வா!
நிலவறையில்...
அட! ஒன்பதாவது சிலை ஜுபைதாவைப் போலவே இருக்கிறதே... புன்னகை புரிகிறதே!.... அசைகிறதே...!
பீடத்திலிருந்து இறங்கிய ஜுபைதா அரசியை வணங்க...
நாட்டு மக்கள் மெச்சும் பேரரசனாகவும் அரசியாகவும் நீடூழி வாழுங்கள்!



என்ன, முழிக்கறீங்க?
① பூமியின் முதல் ஸேட்டிலைட் எது?
② குதிரையில் போவதை நாம் 'சவாரி' என்கிறோம். எந்தச் சிலர் தங்கள் வாடிக்கையாளரைச் சவாரி என்கிறார்கள்?
③ உலகத்திலேயே மிக்க பலசாலி 'ட்ராபிக் போலீஸ் மேன்'தான். எப்படி?
④ எப்போதும் 'பொருள்' எதில் கிடைக்கும்?
⑤ 'ற்' என்ற எழுத்துக்கும் திலகத்துக்கும் ஒரு ஒற்றுமை இருக்கிறது. என்ன அது?
⑥ நாம் பார்க்க முடியாதது. ஆனால் மாறிக் கொண்டே இருக்கும். அது எது?
விடைகள் 61— ஆம் பக்கம்.

இந்த உரையாடலில் என்ன விசேஷம்?



''அம்மா, இன்னிக்கு ஸ்கூல்ல ஒரே தமாஷ்மா,'' என்றான் அமரேஷ்.

''அப்படி என்னடா தமாஷ்?'' அம்மா லேகா கோபாலகிருஷ்ணன் கேட்டார்.

''அண்ணா, அண்ணா, எனக்கும் சொல்லுண்ணா,'' என்று கேட்டபடி அங்கு வந்து சேர்ந்தாள் தங்கை நீடா.

''இன்னிக்குக் கிளாஸ்ல என் பக்கத்துப் பையன் பென்சில் காணோம்னு...'' அமரேஷை இடைமறித்தார் லேகா. ''இரு, இரு. அப்பா வர்றா மாதிரி இருக்கு. அவரும் வரட்டும்; அவருக்கும் சொல்லு... அவர் ரொம்பவும் என்ஜாய் பண்ணுவார்.''

''ஆமாண்ணா. அப்பாதான் வர்றார். ஸ்கூட்டர் சத்தம் கேட்கறது,'' என்று கூறிய நீடா, கதவைத் திறந்து வைக்க, இரண்டொரு நிமிடங்களில் அப்பா கோபாலகிருஷ்ணன் வீட்டிற்குள் நுழைந்தார்.

வந்தவர், மூன்று பேரும் உற்சாகமாக அமர்ந்திருப்பது கண்டு தானும் அவர்களுடன் கலந்து கொண்டார்.

''இன்னிக்கு அவன் கிளாஸிலே என்னமோ வேடிக்கை நடந்ததாம்...'' லேகா கணவருக்கு முன்னுரை கொடுத்தார்.

''சொல்லு, சொல்லு, சொல்லு,'' என்று ஆர்வத்துடன் நெருங்கி வந்து அமர்ந்து கொண்டார் கோபாலகிருஷ்ணன்.

அமரேஷ் அன்று நடந்த சம்பவத்தை நீளமாய் விவரித்தான்.

''என் வகுப்பிலே என் பக்கத்துப் பையன், பென்ஸில் காணோம்னு ஒரே ஆர்ப்பாட்டம் பண்ணிட்டான். புத்தகப் பையிலே, பென்ஸில் பாக்ஸிலே, டெஸ்க் டிராயரிலே, சட்டை, டிராயர் பைகளிலே எல்லா இடத்திலேயும் தேடிப் பார்த்திட்டான். கிடைக்கவேயில்லை. இன்னிக்கு டெஸ்ட் வேறே. டீச்சரும், எங்க எல்லாரையும் தேடச் சொன்னார்.



அவன் நல்லாப் படிக்கற பையன். எல்லாப் பாடத்திலேயும் தொண்ணூறுக்கு மேலே வாங்குவான். டெஸ்ட் எழுதாம டபாய்க்கறதுக்குப் பென்ஸில் தொலைஞ்சிட்டதாக அவன் சொல்றான்னு யாருமே நினைக்கலே. தவறுதலா வேறே யார் பையிலேயாவது பென்ஸில் புகுந்திருக்குமான்னு எல்லாரையும் தேடிப் பார்க்கச் சொன்னார். எல்லாரும் தேடோ, தேடோன்னு தேடினோம்.

''அதுக்குள்ள இன்னொரு பையன், 'என்கிட்ட ரெண்டு பென்ஸில் இருக்கு; ஒண்ணு உனக்குத் தரேன்'னு சொன்னான்.

''தன்னோட பென்ஸில் கிடைக்காத வருத்தத்திலே இந்தப் பையன் தலையைச் சொறிஞ்சிக்கிட்டான். பாருங்க, காது இடுக்கிலிருந்து பென்ஸில் தொப்புனு கீழே விழுது! எல்லாருக்கும் ஒரே சிரிப்பு. கொஞ்ச நேரத்துக்கு முன்னால — வாத்தியார் வர்றதுக்கு முன்னால — ஹோட்டல் சர்வர் மாதிரி ஆக்ட் பண்ணிக் காமிச்சான். அப்ப, காது இடுக்குக்குள்ள பென்சிலைச் சொருகிக்கிட்டு அப்படியே மறந்தும் போயிட்டான்.

''வாத்தியார் அவனைக் கூப்பிட்டு, அடுத்த நாளே முடியை நல்லா ஒட்ட வெட்டிக்கிட்டு வரச் சொல்லிட்டாரு,'' என்று முடித்தான் அமரேஷ்.

''ஆமாம், சர்வர் விளையாட்டு விளையாடினாலும் பென்சில் இருக்கும் இடம் தெரியும்,'' என்றாள் நீடா.

கோபாலகிருஷ்ணன் தம்பதியினர் மனம் நிறைந்து சிரித்தார்கள்.

— இந்த உரையாடலில் என்ன விசேஷம்? சாதாரணமாக ஒவ்வொரு வீட்டிலும் நடப்பதுதானே என்று கேட்கிறீர்களா?

அதுதான் இல்லை. இதிலே விசேஷம் இருக்கிறது.

அமரேஷ், நீடா இருவரும் பள்ளியில் படிக்கும் மாணவர்கள். இருவருக்கும் காது கேட்கும்; வாய் பேசும்.

ஆனால் அவர்களுடைய பெற்றோர் இருவருமே காது கேளாதவர்கள்; வாய் பேசாதவர்கள். அவர்களுக்கு, பள்ளிச் சம்பவத்தைக் கைகள் சைகை மூலமாக அமரேஷ் விவரித்தான். அவர்களும் அதே மாதிரியான சைகை மூலம் பதிலளித்து, தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தினார்கள்.

உண்மை தெரிந்தபோது உங்களைப் போலவே நானும் அசந்து போனேன். தாங்களும் தங்கள் பெற்றோரும் சைகையில் பேசிக் கொண்டதை அமரேஷும், நீடாவும் எனக்கு விளக்கிச் சொன்னார்கள்:

''என் அப்பா மிகச் சிறிய குழந்தையாக இருக்கும்போதே காதும் கேட்காதாம். வாய் பேசவும் முடியாதாம். அவர் வளர்ந்த பிறகு தன்னைப் போலவே உடல்குறையுள்ள பெண்

ணைத்தான் கல்யாணம் செய்து கொள்வது என்று தீர்மானமாக இருந்தார்,'' விவரம் சொன்னான் அமரேஷ்.

''உடல் ஊனமுற்றோருக்கான விளையாட்டுப் போட்டி அகில இந்திய ரீதியில் ஒருமுறை சென்னையில் நடந்தது. அங்கேதான் எங்கள் அம்மாவைச் சந்தித்துத் திருமணம் செய்து கொண்டார்,'' என்றாள் நீடா.

''எங்கள் அம்மாவும், அப்பாவும் தெய்வமாகப் போற்றப்பட வேண்டியவர்கள்!'' உணர்ச்சிவசப்பட்டுச் சொன்னார்கள் இருவரும்.

''தவழும் பருவத்திலேயே எங்களுக்குச் சைகை பாஷையைச் சொல்லிக் கொடுத்தார்கள். இத்தனைக்கும் எங்கள் தாத்தா பாட்டி — அப்பாவின் பெற்றோர்கள் — நான் (அமரேஷ்) பிறந்த பிறகு, தங்கள் பொறுப்பில் என்னை வளர்ப்பதாகக் கூறி முன்வந்தார்கள். அம்மா மறுத்து விட்டார். 'உன்னால குழந்தையை வளர்க்க முடியாது. உன் குறை காரணமாக நன்றாகப் பேசக்கூடிய, கேட்கக்கூடிய இந்தக் குழந்தையை எந்தப் பாதிப்பும் இல்லாமல் வளர்ப்பது என்பது முடியாமல் போகக்கூடும்; ஆகவே நாங்கள் வளர்க்கிறோம்,' என்று கேட்டார்கள்.

''ஆனால் அம்மா திட்டவட்டமாக மறுத்து விட்டார். 'உங்களிடம் வளரும் என் குழந்தை விவரம் தெரிந்து கொள்ளும் வயதில், தன்னுடைய பெற்றோர் செவிட்டூமையர் என்ற உண்மையைத் தெரிந்து கொண்டானானால் பெருத்த அதிர்ச்சிக்கு அவன் உள்ளாகக் கூடும். எங்கள் மீது அவனுக்கு வெறுப்பு ஏற்படவும் வாய்ப்பு உண்டு. எங்களுடன் இணைந்து வாழாததால், எங்கள் மீது சாதாரணப் பச்சாதாபம்தான் — மூன்றாம் மனிதரிடம் காட்டும் பச்சாதாபம்தான் — எழுமே தவிர, பெற்றோர் என்ற முறையில் பாசம் உருவாகாது. நான் ஜாக்கிரதையாகக் குழந்தையை வளர்க்கிறேன்!' என்று கூறி விட்டார்கள்.

''அம்மா அன்று தீர்மானித்தது தான் எவ்வளவு சரியாகப் போய் விட்டது! பள்ளியிலோ, வேறு இடங்களிலோ, உறவினர்களோ யார் எங்கள் பெற்றோரைப் பற்றிக் கேட்டாலும் நாங்கள் உண்மையைச் சொல்லத் தயங்குவதில்லை. நாங்கள் பிற குழந்தைகளைப் போலவே சந்தோஷமாக இருப்பதை அவர்களும் புரிந்து கொள்கிறார்கள்.''

''அங்கிள், நாங்க சின்னக் குழந்தையா இருந்தப்போ அம்மா எங்களை எப்படிக் காப்பாத்துவாங்க தெரியுமா?'' நீடா விவரித்தாள்: ''இரவில் எங்களைத் தன்னோடு அணைத்தபடி படுத்திருப்பார்கள். நாங்கள்



சற்றே நெளிந்தால் போதும். அந்த அசைவில் உடனே தான் விழித்துக் கொண்டு எங்களுக்கு வேண்டியதை உடனே செய்வார்.''

''சில சமயம் அம்மா கிச்சனில் பிஸியாக இருப்பார். ஹாலில் விளையாடிக்கிட்டிருக்கற நாங்க எதுக்காகவாவது கத்தி அழுவோம். அப்ப பக்கத்து ஃப்ளாட்டிலே இருக்கறவங்க வந்து எங்க அம்மாகிட்டே போய் விவரம் சொல்லுவாங்க. உடனே எங்களை அம்மா கவனிப்பாங்க,'' என்றான் அமரேஷ்.

''அது எப்போதாவது ஒரிருமுறை நடந்ததுதான். மற்றபடி தன்னுடைய நேரடிப் பார்வையிலேயே எங்களை வைத்து மிகவும் பாதுகாப்பாக வளர்த்தவர் அம்மா,'' என்றாள் நீடா.

''அப்பா ஆபீசுக்கு எப்படிப் போவார் தெரியுமா அங்கிள்?'' கேட்ட அமரேஷ் பதிலும் சொன்னான்: ''ஸ்கூட்டரில் போகிறார். 'ஹார்ன்' அவரைப் பொறுத்தவரை பயன்படாத ஒன்று. சாலை சிக்னல் விளக்குகள், ஸ்கூட்டரின் பின்னால் வருவதைக் காட்டும் கண்ணாடி இவைதான் அவர் அலுவலகம்சென்று வர உறுதுணையாக இருந்து வருகிறது.''

''அப்பாவுக்கு மாஸ்டர் ப்ரெயின்,'' பெருமையுடன் நற்சான்றிதழ் வழங்கினான் அமரேஷ். ''வீட்டில் அம்மா மட்டும் தனியாக இருக்கிறார். அப்பா ஆபீசுக்குப் போய் விட்டார், நாங்கள் பள்ளிக்குப் போய் விட்டோம். அம்மா உள் அறையில் இருக்கும் போது யாரேனும் வருகிறார்கள். காலிங்பெல் விசையை அழுக்குகிறார்கள். உள்ளே சத்தம். ஆனால் அம்மாவுக்குக் கேட்காது. அம்மா வாசலில் யாரோ வந்திருக்கிறார்கள் என்பதை எப்படித் தெரிந்து கொள்வார்? அதற்குத்தான் அப்பா ஒரு ஏற்பாடு செய்தார். அதன்படி வீட்டின் ஒவ்வொரு அறையிலும் — பாத்ரூம் உட்பட — வெளியே இருந்து யாராவது காலிங்பெல் விசையை அழுக்கினால், விளக்குகள் எரியும். நாங்கள் இதைக் 'காலிங் லாம்ப்' என்று சொல்லுவோம். அம்மா விளக்கொளியைப் பார்த்து விவரம் தெரிந்து கொண்டு, வாசலுக்கு வந்து பார்ப்பார்.''

''அது மட்டுமில்லே அங்கிள். நாங்க ரொம்பச் சின்னக் குழந்தைகளா இருந்தபோது காலையிலே நாலு

(57 — ஆம் பக்கத்து விடைகள்)

1. நிலவுதான்.
2. ரிக்ஷாக்காரர்களும், டாக்ஸி ஆட்டோ டிரைவர்களும்.
3. ஏனென்றால் ஒற்றைக் கையால் 50 கார்களையும் நிறுத்தி விடுவார்.
4. அகராதியில்
5. 'ற்' என்ற எழுத்தும் சரி, இலகமும் சரி, இரண்டுமே 'நெற்றி'யின் நடுவில் வரும்.
6. மனது.

மனம்.

(ஓவியர் ஜெயராஜின் சொந்தத் தயாரிப்பாக்கும் இந்தப் பகுதி)



மணிக்குப் பால்காரர் வர்றார்ன்னு வைச்சுக்கோங்க. அப்ப அவர் காலிங் பெல் அடிப்பார். அது எங்களுக்குத் தூக்கத்தில் கேட்காது. அம்மா — அப்பாவுக்கு அவர் வந்திருக்கறது தெரியறதுக்காக, அப்படி பெல் அடிக்கும்போது படுக்கையில் ஓர் அதிர்வு ஏற்படும். அந்த அதிர்வில் விழித்துக் கொண்டு அப்பாவோ அம்மாவோ வாசலுக்குப் போய்ப் பால் வாங்கிக்கிட்டு வந்திடுவாங்க." என்றாள் நீடா.

கோபாலகிருஷ்ணன் 'தமிழ் நாடு ஸ்டேட் ஃபெடரேஷன் ஆஃப் த டெஃப்' அமைப்பின் பொதுச் செயலாளராகப் பணிபுரிகிறார். இதன் காரணமாக வாரத்தில் இரு நாட்கள் இரவு பத்து, பதினோரு மணிக்கு மேல் வீடு திரும்ப வேண்டியிருக்கும். அப்போது ஸ்கூட்டர் சத்தத்தை குழந்தைகள் அடையாளம் தெரிந்து கொள்வார்கள். ஆனால் அவர் வருவதை, குழந்தைகளுக்கு முன்னாலேயே உள் உணர்வால் தெரிந்து கொண்டு விடுவார் திருமதி. லேகா கோபால கிருஷ்ணன்.

அமரேஷும் நீடாவும் பிறந்த உடனேயே அவர்களின் அழுகுரல் அம்மாவுக்குக் கேட்கவில்லை. ஆனால் அவர்கள் கையைக் காலை உதைத்துக் கொண்டு முகம் சிவக்க, கண் சுருங்க, வாய் திறக்க, அழுததைப் பார்த்த பிறகு அவர்களுக்குக் குரல் இருக்கிறது என்று அறிந்து ஆனந்தக் கண்ணீர் விட்டிருக்கிறார்.

சமீபத்தில் அகில உலக செவிட்டூமையர் கழகத்தின் அழைப்பின் பேரில் வெளிநாடுகளுக்குச் சென்று வந்தனர் கோபாலகிருஷ்ணன் தம்பதியினர். அப்போது குழந்தைகளைக் கோபாலகிருஷ்ணனின் நண்பர் பார்த்துக் கொண்டார்.

அவர்கள் திரும்ப வந்த போது தங்கள் அனுபவங்களைச் செய்கைகளில் அவர்கள் சொல்ல அதைக் கேட்டு ஆனந்தித்தனர் குழந்தைகள்.

குழந்தைகளின் மனோதிடத்தை வலுப்பெறச் செய்த பெருமை அந்தப் பெற்றோரையே சாரும். எந்தக் கேலிக்கும், மனவருத்தத்திற்கும் சிறிதும் இடம் கொடுக்காத மனப்பக்குவத்தை இந்தச் சிறிய வயதிலேயே வளர்த்துக் கொண்ட குழந்தைகளை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

படங்கள், கட்டுரை: **பிரபுசங்கர்**



ஓர் ஊரில் மூன்று சிறிய விநாயகர் கோவில்கள் வரிசையாக இருக்கின்றன. ஒவ்வொரு கோவிலுக்கும் எதிரில் ஒரு சிறு குளம் இருக்கிறது. இந்தக் கோவில்களுக்குப் போகும் நபர்கள் கையில் சில உதிரி ரோஜாப் பூக்களை எடுத்துச் செல்ல வேண்டும். அவற்றைக் கையில் வைத்துக் கொண்டே முதல் குளத்தில் முழுக வேண்டும். முழுகி எழுந்ததும் பார்த்தால் கையில் உள்ள பூக்கள் இரண்டு மடங்கு ஆகியிருக்கும்! அப்படியே முதல் விநாயகர் கோவிலுக்குச் சென்று, எட்டுப் பூக்களை விநாயகர் மேல் வைத்து வணங்கிவிட்டு, மீதிப் பூக்களுடன் இரண்டாவது குளத்தில் முழுக வேண்டும். அப்போதும் கையிலுள்ள பூக்கள் இரண்டு மடங்காகிவிடும். அப்படியே, இரண்டாவது கோவிலுக்குச் சென்று, எட்டுப் பூக்களை அந்த விநாயகர் மேல் வைத்து வணங்கி விட்டு, மீதிப் பூக்களுடன் மூன்றாவது குளத்தில் முழுக வேண்டும். அப்போதும் கையிலுள்ள பூக்கள் இரண்டு மடங்காகிவிடும். பிறகு மூன்றாவது கோவிலுக்குச் சென்று விநாயகருக்கு எட்டுப் பூக்கள் போட வேண்டும். பிறகு, மீதிப் பூக்களுடன் வீடு திரும்பலாம். இது தான் அந்த ஊர் வழக்கம்.

இதன்படி, ஒருவர் கையில் சில பூக்களை எடுத்துச் சென்று மூன்று குளத்திலும் மூழ்கி, மூன்று விநாயகருக்குத் தலைக்கு எட்டுப் புஷ்பங்கள் வீதம் போட்டார். மூன்றாவது விநாயகருக்குப் பூக்கள் போடும் போது அவர் கையில் சரியாக எட்டுப் பூக்கள் மட்டுமே இருந்தன. விநாயகருக்கு அவற்றைப் போட்ட பிறகு வெறும் கையோடு திரும்ப வேண்டியதாயிற்று. கையில் மீதி இல்லை.

அப்படியானால் அவர் முதலில் வீட்டிலிருந்து எடுத்துச் சென்ற பூக்கள் எத்தனை?

— எஸ். விச்வநாத், சென்னை — 88

எதனுடையது அந்த முட்டை?





படிப்புச் சாமியார்!

மலைக்கோயில்' என்ற ஊரிலே 'படிப்புச் சாமியார்' என்ற ஒரு மகான் இருந்தார். அதுவும் அந்தக் கோயி லின் மலைக்குகையிலே வாழ்ந்து வந் தார்.

அவர் சொல்வது பலிக்கும். அவரைத் தரிசித்தவர்களுக்குச் சங் கடங்கள் நீங்கி இன்பம் ஏற்படும் என்ற புகழ் நாடெங்கும் பரவி இருந்தது.

அதனால் அவரைப் பார்க்க நாளுக்கு நாள் மக்கள் கூட்டம் பெருகிக் கொண்டே வந்தது.

ஆனால் அவர் யாருடனும் பெரும் பாலும் பேசவே மாட்டார். பேசும் படியான கட்டாயம் ஏற்பட்டால் எல் லோருக்கும் ஒரே மாதிரியான உபதே சத்தைத்தான் சொல்லுவார். வேறெதுவும் சொல்ல மாட்டார்.

அந்த உபதேசம்... என்ன?

''படி! படி! படித்துக் கொண்டே இரு! சாகும் வரையிலும் படி!''

அந்த உபதேசத்துக்கு என்ன பொருள் என்று கேட்டால், 'அதன் பொருளும், பயனும் கூடிய சீக்கிரமே புரியும்' அதுவும் என் மூலமாகவே புரியும்; புரியும்படி நேரும்,' என்று சொல்லிவிட்டு அமைதியாகி விடு வார்.

படிப்புச் சாமியாரின் புகழ் அந்த நாட்டு மன்னனையும் கவர்ந்தது.

அதனால் முன்னறிவிப்பு எதுவுமே இல்லாமல் திடுமென ஒருநாள் அமைச்சருடன் சென்று படிப்புச் சாமியாரை வழிபட்டு வணங்கி னான். தனக்கு ஒரு நல்ல அருள் உப தேசம் செய்யும்படி வேண்டினான்.

அவரோ எல்லோருக்கும் சொல்லு வது போலவே, ''படி! படி! படித்துக் கொண்டே இரு! சாகும் வரையிலும் படித்துக் கொண்டே இரு!'' என்று உபதேசித்தார்.

அதன் தத்துவத்தை உணர்ந்து கொள்ள முடியாத மன்னன், "புரியும் படியாக விளக்கம் கூற வேண்டும்" என்று வேண்டினான்.

''அரசே! அடுத்த வாரம் இங்கே வாரும்! சரியான விளக்கம் கிடைக்

கவிஞர் தமிழ்முடி

கும்,'' என்றார்.

அதனால் அரண்மனை திரும்பிய அரசன், எப்பொழுது அடுத்த வாரம் வருமென்று ஆவலோடு காத்துக் கொண்டிருந்தான்.

'சுமார் எழுபது ஆண்டுகளுக்கும் மேலாக அந்தச் சாமியார், அந்த மலைக் கோயில் குகையிலேயே வாழ்ந்து வந்தார்.

அதனால் அவருடைய புகழ் எங்கும் பரவியது. அதைவிட அவரது உபதேசம் நாட்டிலே பெரும் பரபரப்பையும், புரட்சியையும் உண்டாக்கியது. அதோடு ஒப்பற்ற பெரும் பயனையும் உண்டாக்கியது.

எப்படி?

'படி! படி! சாகும் வரையிலும் படித்துக் கொண்டே இரு!' என்ற அவரின் உபதேசத்தால் அந்த நாட்டிலே உள்ளவர்கள் அனைவருமே படிப்பு அறிவு உடையவர்களாகவே திகழ்ந்தார்கள்.

'படிக்காதவர் ஒருவர் கூட இல்லை' என்ற புகழ் ஏற்பட்டது.

அதனாலேயே அவருக்குப் 'படிப்புச் சாமியார்' என்ற பெயர் நிலைத்து விட்டது.

அதனாலே மன்னனும் மக்களும், அந்தச் சாமியாருக்கு மாபெரும் விழா எடுத்துச் சிறப்பிக்க முடிவு செய்தார்கள்.

சுவாமியை எழுந்தருளச் செய்யும் தங்கத் தேரிலேயே படிப்புச் சாமியாரையும் எழுந்தருளச் செய்து, பட்டணப் பிரவேசமாக அழைத்து வர வேண்டுமென அரசன் தீர்மானித்தான். மன்னனே அந்தத் தேர் வடத்தை முன்னின்று முதலில் இழுக்க முடிவு செய்தான்.

அதற்கான ஒரு நாளும் குறிக்கப் பட்டது.

இன்னும் இரண்டு நாட்களே இருந்தன.

அப்பொழுதுதான் அதிர்ச்சி தரும் அந்த எதிர்பாராத நிகழ்ச்சி நடந்தது. அது மன்னனையும், மக்களையும் நிலை குலையச் செய்து, தலைகுனியும் படியான பெரும் வேதனைக்கு உள்ளாக்கியது; உலுக்கியது.

பட்டணப் பிரவேசத்திற்கு இரண்டு நாட்களுக்கு முந்திய ஓர் இரவில் —

திடுமென அந்தச் சாமியார், கோயில் நகைகளைத் திருடிக் கொண்டு யாருக்கும் தெரியாமல் எங்கோ ஓடிவிட்டார் என்ற திடுக்கிடும் செய்தி பரவியது.

அது உண்மைதான் என்று அறிந்த மன்னனும், மக்களில் பலரும் நம்ப முடியாமலும், நம்பாமல் இருக்க முடியாமலும் தவிக்கும் நிலைக்கு ஆளானார்கள்.

ஆனால் மக்களில் சிலரோ, தரக் குறைவாகப் பேசவும், ஏசவும் தலைப் பட்டார்கள்.

''இந்தப் படிப்புச் சாமியார் உண்மையான சாமியார் அல்லர். போலிச் சாமியார். சமயம் வரும்போது எதை யாவது, சுருட்டிக் கொண்டு ஓடி விடுவார் என்று அப்பொழுதே சொன்னேன். ஆனால் அதை யாருமே நம்ப வில்லை. பதிலுக்கு என்னை வெறுத்துப் பழித்தார்கள். இப்பொழுது என்ன சொல்லப் போகிறார்கள்?

இதுபோன்று பலரும், இன்னும்பல



விதமாகக் கூறிப் பழித்தார்கள்— அவரின் புகழைப் பொறுக்காமல் பொறாமை கொண்டதால்.

அதனால் என்ன செய்வதென்று தெரியாமல், தடுமாறித் தவித்துக் கொண்டிருந்த மன்னனுக்கு மற்றோர் அதிர்ச்சி தரும் செய்தி வந்தது.

'கோயில் நகைகளைத் திருடிக் கொண்டு காணாமல் போன அந்தச் சாமியார், மறுபடியும் நகைகளுடன் வந்து குகையில் அமர்ந்திருக்கிறார்' என்பதே அந்தச் செய்தி!

அதனால் மன்னனும், மக்களும் பரபரப்புடன் மலைக் கோயில் குகைக்குச் சென்றார்கள்.

அந்தச் சாமியாரோ, கோயில் நகைகளை ஏந்தியபடியே, அவரைக் காண வந்தவர்களுக்கு, வழக்கமான புன்னகையுடன் காட்சி தந்து அருளாசி வழங்கினார்.

அவரின் அந்தச் செயலின் தன்மையை அறிய முடியாத மன்னனும், மக்களும், அவரைப் பக்தியுடன் வணங்கி, ஏதோ கேட்க நினைத்தும் தயங்கினார்கள். அதைப் புரிந்து கொண்ட அந்தச் சாமியார், அவர்களை நோக்கிக் கூறலானார்.


''மக்களே! மன்னவரே! 'படி! படி! சாகும் வரை படித்துக் கொண்டிரு!' என்று நான் கூறி வந்ததன் உபதேசத்தை நன்கு விளக்குவதற்காகவே — விளங்கிக் கொள்ளும்படி செய்வதற்காகவே இந்தக் கோயிலின் நகைகளைத் திருடிக் கொண்டு, யாருக்கும் தெரியாமல் மறைந்து சென்று விட்டேன்.

''எனக்கு நாளையுடன் நூறு வயது நிறையப் போகிறது.

''சென்ற வாரம் வரையில், 'படிப்புச் சாமியார்' பெரிய மகான்; பேசும் தெய்வம்,' என்று போற்றியவர்களே, ஒரே ஓர் இரவில் கோயில் நகைகளைத் திருடியதாய் — இல்லை திருடியதாக நடித்தேன். அதற்கே, என்னை அவமதித்துப் 'போலிச் சாமியார்' என வெறுத்து விட்டார்கள் அல்லவா?

''அதனால் உயிர் போகும்வரையில் தவறாமல் காக்கும் — கற்கும் படிப்பு ஒன்று உண்டு. அதுதான் ஒழுக்கம்!

''ஒழுக்கம் என்ற கல்வி கல்லாதவனை, உலகில் எந்த ஓர் இடத்திலும் எவரும் மதிக்க மாட்டார்கள். பதி



னுக்கு அவமதித்து அருவருத்து வெறுப்பார்கள். பழிப்பார்கள்.

"அதற்கு நானே — நான் செய்த செயலே சான்று! கோயில் நகைகளை எடுத்துக் கொண்டு போன நான், இன்று நகைகளுடன் திரும்பி வந்து விட்டேன் — ஆனால் இழந்து போன ஒழுக்கம் திரும்பி வரவில்லை. பதிலுக்குத் 'திருட்டுச் சாமியார்' என்ற பழி தான் ஏற்பட்டது.

"இந்த அரிய நீதியை உலகிற்கு ஊட்டவே, கோயில் நகைகளைத் திருடினேன் — இல்லை திருடனாக நடித்தேன்.

"திருடனாக நடித்தாலும், திருட்டுத் திருட்டுத்தான் — திருடன்தான்.

"அதனால் திருட்டுச் சாமியார் என்ற அவமானப் பெயர் தாங்கி வாழ விரும்பவில்லை. அதனால் இதோ கோயில் நகைகள்," என்று அரசனிடம் தந்துவிட்டு, அடுத்த நொடியே உயிரை விட்டு விட்டார் படிப்புச் சாமியார்!

அப்பொழுதுதான், 'படி! படி! சாகும் வரையிலும் படித்துக் கொண்டே இரு!' என்ற படிப்புச் சாமியாரின் அருளுபதேசம் அனைவருக்கும் நன்கு விளங்கியது.

படிப்புச் சாமியாரின் இந்த அரிய உபதேசத்துக்கு அடிப்படையாக உள்ளது ஓர் அருங்குறள்! அது...

யாதானும் நாடாமால், ஊராமால், என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு!

குறுக்கெழுத்துப் புதிர் விடை:

1 த	2 மி	ழ்			3 ப்ரா		4 ம	ரு	5 ம	க	ன்
	ன்				ம்		தி		ணி		
	ன		6 ஜ	ன்	ம	ம்			7 த	ம்	பி
8 ப	ல்	பொ	டி		9 லா	ப	ம்		ன்		
த்			தி		ட்			10 ம			
11 தா	த்	தா			12 ட	ம்	13 மா	ர	ம்		
வ			14 மா	ன	ம்		டு			15 கு	ளி
16 து	ன்	17 ப	ம்				18 மே	ள	தா	ள	ம்
		த			20 க		ய்				
		ற்		21 ப	ள்	ளி	த்	த	லை	22 வ	ர்
		ற					த			ரி	
23 கோ	ல	ம்				24 பு	ல்	த	ரை		



பிருந்தாவனம்



பஞ்சபூதங்களாய் பரமன்

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களால் உருவானதே உலகம்.

உயிர் வாழும் மக்கள் உடம்பும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற பஞ்சபூதங்களால் உருவானதே.

இறைவனும் பஞ்சபூதங்களை நினைவூட்டும் வண்ணம் ஐந்து ஊர்களில் ஐந்து வடிவத்தில் அருள் தருகின்றார்.

1. காஞ்சிபுரம்: ஏகாம்பரேசுவரர் ஆலயத்தில் மண் வடிவம். இதனைப் பிருதிவி க்ஷேத்திரம் என்பர்.
2. திருவானைக்கா: ஜம்புகேசுவரர் ஆலயத்தில் நீர் வடிவம். அப்பு க்ஷேத்திரம்.
3. திருவண்ணாமலை: அண்ணாமலை ஆலயத்தில் தீ வடிவம். தேயு க்ஷேத்திரம்.
4. ஆந்திராவில் உள்ள திருக்காளத்தி: இங்குள்ள ஆலயத்தில் காற்று வடிவம். வாயு க்ஷேத்திரம்.
5. சிதம்பரம்: நடராஜர் ஆலயத்தில் ஆகாய வடிவம். ஆகாச க்ஷேத்திரம்.

பா. வைத்தியநாதன், திருப்பூண்டி.

கம்பரும் சோழ மன்னரும் வழக்கம் போல் மாலை நேரத்தில் சோலையில் உலாவிக் கொண்டிருந்தனர். ஓடிக் கொண்டிருந்த ஆற்று நீர் காலில் படும்படியாக இருவரும் நடந்து கொண்டிருந்தனர்.

நீர் வேட்கை கொண்ட கம்பர் அந்த ஆற்றின் தெள்ளிய நீரை அள்ளிக் குடித்தார். இதைக் கண்ட மன்னர், கம்பரை மட்டம் தட்ட விரும்பி, "கம்பரே! என் காலில்' விழுந்த நீரைத்தானே உண்டீர்?" என்று கேலியாகக் கேட்டார்.

அதற்குக் கம்பர், "நீரே காலில் விழுந்தால் நான் என் செய்வது?" என்று போட்டாரே ஒரு போடு!



கால் சிலேடைகள்

ரெட்டியாரிடம், ஏழை ஒருவன் வந்து, "என் வீட்டில் தெய்வத்திற்குப் படைக்க வேண்டும். தாங்கள் தான் அரசரிடம் சொல்லி எனக்கு ஓர் ஆடும், ஒரு மூட்டை அரிசியும் கிடைக்கச் செய்ய வேண்டும்," என்று கேட்டான்.

உடனே ரெட்டியார், "நீ கேட்டதில் ஒன்று நடக்கும். இன்னொன்று நடக்காது," என்றார்.

இதைக் கேட்ட ஏழை, 'நாம் கேட்ட இரண்டில் ஒன்றுதான் கிடைக்கும் போல் தெரிகிறதே,' என வருந்தி, "ஐயா! இரண்டும் கிடைக்க எனக்கு நீங்கள் உதவ வேண்டும்," எனக் கேட்டான்.

அதற்கு ரெட்டியார், "நான் என்ன

சொல்லி விட்டேன்? நீ கேட்ட இரண்டில் ஆடு நடக்கும். அரிசி நடக்காது. இதைத் தானே சொன்னேன்!'' என்றார்.

கடையநல்லூர் கணேசன்.



ஒரே ஓர் ஆண் பிள்ளை

சென்னை இராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் திருமுருக கிருபானந்த வாரி யார் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந் தார். அதில் நான் ரசித்த பகுதி இது. சொன்னார்:

''நாம் எல்லோரும் பெண் பிள்ளைகள் தான். ஒரே ஒருவனைத்தான் ஆண் பிள்ளை என்று சொல்லலாம். அவன்தான் முருகன் அவன் சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து பிறந்தவன். நாமெல்லாம் பெண் வயிற்றி லிருந்து பிறந்தவர்கள். அதனால்தான் நாம் எல்லோரும் பெண் பிள்ளைகள் என் கிறேன்.''

— எல். முத்து. ஊத்தங்கரை.



அதிகம் கொண்ட நாளிதழ்!

உலகிலேயே மிக அதிகப் பக்கங்கள் கொண்ட நாளிதழாக இதுவரை வெளி வந்தது — அமெரிக்காவின் 'நியூயார்க் டைம்ஸ்' இதழ்தான். 1965 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 17 ஆம் தேதியிட்ட பதிப்பு 946 பக்கங்களைக் கொண்டிருந்த தாம்! ஆச்சரியப்படக் கூடிய விஷயம் என்னவெனில், இவ்விதழின் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைப் பதிப்புக்கும் பயன் படுத்தும் காகிதங்களுக்காகச் சுமார் 63,000 மரங்கள் தேவைப்படுகின்றனவாம்.


— தா. பிரசன்னா, நாமக்கல்.



எதிர் நீச்சல் போட்டார்கள்

* பெத்தோவன் இனிய சங்கீதத்திற்கு ஆதிகர்த்தா. எனினும் அவருக்குக் காது கேட்காது.
* முதல்தரக் காவியங்களை எழுதியவர் மில்டன். அவர் பார்வையற்றவர்.
* எட்டு சிலிண்டர் மோட்டார் கார் செய்ய முடியாது என்று நிபுணர்கள் எல்லாம் ஒதுங்கி விட்டனர். விடாப்பிடியாய்ச் செய்து காட்டியவர் ஹென்றி போர்ட்.
* சமுத்திரத்திற்கு அப்பாலேயும் ரேடியோ அலைகளைச் செலுத்த முடியும் என்று சொன்னார் மார்க்கோனி. நண்பர்கள் சிறிது காலம் பைத்தியக்கார ஆஸ்பத்திரி யில் அடைத்து வைத்திருந்தார்கள்!
* ஊர் மக்கள் எல்லோரும், ஓர் இயந்திரத் தைக் காற்றில் பறக்க வைப்பது முடியாது என்று அடித்துச் சொன்னார்கள். முடி யும் என்று இறக்கை கட்டிப் பறந்து காட் டினார்கள் ரைட் சகோதரர்கள்.
* இமயமலை உச்சியில் கால் வைக்க முடி யுமா? கனவுதான் என்று நினைத்தவர் களின் கனவை நினைவாக்கினவர் டென் சிங்.

— ஜே. ஜே. துரைராஜ், பசுமலை.



சமனா, இரட்டையா?

ஒரு காட்டில் இரண்டு திசைகளில் இருந் தும் இரண்டு யானைக் கூட்டங்கள் வந்தன. அவை இரண்டும் ஓரிடத்தில் சந்தித்துக் கொண்டன.

ஒரு கூட்டத்தில் உள்ள யானை மற்றக் கூட்டத்தைப் பார்த்து, ''நண்பர்களே, உங்கள் கூட்டத்திலிருந்து ஒரு யானையை எங்களுக்குக் கொடுத்தால் நமது இரண்டு

கூட்டமும் சமமான எண்ணிக்கை உடைய வர்களாவோம்,'' என்றது.

மற்றக் கூட்டத்தின் யானையோ, ''அது வேண்டாம், உன் கூட்டத்திலிருந்து ஒரு யானையை எங்களிடம் விட்டுக் கொடுத்தால் நாங்கள் உங்கள் கூட்டத்தை விட இரண்டு மடங்காவோம்,'' என்றது.

அப்படியானால் ஓரோர் கூட்டத்திலும் எத்தனை யானைகள் இருந்தன?

— த. ஜெயப்பிரகாஷ், கோட்டார்

விடை: (7 — 5)



1. பார்த்தால் கல்லுதான்;
   பல்லு பட்டால் தண்ணிதான் — அது எது?
2. கண்ணுக்குத் தெரியாத கள்ளன்; கண்ட இடமெல்லாம் புகுந்து போவான் — அவன் யார்?
3. கண்ணாடி வீட்டுக்குள்ளே கணக்குப் போடும் அண்ணன் தம்பி;
   ஒருவன் நெட்டையன் ஒருவன் குட்டையன் — அவர்கள் யார்?
4. காய் காய்த்தும் கனி தராத மரம் எது?
5. கோடி கோடி வெள்ளிப் பணம்;
   ஓடி விடும் விடிகையிலே — அது எது?

விடைகள்: 1. ஐஸ் கட்டி, 2. காற்று, 3. கடிகாரம், 4. முருங்கை மரம், 5. நட்சத்திரம்.

— சு. முரளி, சிறுகடம்பூர்.



கைவிட்டார் டாக்டர்!

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் படுக்கையில் இருந்த நேரம். அவரை டாக்டர்கள் கைவிட்டு விட்டதாகவும் இனிப் பிழைக்க மாட்டார் என்றும் செய்தி பரவியது. கேள்விப்பட்ட நண்பர் ஒருவர் படபடப்போடு அவரைக் காண வருகிறார். ''அண்ணே, உங்களை டாக்டர்கள் கைவிட்டு விட்டதாக ஊரெல்லாம் வதந்தி. உடம்பு எப்படி இருக்குண்ணே?'' என்று கண்கலங்கக் கேட்கிறார்.

பேச முடியாத நிலையிலும் கலைவாணர், ''டாக்டர்கள் என்னைக் கைவிட்டு விட்டதாக ஊரெல்லாம் சொல்றாங்களே அது உண்மைதான். காலையில் ஒரு டாக்டர் வந்து கையைப் பிடித்துப் பார்த்து, 'பயப்பட வேண்டாம்,' என்று சொல்லிக் கையை விட்டு விட்டுப் போய் விட்டார். மதியம் வந்த டாக்டரும் கையைப் பிடித்துப் பார்த்து அதையே சொல்லி விட்டுப் போனார். ஆகையால் டாக்டர்கள் கையை விட்டது உண்மைதான். எப்படி வதந்தியாகும்?'' என்றார் நகைச்சுவையாக.

வந்தவர் கவலையை மறந்து சிரித்தார்.

— 'கலைவாணர் என். எஸ். கே.' நூலிலிருந்து பி. கோவிந்தசாமி, ஊத்தங்கரை.

1000 ஆண்டுகளாக ஒரு மலை எரிந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் உங்களால் நம்ப முடியுமா? ஆஸ்திரேலியாவிலுள்ள நியூ சவுத்வேல்ஸ் பகுதியில் இந்த அதிசயம் நடந்து கொண்டிருக்கிறது. முதலில் அது ஓர் எரிமலை என்று கருதப் பட்டது. இல்லை என்பது பிறகு தெரிய



வந்தது. மலைக்கு 500 அடி கீழே ஒரு நிலக் கரிச் சுரங்கம் உள்ளது. மின்னல் தாக்கித் தீப்பற்றிய மரம் ஒன்று அதன் திறந்த வாய் வழியே உள்ளே விழுந்து விட்டது. அதனால் நிலக்கரியில் தீப்பற்றி அது கனன்று எரிந்து கொண்டிருக்கிறது — தொடர்ந்து ஆயிரம் ஆண்டுகளாக.

— சா. இரா. மணி, வந்தவாசி.



முல்லா துணிக்கடைக்குள் நுழைந்து பைஜாமா வாங்கி அணிந்தார். ஆனால் அதற்குள் மனம் மாறிற்று. அதைக் கழற்றி வைத்து விட்டு, கைலி எடுத்துக் கொண்டு வெளியேறப் போனார்.


'முல்லா, கைலிக்கு பணம் எங்கே?' என்றான் கடைக்காரன்.

'பணத்துக்கு ஈடாகத்தான் பைஜாமாவை விட்டு வைத்திருக்கிறேனே!' என்றார் முல்லா.

'பைஜாமாவுக்கு நீ பணம் தரவில்லையே!' என்றான் கடைக்காரன்.

'நன்றாக இருக்கிறதே! பைஜாமாதான் எனக்குப் பிடிக்கவில்லை. வாங்கவுமில்லை. அதற்கு ஏன் பணம் தர வேண்டும்?' என்று கேட்டார் முல்லா.

— இடையகோட்டை ஆசாத்.



* மரங்கொத்திப் பறவை மரத்தைக் கொத்தும் வேகம், மணிக்கு 1300 மைல்.
* மிக உயர மிருகமான ஒட்டகைச் சிவிங்கி மிக உயர்ந்த இரத்த அழுத்தமுள்ள பிராணி.
* கங்காரு குட்டி பிறக்கும் போது 2 செ.மீ. நீளமே இருக்கும். பெரிதான பிறகோ 5 அடிக்கு மேல் உயரம் உள்ளதாக இருக்கும்.
* பின்பக்கமாகப் பறக்கும் தன்மையுடைய ஒரே பறவை ஹம்மிங்பேர்ட்.
* நீந்தத் தெரியாத ஒரே மிருகம் ஒட்டகம்.
* பறவையாக இருந்தும் சிறகும், வாலும் இல்லாத ஒரே பிராணி கிவி.
* ஆமையின் நீந்தும் வேகம் மணிக்கு 35.2 கிலோ மீட்டர்.
* ஆப்பிரிக்காவிலுள்ள கோப்ரா என்னும் கொடிய விஷப் பாம்பு சுமார் 10 முதல் 12 அடி வரை விஷத்தைத் துப்பி எதிராளியின் கண்களைக் குருடாக்கி விடும்.
* இந்தோனேஷியாவில் வசிக்கும் ஒருவகை பல்லிகள் 10 அடி நீளமுள்ளவை.

— வி. பத்மா, சென்னை — 4.



* முதன் முதல் ரயில்வே கால அட்டவணையை வெளியிட்டவர் ஜார்ஜ் பிராட்ஷா.
* 1755ம் ஆண்டு ஏப்ரல் மாதம், ஜெர்மனியில் ஒரு ஏழை விவசாயின் மகனாகப் பிறந்த சாமுவேல் ஹக்னிமேன் என்பவர் தான் ஹோமியோபதி மருத்துவ முறையை உலகிற்கு உணர்த்தியவர்.
* பாரதியாரின் இளம் பருவ நண்பரின் பெயரும் பாரதிதான். சோம சுந்தர பாரதியார் என்பது அவரது முழுப் பெயர்.
* ஆலிவர் கோல்ட் ஸ்மித், ஆண்டன் செகாவ், சாமர் செட்மாம் ஆகியோர் எழுத்தாளர் ஆவதற்கு முன் மருத்துவர்களாக இருந்தார்கள்.

தொகுப்பு: எஸ். விஜயா சீனிவாசன்
திருச்சி — 14.



இயற்கைக் காட்சிகளும் அழகிய பறவைகளும் அரவிந்தனுடைய கண்ணைக் கவர்ந்தன; உள்ளத்தைக் கொள்ளை கொண்டன.

எத்தனை வகையான பறவைகள்! எத்தனை வகையான வண்ணங்கள்! எங்கேயோ பிறந்து அங்கே பறந்து வந்து கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கும் அந்தக் காட்சி அவனுக்கு விந்தையாக இருந்தது. அந்தக் குஞ்சுகள் பிறப்பால் இந்திய நாட்டுப் பறவைகள்! 'கீச் கீச்' என்று அவற்றின் மழலை ஒலிகள்!

அவற்றையெல்லாம் படமெடுக்க அவனுடைய உள்ளம் துள்ளியது. அவனுடைய விலையுயர்ந்த காமிரா தோளில் தொங்கியது. 'ஆம்' லென்சை ராமு வைத்திருந்தான்.

ஆனால், அந்த நேரத்தில் அதைவிட வேறொன்றைப் படமாக்க வேண்டிய பரபரப்பில் அவன் இருந்தான்.

வேலப்பனும் ஆசைத்தம்பியும் சிரித்துப் பேசி நடந்து வந்தார்கள். அவர்களுடைய கைகளில் பள்ளிக் கூடத்துக்குச் சொந்தமான காமிரா, பைனாகுலர்!

அந்தக் காட்சியைப் படமாக எடுத்துத் தள்ளினான் அவன்.

அவன் அமர்ந்திருந்த மரத்தருகே அவர்கள் வந்தபோது அவனுடைய இதயத்துடிப்பு அதிகமாயிற்று. அப்போது தெளிவாக விழும். ஆனால் 'கிளிக்' ஒலி அவர்கள் காதில் விழுந்து நிலைமை வேறுமாதிரி ஆகிவிட்டது?

வேறு வழியில்லை. உண்மையைத் தெளிவாக வெளியே கொண்டுவர அதைவிட வேறு நல்ல வாய்ப்புக் கிடைக்குமா? ராமுவும் துரிதப்படுத்தினான்.

'கிர்ரிக்.... கிர்ரிக்' — இரண்டு மூன்று படங்கள் எடுத்துவிட்டான்!

அதே நேரத்தில், வேலப்பனுக்கும் ஆசைத்தம்பிக்கும் பின்னால் வந்த சிறுவர்கள் வைத்திருந்த பலூன்கள் நான்கைந்து தொடர்ச்சியாக வெடித்ததால் அந்த ஒலியில், காமிரா எழுப்பிய ஒலி மறைந்து போயிற்று! நல்ல வேளை, பீட்டர் செய்திருந்த அந்த ஏற்பாடு மிகவும் உதவியாக இருந்தது; கண்ணாலேயே அவனுக்கு நன்றி தெரிவித்தான்.

தலைமையாசிரியர் அறையில் அரவிந்தன் நண்பர்களுடன் நின்று கொண்டிருந்தான்.

தன் கைப் பையைத் திறந்து பத்து வண்ணப் படங்களை அவரிடம் கொடுத்தான். அவை வேடந்தாங்கலில் அவர்கள் எடுத்த படங்கள்!

அவரும் வளவனும் அடைந்த வியப்புக்கு எல்லையில்லை; ஆனந்

தத்திற்கு அளவேயில்லை!

இவ்வளவு காலமும் ஆசிரியர்களையும் ஊழியர்களையும் அலைக்கழித்த புதிர் விடுபட்டுவிட்டது. பள்ளியின் இயல்பான ஓட்டத்தைத் தடைப்படுத்திய சிக்கல் அறுந்துவிட்டது. சின்னஞ் சிறுவர்களே யானாலும், மனம் வைத்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு அந்த நிகழ்ச்சி சான்றாக அமைந்துவிட்டது. அறிவும் துணிவும் இணைகிறபோது அற்புதமான விளைவுகள் ஏற்படும் என்பது உறுதியாகிவிட்டது.

சாதனை புரிந்த அந்தச் சிற்றெறும்புகளிடம் யானையின் பலம் இருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். மனித ஆற்றல் ஒன்றுபட்டால் எதைத்தான் சாதிக்க முடியாது?

தமிழன்பன் எழுந்து சென்று அவர்களை நெஞ்சோடு தழுவிக் கொண்டார்.

''உங்கள் எல்லோருடைய அறிவையும் ஆற்றலையும் கண்டு எங்கள் உள்ளம் சிலிர்க்கிறது; உடல் புல்லரிக்கிறது. நீங்கள் செய்து முடித்தது சாதாரணச் செயல் அல்ல, மாபெரும் பணி. போர்க்களத்தில் அச்சுறுத்தும் ஆபத்துகளிடையே அஞ்சாமல் முன்னேறி, தாய் நாட்டின் பெருமையைக் காப்பாற்றும் வீரர்களாக நீங்கள் எங்களுக்குக் காட்சியளிக்கிறீர்கள். உங்களுக்கு எங்கள் நெஞ்சார்ந்த பாராட்டுகள்!''

அந்த அன்பு, அலைகளில் நீந்தவும் மலைகளில் ஏறவும் அவர்களுக்குத் தெம்பு தரக் கூடியது!

''வெடி கடைக்குப் போய் 'வெங்காய வெடி' கேட்டேன். இல்லையாம்... 'புடலங்காய் வெடி'தான் இருந்துச்சு, வாங்கிட்டு வந்துட்டேன்...!''

— வலங்கை ஜி. ராஜசேகர்.



வேலப்பனும் ஆசைத்தம்பியும் வகுப்பில் 'ஆர்வத்தோடு' பாடத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். வேடந்தாங்கல் போய் வந்த களிப்பு



உள்ளத்தில் நிறைந்திருந்தது. எண்ணம் ஏரிக்கரையைச் சுற்றி வந்தது.


அப்போது பணியாள் அங்கே வந்தார். அவர்கள் இருவரையும் தலைமையாசிரியர் அழைப்பதாகக் கூறி அழைத்துச் சென்றார்.

அவர்கள் குழப்பத்தோடு நின்று கொண்டிருந்தார்கள். தமிழன்பன் அவர்களை நிமிர்ந்து நோக்கினார்.

''வேலப்பா, ஆசைத்தம்பி! நீங்கள் தனியாகச் சென்ற சுற்றுலாவைப் பற்றி எனக்கு எதுவுமே சொல்லவில்லையே!''

இருவரும் மௌனமாய்த் தலை குனிந்து நின்றார்கள்.

''பரவாயில்லை. இப்போது சில படங்களைக் காட்டுகிறேன். அவை உங்கள் படங்கள்! அவை உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் அல்லவா?''



'நாம் எடுத்த படங்கள் புத்தகப் பையில் இருக்கின்றன. இவர் எதைக் கூறுகிறார்?'

''ஆல்பத்தில் பாதுகாப்பாக வைத்திருக்கிறோம். பாருங்கள்!''

வாங்கிப் பார்த்தார்கள். அவர்களுடைய படங்கள்தாம். கைகளில் காமிராவும் பைனாகுலரும். பார்க்கும் போதே மூச்சுத் தினறுவது போல் இருந்தது; உண்மை வெளியாகும்போது எவ்வளவு கசப்பாக இருக்கும்!

அதே நேரத்தில், வளவன் வகுப்பறையில் அவர்களுடைய பைகளைச் சோதனை போட்டு அவற்றிலிருந்த படங்களை எடுத்துக் கொண்டு வந்தார்.

வேலப்பனுக்குவியர்த்தது. ஆசைத் தம்பி நடுங்கிக் கொண்டிருந்தான்.

''வேலப்பா, காவல் நிலையத்தில் உன் மீது புகார் இருக்கிறது. இருந்தாலும் இப்போது கூட உன்னை நான் மன்னிக்கத் தயாராக இருக்கிறேன். காமிரா, பைனாகுலர், டெலஸ்கோப் ஆகியவற்றைக் கொண்டு வந்து கொடுத்து விடு. உன் செயலுக்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்.''

தமிழன்பன் அந்த நேரத்திலும் நிதானத்தை இழக்கவில்லை.

வேலப்பன், வலையில் விழுந்த மானாகத் தவித்துக் கொண்டிருந்தான்.

'இந்த நேரத்தில் தப்பிக்க வழி என்ன?' தீவிரமாக யோசித்தான்.

ஆசைத்தம்பியின் முகத்தைப்பார்த்தான். அது வெளுத்துப்போயிருந்தது. 'சரி, பழியை இவன் மீது போட்டு விடுவோம்.'

''அவை பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது சார். இதெல்லாம் ஆசைத் தம்பியின் காமிராவால் எடுத்த படங்கள் சார்!''

''ஆசைத்தம்பி, உன்னுடைய காமிராவா?'' குரலில் அழுத்தம் தெரிந்தது.

''சார், நான் எல்லாவற்றையும் தெளிவாகக் கூறிவிடுகிறேன்.''

அவனுடைய மாற்றத்தைக் கண்ட தமிழன்பனும் வளவனும் முதுகில் தட்டிக் கொடுத்து, அவனுடைய நடுக்கத்தைப் போக்கினார்கள்.

''சார், வந்து....'' வேலப்பன் குறுக்கிட்டான்.

''வேலப்பா, நீ அமைதியாக இரு. ஆசைத்தம்பி கூற விரும்புவதைத் தயங்காமல் கூறட்டும்.''

ஆசைத்தம்பி தெளிவாகப் பேசத் தொடங்கினான். அந்தச் சமயத்தில் யாரும் எதிர்பாராத முறையில் ஒரு திருப்பம் நிகழ்ந்தது.

ஒரு சைக்கிள் ரிக்ஷா பள்ளியின் வாசலருகே வந்து நின்றது.

வேலப்பனின் தாய் ஆண்டாளும், தங்கை தமிழ்ச்செல்வியும் அதிலிருந்து இறங்கி வந்தார்கள். அவர்களுடைய கைகளில் இரண்டு அட்டைப் பெட்டிகள்!



'''யானைவெடி' கையிலேவெடிச்சிடுச்சு...!''

''ஏண்டா?''

''மதம் பிடிச்சு இருந்திருக்கும் போலிருக்கு, அதான்!''

— வலங்கை ஜி. ராஜசேகர்.

தலைமையாசிரியரின் அறைக்கு வந்து மேசை மீது அவற்றை வைத்தார்கள்.

இவ்வளவு நாளாகப் பலரைச் சோதனைக்குள்ளாக்கிய காமிரா, பைனாகுலர், டெலஸ்கோப் எல்லாம் அவற்றில் இருந்தன!

அருள்மதியும் தமிழ்ச்செல்வியும் சேர்ந்து தீட்டிய திட்டம் நல்ல பலனை அளித்தது.

வீட்டு மாடிப் பகுதியில் மரச்சாமான்கள் போட்டு வைத்திருந்த ஓர் அறையில் வேலப்பன் பெருச்சாளியைப் போல நடமாடிக் கொண்டிருந்தான். தமிழ்ச்செல்வி மறைந்திருந்து அதைக் கவனித்தாள். அருள்மதி, வீட்டுத் தோட்டத்தில் ஆசைத்தம்பி பாதுகாப்பாகத் தேர்ந்தெடுத்த சில இடங்களை நோட்டமிட்டுக் குறித்துக் கொண்டாள்.

நுண்ணறிவைத் துணை கொண்டு சுறுசுறுப்பாகச் செயல்பட்டு வெற்றியை அவர்கள் ஈட்டி விட்டார்கள்.

வேலப்பன் மயக்கம் போட்டு விழாத குறையாக நின்று கொண்டிருந்தான். அங்கு அமர்ந்திருந்த தாயின் முகத்தைப் பார்க்க அவனுக்கு அச்சமாக இருந்தது.

ஆசைத்தம்பி தொடர்ந்தான்: ''சார், மாணவர்களின் சைக்கிள்களில் இருந்து டைனமோ, மணி, விளக்கு போன்றவற்றையெல்லாம் நான்தான் கழற்றிக் கொண்டு போனேன். வீட்டுக்குப் போய் அவற்றை எடுத்து வருகிறேன்; அனுமதி கொடுங்கள்.'' புறப்பட முனைந்தான் அவன்.

''ஆசைத்தம்பி, நீ மனம் திருந்தியதற்காக உன்னைப் பாராட்டுகிறேன். அந்தப் பொருள்களெல்லாம் நேற்றே என்னிடம் வந்து சேர்ந்து விட்டன; உன் தங்கை அருள்மதி கொண்டு வந்து கொடுத்து விட்டாள்.''

அந்தச் செய்தியைக் கேட்க அவனுக்கு மிகவும் வியப்பாக இருந்தது. அருள்மதியின் மேல் அப்போது அவனுக்குக் கோபம் ஏற்படவில்லை. 'அவளாவது அல்லிக் கொடியாக மணக்கட்டும்,' என்று எண்ணிக் கொண்டான்.

தமிழன்பன் அருள்மதியை வரவழைத்தார். ''நீயும் தமிழ்ச்செல்வியும் பள்ளியின் பெருமையை உயர்த்தி விட்டீர்கள்; கறையைத் துடைத்து விட்டீர்கள். அரவிந்தனுடைய குழுவுக்கு இணையாக உள்ளது உங்களுடைய ஆற்றல். 'எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இளைப்பில்லை' என்பதை உறுதிப்படுத்திய உங்களைப் பாராட்டுகிறேன்; வாழ்த்துகிறேன்.''

நெஞ்சாரப் புகழ்ந்துரைத்தார்.

சற்று நேரத்தில், பள்ளிக்கூட வாசலில் காவல் துறையின் ஜீப் வந்து நின்றது. தாமோதரன் இறங்கி வந்தார்.

கடைசி நேரத்தில பள்ளியில்

நிகழ்ந்த திருப்பங்களைத் தமிழன்பன் அவரிடம் எடுத்துரைத்தார். அப்போது ஆண்டாளும் மற்றவர்களும் வேறு ஓர் அறையில் இருந்தனர்.

தாமோதரன், ஆய்வுக்கூடத்தில் கிடைத்த கைரேகைப் பதிவுகள் வேலப்பனுடையவைதாம் என்பதை உறுதிப்படுத்திய சான்றுகளைக் காட்டினார்.

"பகத்சிங்கின் சைக்கிள் வழக்கில் கோலப்பனுக்குத் தொடர்பு இருப்பது தெரிந்தது. அவனை அச்சுறுத்தி விசாரித்ததில் உங்களுக்கு வந்த மொட்டைக் கடிதத்தை எழுதியது அவன்தான் என்று ஒப்புக் கொண்டான். அது மட்டுமல்ல, தியாகராஜனுக்கு மர்மமான முறையில் ஃபோன் செய்து அவரை அச்சுறுத்தியதும் அவன்தான் என்பதையும் கண்டுபிடித்து விட்டோம். அவனைக் கைது செய்து காவல் நிலையத்தில் வைத்திருக்கிறோம். வேலப்பன் மீது எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி யோசித்து வருகிறோம். அவன் இந்தப் பள்ளி மாணவனாக இருப்பதால் உங்களுடைய ஆலோசனையும் எங்களுக்குத் தேவைப்படுகிறது."

தமிழன்பன் வளவனோடு ஆலோசித்தார். விமலானந்தத்தைச் சந்திக்க விரும்பினார்கள். அவர் ஊரில் இல்லை என்று தெரிந்தது.

ஆண்டாள் வேலப்பனோடு வந்தாள். அவளுடைய முகத்தில் துன்பத்தின் சாயல்!

"ஐயா, என் பிள்ளையால் இந்தப் பள்ளிக்கூடத்தின் அமைதியும் நற்பெயரும் எவ்வளவோ கெட்டு விட்டன. உங்களுடைய பொறுமையை அளவுக்கு மேல் சோதித்து விட்டோம். அவனுடைய டி.சி.யைக் கொடுத்து விடுங்கள். அவன் பள்ளிக்கூடத்தில் செய்த திருட்டுக்குக் காவல் துறை முறைப்படி நடவடிக்கை எடுக்கட்டும். அவன் அதற்குப் பின்னராவது திருந்தி நல்லவனாக வாழ்கிறானா பார்க்கலாம்." குரல் தழுதழுத்தது; கண்கள் கலங்கியிருந்தன.

அந்தத் தாயின் பெருந்தன்மையும் பொறுப்புணர்ச்சியும் தமிழன்பனை மிகவும் சிந்திக்க வைத்தன.

வேலப்பன் தலைகுனிந்து நின்று கொண்டிருந்தான்.

தாயின் பண்பையும் மகனின்



செயல்களையும் ஒப்பிட்டுப் பார்த்து வேதனையடைந்தது தாமோதரனுடைய நெஞ்சம்.

''தாமோதரன், ஆண்டாளைப் போன்ற ஒரு தாய்க்கு இப்படி ஒரு பிள்ளையா என்று நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்கள்; இல்லையா? அவன் இந்த நிலைக்கு வர என்ன காரணம்?

''திறமையாளரோடு நம்மை ஒப்பிட்டு, உழைத்து நம்மை வளர்த்துக் கொண்டால் பெருமித உணர்வு தோன்றும்; பெரியவர்களாக ஆகவும் முடியும். பிறரோடு ஒப்பிடும் போது சில நேரத்தில் நம் இயலாமை நமக்கே எரிச்சலைத் தரும். அப்போது வருவதுதான் பொறாமை! அது வராதவாறு விழிப்பாக இருக்க வேண்டும்.

''சப்பாத்திச் செடியைப் போன்றது பொறாமை. அதை அழிக்க முயன்றாலும் முளைத்துப் படர்ந்து கொண்டு போகும். அரவிந்தன் மீது கொண்ட பொறாமையால் வேலப்பன் எதை எதையோ செய்யத் துணிந்து விட்டான். கோலப்பனைத் துணையென்றுதான் நம்பினான். அவனோ கணையாக மாறிவிட்டான். ஆய்வுக்கூடத் திருட்டுக்கு வழிகாட்டிய அவன் சமயம்வாய்க்கும்போதெல்லாம் அதையே சொல்லி, காட்டிக் கொடுத்து விடுவதாக அச்சுறுத்திப் பணம் கறந்திருக்கிறான்.

''வேலப்பன் மிகவும் நல்லவன் தான்! பொறாமை உணர்வும் பொருந்தாத நட்பும் அவனைப் படாதபாடு படுத்தி விட்டன! நாங்கள் அவனை வெறுக்கவில்லை; அவனாகவே திருந்துவதற்கு வாய்ப்புகள் அளித்தோம்; அவனுடைய நன்மைக்காகவே பாடுபட்டு வருகிறோம்.''


தலைமையாசிரியர் கூறியதைக் கேட்ட வேலப்பனின் நெஞ்சம் நெகிழ்ந்தது. உள்ளேயிருந்த இருள் மறைந்து ஒளி தோன்றியது. கண்களில் கண்ணீர் பொலபொலவெனக் கொட்டியது.

அவர் கூறிய எல்லாவற்றையும் கேட்ட ஆண்டாள் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தாள்; பேச நா எழவில்லை.

''அம்மா, உங்கள் பையனைப் பள்ளியை விட்டு நீக்க வேண்டும் என்பது எங்கள் விருப்பமல்ல. அவனும் இந்த அழகிய தோட்டத்தில் சிறகடித்து, இனிய குரலெழுப்பும் வானம்பாடியாகத் திகழ வேண்டும் என்பதுதான் எங்கள் ஆசை. அவனிடம் ஆற்றல்கள் உள்ளன. காட்டாற்று வெள்ளம் நாட்டுக்குப் பயன்பட அணை உதவுவது போல மனித வளம் சமுதாயத்துக்குப் பயன்படப் பள்ளி உதவுகிறது. வேலப்பன் எதிர்காலத்தில் நிச்சயமாக ஓர் அறிஞனாகவோ, விஞ்ஞானியாகவோ, தலைவனாகவோ விளங்குவான். எல்லாவற்றுக்கும் மேலாக அவன் மனித நேயம் மிக்க ஒரு நல்ல மனிதனாக ஒளி விடுவான். அறிவை வளர்ப்பதோடு மனிதப் பண்பையும் வளர்ப்பதுதான் எங்கள் பணி. அவனை முழுமையான மனிதனாக்க எங்களுக்கு வாய்ப்பு நல்குங்கள்.''

அவருடைய வேண்டுகோள் அவளுடைய இதயத்தில் சிலிர்ப்பை ஏற்படுத்தியது; கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

காவல் நிலையத்திலிருந்த வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொள்வதாகத் தமிழன்பன் அறிவித்தார். அந்த அறிவிப்பு எல்லோரையும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. குறிப்பாக, தாமோதரன் மிகவும் ஆனந்தமடைந்தார். 'மனிதப் பண்புகள் வளர வளரக் காவல் நிலையங்களின் வேலை எளிதாகி விடும்', என்பது அவருடைய எண்ணம். அந்தப் பண்பை வளர்க்கத் தமிழன்பனும் மற்றவர்



நம்மால் கேட்க முடியாத சங்கேத ஒலிகளைப் பயன்படுத்தி யானைகள் பேசுகின்றன என்று கென்யா, ஜிம்பாப்வே, நபீபியா ஆகிய நாடுகளில் ஆராய்ச்சியாளர்கள் செய்த சோதனைகளில் தெரிய வந்துள்ளது. மிக நவீன மின்னணு ஒலிப்பதிவுக் கருவிகளை யானைகளின் காதுகளில் எல்லாம் பொருத்தி, சோதனையை மேற்கொண்டனர். ஓரிடத்தில் உள்ள யானைகள் பல மைல்களுக்கு அப்பால் உள்ள யானை

யானைகள் பேசுமா?

களுக்கு நாம் கேட்க முடியாத ஒலியைப் பயன்படுத்திச் செய்திகளைத் தெரிவிக்கின்றனவாம்.

ஒரு யானைக் குடும்பத்தை நான்கு இடங்களில் பிரித்து வைத்தார்களாம். பின்னர் அவை ஒரே நீர் நிலையில் ஒன்று சேர்ந்தனவாம். இதிலிருந்து அவை ஒலியைப் பயன்படுத்தி, பேசிக் கொள்கின்றன என்பது தெளிவாகிறது. ஆண் யானைகளைவிடப் பெண் யானைகளே அதிகம் பேசுகின்றனவாம். தங்கள் குட்டிகளுக்குக் கட்டளை இடுவதனால் பெண் யானைகள் அதிகம் பேசுகின்றன.

— என். ஸ்ரீவித்யா, கோபாலசமுத்திரம்.

களும், சிந்தனையாலும் செயலாலும் பாடுபட்டதை அவர் நன்கு அறிவார்!

''தமிழன்பன்! வேலப்பனுக்குக் கோலப்பன் கொடுத்த பயிற்சியும், விதைத்த தீய கருத்துக்களும் உள்ளத்தில் வலுவாகப் பதிந்து விட்டதால், அவனை நல்ல நிலைக்குக் கொண்டு வர இவ்வளவு முயற்சிகள் தேவையாகி விட்டன. 'டி.சி.' கிழித்துக் கொடுப்பதன் மூலம் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டு விடப் போவதில்லை. வெளி உலகத்தில் அவன் பிரச்னைக்குரிய மனிதனாக மாறி விடுவான். எல்லாவற்றையும் உணர்ந்து பார்த்து நீங்கள் கையாண்ட அணுகுமுறை பாராட்டுதலுக்கு உரியது.

தாமோதரன் மனநிறைவோடு பாராட்டினார்.

தமிழன்பன் உள்ளன்போடு நன்றி தெரிவித்தார். ''காவல் நிலையத்தில் இருந்தாலும் உங்களுடைய கருணைப் பார்வை பள்ளியின் மீது இருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி தருகிறது. காவல் துறையோடு கல்வித் துறையிலும் நீங்கள் காட்டுகின்ற அக்கறை போற்றுதலுக்குரியது!''

பியானோ ஓசை கேட்டது. பகத் அவனுடைய ராசியான 'அட்லஸ்' சைக்கிளைச் சீர் செய்து பளபளப்பாகச் சிவப்பு வண்ணம் அடித்து, முன்பு போலவே மலர்ந்த முகத்தோடு பள்ளிக்கு வந்தான்.

''வேலப்பா, ஆசைத்தம்பி!'' பகத்தின் குரலைக் கேட்டு அவர்கள் ஓடி வந்தார்கள்.

''இந்த இடத்தில் ஒரு சிறிய பூங்கா அமைக்க விரும்பினேன். தலைமையாசிரியர் அனுமதி கொடுத்து விட்டார். நீங்களும் வந்தால் நாம் விரைவாக உருவாக்கி விடலாம்.''

அவனுடைய சொற்களில் அன்பும் நட்பும் கரம் நீட்டின.

பகத்தின் திட்டப்படி அங்கே அழகிய பூங்கா உருவாகிக் கொண்டிருந்தது. வேலப்பனும் ஆசைத்தம்பியும் ஆர்வத்தோடு பாடு பட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த அன்புச் சூழல் எல்லோருடைய கண்ணுக்கும் விருந்தாக அமைந்தது.

அரவிந்தன் காமிராவைத் தோளில் மாட்டியபடி அங்கே வந்தான். அவனைக் கண்டதும் வேலப்பனுடைய முகம் மலர்ந்தது.

''அப்படியே இருங்கள், நான் ஒரு படம் எடுக்கிறேன்.''

எல்லோரும் மலர்களாகச் சிரித்தார்கள்.

''வேலப்பா! நேரு பிறந்த நாளன்று அறிவியல் கண்காட்சியைத் தொடங்கி விட வேண்டும் என்று தலைமையாசிரியர் கூறியிருக்கிறார். பூங்கா வேலை முடிந்ததும் எல்லோரும் அறிவியல் கழகத்திற்கு வாருங்கள். சிறந்த கருத்துக்களை, திட்டங்களைக் கூற வேண்டும். எல்லாவிதத்திலும் சிறந்ததாக இக் கண்காட்சி அமைய நாம் பாடுபட வேண்டும்.''


''அரவிந்தா! இந்தக் கண்காட்சியைப் போல் இதுவரை எந்தப் பள்ளியிலும் நடந்ததில்லை என்று சொல்லும்படி அற்புதமாக அமைத்து விடுவோம்.''

ஆர்வம் கொண்ட அரவிந்தனுடைய கரங்களை அன்போடு பற்றிக் கொண்டான் வேலப்பன்.

அரவிந்தனுடைய உள்ளம் ஆனந்தப் பண் இசைத்தது. ராமு, பீட்டர், பகத், அலி, ஆசைத்தம்பி எல்லோருக்கும் அந்தக் காட்சி தேனாக இனித்தது.

(முற்றும்)

பிருந்தாவனக்



அறிவினான் ஆகுவதுண்டோ
பிறிதின் நோய்
தந்நோய் போற் போற்றாக்கடை,'

என்னும் குறளைத் தமிழாசிரியர் நடத்தி முடித்த போது, ரங்கன் தூக்கத்தின் உச்சியில் இருந்தான். "ரங்கா!" எனக் கோபத்தோடு அழைத்த ஆசிரியர், "இக் குறளின் பொருள் என்ன?" என்று கேட்டார்.

மெல்லத் தூக்கத்திலிருந்து மீண்ட ரங்கன் பொருள் தெரியாது விழித்தான்.

"ராமு, நீ சொல்," என ராமுவிடம் கேட்டார்.

"பிறிதோர் உயிரின் துன்பத்தைத் தனக்கு வந்த துன்பம் போல் கருதி, அதிலிருந்து அவ்வுயிரை மீட்கா விட்டால் ஒருவன் பெற்றுள்ள அறிவினால் எப் பயனும் இல்லை," என்றான் ராமு.

"மிகச் சரியான விடை," என்ற ஆசிரியர், ரங்கனைப் பார்த்து, "நீ படிப்பில் அதிக சிரத்தை எடுக்கா விட்டால் அடுத்த வருடமும் இந்த வகுப்பில்தான் படிக்க வேண்டும்," என்றவர், ராமுவிடம் ரங்கனுக்குப் படிப்பில் உதவி செய்யுமாறு கூறினார்.

ரங்கனை நோக்கி ஓர் ஏளனப் பார்வையை வீசினான் ராமு. அவர்கள் இருவரும் எட்டாம் வகுப்பு மாணவர்கள். ராமு வகுப்பில் முதல் மாணவன். ரங்கன் படிப்பில் பின்தங்கியவன். ராமுவிற்கு ரங்கனை மட்டம் தட்டுவதில் ஒரு தனி இன்பம் உண்டு.

பள்ளி முடிந்ததும் ராமு வேகமாக நடந்து கொண்டிருந்தான். நடந்தான் என்பதை விட ஓடினான் என்பதே சாலப் பொருந்தும். அவர்கள் வீட்டில் அனைவரும் அன்று பொருட்காட்சிக்குச் செல்ல இருந்ததே அதற்குக் காரணம். அப்பொழுது கால் ஊனமுற்ற ஒரு கிழவி சாலையைக் கடக்க இயலாமல் திண்டாடிக் கொண்டிருந்தாள். யாரும் அவளுக்கு உதவ முன் வரவில்லை.

ராமுவைக் கண்டதும் அவள், "தம்பி, என்னை அந்தப் பக்கம் விட்டுடுப்பா," என்று கெஞ்சிக் கேட்டாள்.

ராமுவின் வீட்டிற்குச் செல்ல சாலையைக் கடந்தாக வேண்டும். ஆனாலும் அவன், "போ, கிழவி எனக்கு வேறு வேலையில்லே," என்று எரிச்சலுடன் கூறி விட்டுத் தன் வழியே நடந்தான்.

அவனுக்குப் பின் வந்து கொண்டிருந்த ரங்கன் தானாக முன்வந்து அந்தக் கிழவிக்கு உதவினான். அவள் அவனை வாயார வாழ்த்தி விட்டுச் சென்றாள்.

தங்களுக்குப் பின்னால் வந்த தமிழாசிரியர் இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்ததை ராமுவோ அல்லது ரங்கனோ பார்த்திருக்க நியாயமில்லைதான்.


மறுநாள், ராமுவையும், ரங்கனையும் கூப்பிட்டனுப்பினார் தமிழாசிரியர். ராமுவை நோக்கி, "நான் நேற்று நடத்திய குறளின் பொருளை நீ நன்கு அறிந்திருந்தும், அந்த முதியவளின் துன்பத்தை நீக்க நீ முன் வரவில்லை. ஆனால் அக் குறளின் பொருளை அறியாத ரங்கன் தானாகவே உதவினான். நீ பெற்றுள்ள அறிவினால்

கதையரங்கம்

என்ன பயன்?'' என்று கோபத்தோடு கேட்டார்.

தன் தவற்றினை உணர்ந்த ராமு வெட்கித் தலைகுனிந்தான்.

— ம. நீலமலர்.



கந்தனும், வேலனும் இணை பிரியா நண்பர்கள். எட்டாவது வகுப்பில் பயின்று வந்தனர். இவர்கள் இருவரின் வீடும் அருகருகே இருந்தது. இருவரில் வேலன் நல்ல படிப்பாளி. அடக்கமாகவும் அன்பாகவும் இருப்பான்.

கந்தனும் நன்றாகப் படிப்பான். ஆனால் அவனிடம் பொறாமைக் குணம் மிகுதியாக இருந்தது.

ஒரு முறை வேலன் எல்லாப் பாடத்திலும் முதல் மதிப்பெண் எடுத்து, முதல் தரத்தையும் எடுத்து விட்டான். ஆனால் ஏனோ தெரியவில்லை, கந்தனால் அந்தத் தடவை மட்டும் பத்தாவது தரம்தான் எடுக்க முடிந்தது.

இதனால் கந்தனுக்கு வேலன் மீது மிகவும் பொறாமை எழுந்தது. அவனுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்று துடித்தான்.

இந்தச் சமயம் கந்தன், வேலன் இருவருக்கும் பக்கத்தில் அமர்ந்திருந்த ராஜூ என்ற சிறுவன், தனது மாமா பம்பாயிலிருந்து அனுப்பியதாக ஒரு பொன் கலர் பேனா எடுத்து வந்து காட்டினான். அதனைக் கண்ட அனைவரும் அவனைப் பாராட்டிப் புகழ்ந்தனர்.

இதன்பின் ஒரு வாரம் கடந்தது. அப்பொழுது கந்தனுக்கு ஒரு சதி யோசனை தோன்றியது. அதன்படி அன்று மதியம் செய்து முடிக்கத் திட்டமிட்டான்.

அப்போது பள்ளியில் ஒரு மீட்டிங் நடைபெற்றது.

அப்போது கந்தன் கடைசி வரிசையில் அமர்ந்து கொண்டான். மீட்டிங் நடந்து கொண்டிருக்கும் போது இடையில் ஒருவருக்கும் தெரியாமல் எழுந்து சென்றான், ராஜூவின் பையிலிருந்த பொன் கலர் பேனாவை எடுத்தான். யாரும் கவனிக்காத நேரத்தில் அந்தப் பேனாவை வேலனுடைய பையில் வைத்து விட்டுத் திரும்பி வந்து மீட்டிங்கில் கலந்து கொண்டான்.

கூட்டம் முடிவுற்றது. எல்லா மாணவர்களும் தத்தம் வகுப்புக்குச் சென்றனர், கந்தனும் ஒன்றும் தெரியாதவன் போல் சென்று அமர்ந்து கொண்டான்.

அப்போது ராஜூ தனது பையில்


பேனா இல்லாததை ஆசிரியரிடம் சொன்னான்.

ஆசிரியர் அனைவர் பையையும் பார்க்கும்படி உத்தர விட்டார். அந்தப் பேனா கந்தன் பையில் இருந்தது! கந்தனுக்கு ஒரே அதிர்ச்சி. வேலனின் பையில் தான் வைத்த பேனா கந்தனின் பைக்கு எப்படி வந்தது?

கந்தன், வேலன் இருவரும் எது வாங்கினாலும் ஒரே மாதிரி வாங்குவது வழக்கம். அதன்படி இருவரும் ஒரே கலர் பை வாங்கி இருந்தனர். அவசரத்தில் வேலன் பை என எண்ணி, தன் பையில் வைத்துக் கொண்ட தனது புத்தியை எண்ணிக் கந்தன் வருந்தினான். இருந்தாலும் தனக்கிருந்த பொறாமையால் தான் இப்படி அவமானப் பட்டோம் என்று தோன்றியது. அன்று முதல் அந்தப் பொறாமை என்னும் பேயை அடியோடு கைவிட்டான்.

ஏ. மேரிசகாயராணி.

கிருஷ்ணன் உதவி



ஓர் அடர்ந்த காட்டில் ஒரு துறவி வாழ்ந்து வந்தார். அவர். பன்னிரண்டு ஆண்டுக்கொருமுறை ஒரு பழத்தைச் சாப்பிடுவார். அதற்கிடையில் அவர் உண்ண மாட்டார்.

அந்த முனிவர் தவமும் பன்னிரண்டாவது ஆண்டை நோக்கி வந்து கொண்டிருந்தது. அப்போது அர்ச்சுனன். அந்தப் பழத்தைக் கண்டான். அந்தப் பழத்தின் மீது நாட்டம் கொண்டு அதைத் தன் அம்பால் குறி பார்த்து அடித்தான். பழம் கீழே விழுந்தது.

அர்ச்சுனன் ஓடிச் சென்று அப் பழத்தை எடுத்தான். அது அவனுடைய முழங்காலுக்கு மேல் வரவில்லை. அவன் தன் சகோதரர்கள் எல்லோரையும் அழைத்து. பழத்தைத் தூக்கச் செய்தான். மகா பலசாலியான பீமனும் தூக்கினான். அவனாலும் அந்தப் பழத்தை முழங்காலுக்கு மேல் தூக்க முடியவில்லை.

கடைசியில தர்மர் இது துறவி சாப்பிடும் பழம் என உணர்ந்து. கிருஷ்ணனை நினைக்கவே. கிருஷ்ண பரமாத்மா அங்கு வந்தார். நிலைமையை அறிந்தார். அவர். "இதை நீங்கள் பழைபடி மரத்தில் ஒட்ட வைக்கவில்லையெனில், துறவி உங்களைக் கல்லாகவும், மண்ணாகவும் கோபத்தால் சபித்து விடுவார்," எனக் கூறினார்.

இதைக் கேட்ட பாண்டவர்கள் அஞ்சினர். அர்ச்சுனன் கிருஷ்ணனை நோக்கி, "கேசவா! உன் பாதங்களில் யாங்கள் சரணடைந்தோம். நீயே எங்களைக் காப்பாற்றுவாயாக," எனக் கெஞ்சினான்.

கிருஷ்ணர் உடனே, "உற்றது சொன்னால் அற்றது பொருந்தும்," எனக் கூறினார். (உற்றது = உண்மை).


இதைக் கேட்டவுடன் அர்ச்சுனன், "நான் கர்ணனை கொல்வேன்," என்றான்.

பீமன், "என் கதையால் துரியோதனைக் கொல்வேன்," எனக் கூறினான்.

இவ்வாறு ஒவ்வொருவரும் ஒவ்வொன்றாகக் கூற, பழமானது கொஞ்சம் கொஞ்சமாக மேல் ஏறி மரக் கிளையில் ஒட்டிக் கொண்டது. அர்ச்சுனன் தங்களைக் காப்பாற்றிய கிருஷ்ணன் காலில் விழுந்து மரியாதை செலுத்தினான்.

— ஏ. மாதவன்.

பருத்தியூரில் பரம ஏழை ஒருவன் வாழ்ந்து வந்தான். பல விஷயங்களை முன்கூட்டியே யோசித்துச் சரியாகச் சொல்லும் ஆற்றல் பெற்ற புத்திசாலியாய் அவன் விளங்கினான். அவன் பெயர் பூமிநாதன்.



ஒருநாள் அவ்வூர் பண்ணையார் ராஜமாணிக்கத்தின் வீட்டில் நகை திருட்டுப் போய் விட்டது. பூமிநாதன் புத்திசாலித்தனத்தைக்கேள்விப்பட்ட பண்ணையார், திருடனைக் கண்டு பிடித்துத் தருமாறு கேட்க அந்த ஏழையின் வீட்டுக்குச் சென்றார். திருட்டுப் போன விவரத்தைச் சொல்லி, திருடனைப் பிடித்து தரு மாறு கேட்டதற்கு அவன் அமர்த்த லாகச் சொன்னான்: ''இது ஒன்றும் பெரிய காரியமில்லை நான் திருட னைப் பிடித்தால் எனக்கு என்ன தரு வீர்கள்?''

''நகையின் மதிப்பில் பத்தில் ஒரு பங்கு — இரண்டாயிரம் ரூபாய் தரு வேன்,'' என்றார் அவர்.

ஏழையும் அதற்குச் சம்மதித்தான்.

பண்ணையார் வீட்டுக்கு ஒரு சேவ லுடன் வந்தான் அவன். பண்ணை யார் வீட்டில் வேலை செய்யும் அனைத்து வேலையாட்களையும் அழைத்து, அவர்களிடம் அந்தச் சேவலைக் காட்டி, ''இது ஓர் அற் புதச் சேவல். அனைவரும் சென்று இதன் தலையை இடது கையால் தடவி வாருங்கள். திருடன் தடவும் போது மட்டும் கத்தும்,'' என்று கூறி னான்.

ஒருவர் பின் ஒருவராக சென்று, அந்தச் சேவலின் தலையைத் தடவி விட்டு வந்தார்கள். சேவல் கத்தவே இல்லை. முடிவாக அவன் —

''எங்கே அனைவரும் இடது கையை மேலே தூக்கிக் காட்டுங் கள்,'' என்றான்.

பார்த்துக் கொண்டே வந்தான். ஒருவனைத் தவிர அனைவர் கையி லும் கரி இருந்தது!

அவனைப் பண்ணையார் எதிரே இழுத்து நிறுத்தி, ''இதோ, உங்கள் திருடன்,'' என்றான்.

அவனும் உடனே பண்ணையார் காலில் விழுந்து, ''எசமான், என்னை மன்னிச்சிடுங்க,'' என்று குற்றத்தை ஒப்புக் கொண்டதோடு, திருடிச் சென்ற நகையையும் கொண்டு வந்து சேர்த்தான்.

பண்ணையாருக்கு ஒரே ஆச்சரி யம். ''திருடனை எப்படிக் கண்டு பிடித்தாய்?'' என்று பூமிநாதனிடம் கேட்டார்.

பூமிநாதன் சொன்னான். ''இது சாதாரணச் சேவல்தான். இதன் தலையில் கரியைத் தடவிக் கொண்டு வந்தேன். திருடன் கை பட்டால் கத்தும் என்றதும் திருடாதவர்கள் தைரியமாய்க் கை வைத்தார்கள். அதனால்தான் அவர்கள் கைகளில் எல்லாம் கரி படிந்திருந்தது. திருடின வன், 'எங்கே நம் கை பட்டால் சேவல் கத்தி நம்மைக் காட்டிக் கொடுத்து விடுமோ' என்று பயந்திருக் கிறான். அவன் கை வைக்கிற மாதிரி பாவனை பண்ணியிருக்கிறான். அத னால்தான் அவன் கையில் மட்டும் கரியில்லை. புரிகிறதா?'' என்றான்.

''புரிகிறது,'' என்ற பண்ணையார், திருடன் பிடிபட்டதற்காக இரண் டாயிரமும் அவனுடைய புத்திசாலித் தனத்துக்காக மேலும் ஆயிரமும் சேர்த்துக் கொடுத்தார்.

— ஜே. எஸ். வாசுகி, புதூர்.

பொல்லாத அரக்கனும் பூனையும்

கதை: மழலைக் குறும்பன்



ஒரு காட்டில் ஒரு குகை. அந்தக் குகையில் ஓர் அரக்கன். நினைத்த பொழுது நினைத்த வடிவம் எடுத்துக் கொள்ளும் ஆற்றல் பெற்றவன். முயலை இரையாக்கிக் கொள்ள வேண்டும் என்றால் நரி ஆவான். மானைத் தின்னப் புலி ஆவான். இப்படி அவன் வனவிலங்குகளை வேட்டையாடத் தொடங்கவே அவற்றுக்குக் கிலி பிடித்துக் கொண்டது.

எப்படியாவது அவனைத் தீர்த்துக் கட்ட வேண்டும் என்ற நினைவு. ஆனால் பகாசுரனுக்கு எமனாக வந்த பீமனைப் போல் யார் முன் வருவார்கள்? பூனைக்கு மணி கட்ட முயன்ற எலிகளாக எல்லா மிருகங்களுமே ஓடி ஒளிந்தன.

'ஆற்றிலும் சாவு, தூற்றிலும் சாவு. வெற்றி கிடைத்தால் வனவிலங்குகளின் வாழ்த்தைப் பெறுவேன். தோல்வியைத் தழுவினால் அரக்கனுக்கு உணவு ஆவேன். நித்தம் நித்தம் அஞ்சிச் சாக வேண்டியது இல்லை அல்லவா?' — இப்படி நம் பூனை முடிவு எடுத்தது.





என்றாலும் பிரியா விடையாக எல்லா மிருகங்களிடமும் இறுதி விடைபெற்றுக் கொண்டு அரக்கனை அவன் குகையிலேயே சந்திக்கச் சென்றது.

"உனக்கு என்ன துணிச்சல்? முடிவு காலம் நெருங்கி விட்டதா?" என்று கர்ஜித்தான் அரக்கன்.

"இல்லை... ஆமாம்..." என்று உளறிய பூனை சற்றுச் சமாளித்துக் கொண்டு, "நீங்கள் பல வடிவம் எடுப்பீர்களாமே! உங்களிடம் அந்த வித்தையைக் கற்றுப் போகலாம் என்று வந்தேன்!" என்று முடித்தது.

"நடவாத காரியம்! ஆனால் உன் கண்ணெதிரே யானையாகிக் காட்டுகிறேன், பார்!" என்று கூறிய மாத்திரத்திலே அரக்கன் யானையானான்.





"ஐயோ! காலடியில் நசுங்கிச் செத்து விடுவேன். பழைய வடிவத்தையே எடுத்துக் கொள்ளுங்கள்!" என்று கெஞ்சியது பூனை.

"புலியாக..." என்று கூறிய உடனே புலியாகச் சீறினான் அரக்கன்.

"வேண்டாம், வேண்டாம்! அரக்க வடிவமே தேவலை!" என்றது பூனை. அரக்கனாக நின்றவனிடம், "எலிகள் எல்லாம் கூட்டம் போட்டு என் கழுத்தில் மணி கட்டப் பார்த்தனவாம். முடியவில்லை என்றாலும் என்னைக் கண்டு ஓடி ஒளியத் தொடங்கி விட்டன. எனக்கு எலி உணவு குதிரைக் கொம்பாகி விட்டது. நாக்கே செத்து விட்டது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! எலியாகும் ரகசியத்தை மட்டும் எனக்குக் கற்றுத் தாருங்கள். எலிகளோடு எலியாகித் தருணம் பார்த்துப் பூனையாகி அவற்றைக் கபளீகரம் செய்ய உதவும். உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு!" என்றது.



"இப்படி எலியாக வேண்டும்!" என்று கூறிய அரக்கன் எலியானான். அடுத்த கணம் பூனையின் வாயில் புகுந்து வயிற்றுக்கு உணவானான்.

காட்டுத் தீயென இச்செய்தி பரவவே, வனவிலங்குகள் பெரும் பாராட்டுக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தன.



"எலிகளை ஓட ஓட விட்டுப் பிடித்துப் பிடித்து வேடிக்கையாக உயிரை வாங்கி இரையாக்கிக் கொள்வதுதான் எங்கள் வழக்கம். ஆனால் இந்தச் சுரங்க எலியை சம்ஹாரம் செய்ய ஒரே விழுங்காக விழுங்கி விட்டேன். எனவே சற்றும் ருசிக்கவில்லை!" என்று கூறிக் கொண்டிருந்த பூனையின் கண்களில் எலிகள் பட்டுவிட்டன. ஒரே குதியாகக் குதித்து அவற்றை வேட்டையாட ஓடிவிட்டது.

அட்டை வண்ணப்படம்:
ஏ. வி. பாஸ்கர்.



சார் தபால்!

அக்டோபர் தனிச்சிறப்பு

வருடத்திலேயே இந்த அக்டோபருக்கு ஒரு தனிச் சிறப்பு உண்டு', என்று ஆரம்பித்து, 'நாம் மகாத்மாவாக இயலாது. ஆனால் மகாத்மாக்களின் வாழ்க்கைப் பேறும் நல்ல பிரஜையாக முடியும்' என்று கூறி மகாத்மாவின் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை விளக்கிக் கூறியது அருமையிலும் அருமை.

தஞ்சாவூர் — 9, வி. இராதாகிருஷ்ணன்.

* நம் தேசத் தந்தை மகாத்மாவை வைத்து என் போன்ற மாணவர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ள எமது தேசபந்து சாருக்கு எனது வாழ்த்துக்கள்.

மொரப்பூர், ச. உமர்கான்.

* 'கோடை காலத்துப் பயிர்' அருமையிலும் அருமை. அக்கதையைப் படித்தவுடன் அழாதவர்கள் கூட அழுது விடுவார்கள்.

சென்னை — 88, இரா. மணிகண்டன்.

* 'சொன்னால் கேட்கணும்' என்னும் பிருந்தாவனக் கதையரங்கச் சிறுகதையின் மூலம் வயதுக்கு மீறிய ஆசை — அதாவது பேராசை — கொள்ளுதல் கூடாது என்பதை அனுபவ பூர்வமாய் அறிந்தது போல இக் கதையிலிருந்து அறிந்தேன்.

புதுவை — 106, சி. இராஜகோபாலன்.

* இவ்வளவு இளம் வயதிலேயே இத்துணை தன்னம்பிக்கையும் திறமையும் கொண்ட அட்டைப்படக் குட்டி வித்துவான் விஜய் நிச்சயம் வருங்காலத்தில் ஒரு வயலின் வித்துவான்தான்.

வந்தவாசி, சா. இரா. மணி.

* 'மேதைகள்' நன்றாகவே என்னைச் சிரிக்க வைத்தார்கள். கவிதை சொல்லும் கதைகளும், 'சிரிகள் விஷயமும், பிருந்தாவனக் கதையரங்கமும் படித்ததும் சிரிக்க வைத்து வயிற்றில் 'வலி' எடுத்து விட்டது. கோகுலத்தில் சிரிப்புப் பக்கங்கள் அதிகமாகி வருவதைக் கண்டு மிகவும் சந்தோஷப்படுகிறேன்.

மொரப்பூர், மு. திருநாவுக்கரசு.

* மறைந்த பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் பெருமைகளை உணர்த்தும் 'சிவப்புத் தொப்பி' நல்ல நகைச்சுவையாக இருந்தது. இருந்தாலும் அதில் ஒரு தவறு நேர்ந்துள்ளது. எழுத்தாளர், பாரதத்திலேயே பெரிய மாநிலம் உத்திரப் பிரதேசம் என்று குறிப்பிட்டுள்ளார். பாரதத்தின் மிகப் பெரிய மாநிலம் மத்தியப் பிரதேசம் ஆகும்.

சென்னை, கே. பாலாஜி.

* ஏன் சார், எங்களை என்ன ஏமாளின்னு நினைச்சீங்களா? அக்டோபர் மாத கோகுலத்தில் 93 — ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள ஜோக், ஏற்கெனவே ஆகஸ்ட் மாத கோகுலத்தில் வெளிவந்து விட்டது. சரிதானே?

கவுண்டம்பாளையம், கே. ரமேஷ்.

* ஆணவம் அடக்கப்படும். கர்வம் ஒடுக்கப்படும் என்பதற்கு ஏற்ப 'இந்திரனை வென்ற உக்கிரபாண்டியன்' 16 பக்க வண்ணப்படக் கதை வெகு சிறப்பாக எடுத்துக் காட்டியது.

புதுக்கோட்டை, கே. சின்னையா.

* பாரதியார் பாடல் வரிகளை ஏற்கெனவே படித்ததுதான் என்றாலும், அதை வைத்து 'இன்று புதிதாய்ப் பிறந்தோம்' கதை சொன்ன விதம் அருமையாய் இருந்தது. முதலில் இவ்வரிகளைப் பேப்பரில் எழுதி தினக்காலண்டரில் ஒட்டி விட்டேன். மனத்தில் புத்துணர்ச்சியூட்டியமைக்கு நன்றி.

வேலூர், ரமா சந்திரசேகர்.


* அக்டோபர் மாத இதழில் வந்த சிறுகதைகளோ ஏராளம், எங்கள் மனமோ கும்மாளம், தங்கள் மனமோ தாராளம், தொடரட்டும் இந்தக் கொட்டுமேளம்.

கடலூர் — 1, பெ. அருள்.

டாக்டர் பக்கம்

சளி பிடிப்பது எதனால்?

....டாக்டர். கு. கணேசன்



புனிதாவுக்கு வயது பன்னிரெண்டு. எழாம் வகுப்பில் படிக்கிறாள். புத்திசாலிப் பெண். இவ்வருட காலாண்டு விடுமுறையில் புனிதாவும் அவள் தாத்தாவும் என் வீட்டிற்கு வந்திருந்தனர். வந்த இரண்டாம் நாளில் அவள் தாத்தாவிற்கு சளி பிடித்து விட்டது. அதைப் பற்றி அவர் கூட கவலைப் படவில்லை. ஆனால் புனிதா, 'சளி ஏன் பிடிக்கிறது? எப்படிப் பிடிக்கிறது?' என்று என்னைப் பிலுபிலுவெனப் பிடித்துக் கொண்டாள். நானும் அவளுக்குப் பொறுமையாகப் பதில் சொன்னேன்.

அப்போது எங்களுக்குள் நடந்த உரையாடலைத்தான் இப்போது நீங்கள் படிக்கப் போகிறீர்கள்...

புனிதா : மாமா, சளி என்பது என்ன? அதைப் பற்றி எனக்கு சொல்லுங்களேன்.

நான் : சளி என்பது ஒரு அசுத்தப் பொருள்: நம் சுவாசப் பாதையில் அது உண்டாகிறது. சளி பல நோய்களால் உண்டாகலாம். அதைப் பொறுத்து, பாதிக்கப்படுபவரின் சளி கட்டியாகவோ, மஞ்சளாகவோ, வெள்ளையாகவோ இரத்தம் கலந்தோ அல்லது கலக்காமலோ வரலாம்.

புனிதா : நமக்கு சளி ஏன் பிடிக்கிறது, மாமா?

நான்: சளி பிடிப்பதற்குக் கிருமிகள்தான் காரணம். அசுத்தமான காற்று மண்டலத்திலும், அசுத்தமான நீரிலும் ஸ்டெரப்டோகாக்ஸ், நியூமோகக்கஸ், ஹிமோபிளஸ், இன்புளுயென்சா; என்ற காச நோய் கிருமிகள், மைக்கோபாக்டீரியம் டியூபர்குலோசிஸ் என்ற காச நோய்க் கிருமிகளும், சிலவகை வைரஸ் கிருமிகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. இவை நம் உடலுக்குள் செல்லும் போது சளியை உண்டாக்குகிறது.

புனிதா : இந்நோய்க்கிருமிகள் சளியை எப்படி உண்டாக்குகிறது என்பதையும் எனக்குப் புரியச் செய்யுங்களேன், மாமா!

நான் : நாம் அசுத்தக் காற்றை சுவாசிக்கும் போதும், அசுத்த நீரைக் குடிக்கும் போதும் இக்கிருமிகள் நம் உடலுக்குள் புகுந்து விடும். மூக்கு, தொண்டை, சுவாசப்பை ஆகியவற்றில் வாசம் செய்யும். பின்பு அங்குள்ள 'செல்'களைச் சாப்பி[illegible] ஆ[illegible]



பிக்கும். இச்சமயத்தில் நம் இரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள் அவற்றோடு போராடும். ஒருவருக்கு நோய்எதிர்ப்பாற்றல் அதிகமாக இருந்தால் சளிக்கிருமிகள் அனைத்துமே இப்போராட்டத்தில் இறந்துவிடும். இதனால் அவருக்குச் சளி பிடிப்பதில்லை. அதே சமயம் நோய் எதிர்ப்பாற்றல் குறைந்து இருந்தால் வெள்ளை அணுக்களுக்கும் சளிக்கிருமிகளுக்கும் நடக்கும் போராட்டத்தில் சளிக்கிருமிகள் வெற்றி பெற்று, சுவாசப்பாதையை ஆக்கிரமித்துக்கொள்ளும். இம்மாதிரியான போராட்டத்தில் சுவாசப் பாதையில் இறந்துபோகும் செல்களும், கிருமிகளும், சில அசுத்தங்களும் சேர்ந்து தான் சளியாக வெளியேறும். இதனால் சளிக்கிருமிகள் காற்று மண்டலத்தை அடைந்து மற்றொருவருக்கு சளி பிடிக்க ஏதுவாகும்.

புனிதா : ஒருமுறை என் பக்கத்து வீட்டுப் பாட்டிக்கு சளி பிடித்திருந்த போது சளியில் இரத்தமும் கலந்து வந்தது. மாமா. அது ஏன் என்பதையும் எனக்குச் சொல்லுங்கள்.

நான் : லேசாக சளி பிடிக்கும் போது அதில் இரத்தம் வருவதில்லை. சுவாசப் பாதையில் அதிகமாக சளி கட்டிக் கொண்டாலோ அல்லது காச நோய்க் கிருமிகளினால் சளி பிடித்திருந்தாலோ சளியில் இரத்தம் கலந்து வரலாம். சளிக்கிருமிகள் சுவாசப் பாதையில் உள்ள இரத்தக் குழாய்களையும் அரித்து விடுவதுதான் இதற்குக் காரணம்!

புனிதா : சரி மாமா, எந்தெந்த நோய்களில் நமக்கு சளி பிடிக்கும் என்பதையும் நான் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

நான் : ஜலதோஷம், தொண்டை அலர்ச்சி நோய் **(Pharingitis)**, குரல் வளை அலர்ச்சி நோய் **(Laringitis)**, நிமோனியா **(Pneumonia)**, காச நோய் போன்ற நோய்களில் நமக்கு சளி பிடிக்கிறது.

புனிதா : சளி பிடிக்கும் போது காய்ச்சல், இருமல் போன்றவை வருகிறதே.... அது ஏன், மாமா?

நான் : அதைப்பற்றியும் உனக்கு சொல்கிறேன், புனிதா. சளிக் கிருமிகள் சுவாசப் பாதையின் சிலேட்டுமப் படலத்தை அரித்துப் புண்ணக்கும் போது இருமல் வருகிறது. இருமலின் மூலம் சளியை வெளியேற்றுவதற்கான வாய்ப்பு கிடைக்கிறது. சளிக்கிருமிகள் வெள்ளை அணுக்களை வென்று இரத்தத்தில் கலந்து விடுகின்றபோது காய்ச்சல் வருகிறது. சுவாசப் பையில் சளி சேர்ந்து புண் உண்டாக்குவதால் இருமும் போது மார்பு வலிக்கிறது. இது போல் தொண்டையில் சளி சேரும் போதும் தொண்டை வலி உண்டாகும். சில சமயங்களில் சுவாசப்பையில் அளவுக்கு அதிகமாக சளி சேர்ந்து விட்டால் பாதிக்கப்பட்ட நபருக்கு மூச்சிரைப்பு ஏற்படும்.

புனிதா : ஏன் மாமா, சளி எல்லோருக்குமே பிடிக்குமா?

நான் : ஆமாம் புனிதா. பிறந்த குழந்தையிலிருந்து பெரியவர்கள் வரை அனைவருக்குமே சளி பிடிக்க வாய்ப்பு இருக்கிறது. இருப்பினும் தடுப்பு ஊசிகளை முறையாகப் போடாத குழந்தைகளுக்கும், தாய்ப் பால் சரியாக அருந்தாத குழந்தைகளுக்கும், ஏழ்மையின் காரணமாக சத்துள்ள உணவுகளை உண்ண இயலாத சிறுவர் சிறுமிகளுக்கும், ஜன நெருக்கடி நிறைந்த அசுத்தமான தெருக்களில் வசிப்பவர்களுக்கும்,

சிகரெட், பீடி புகைக்கும் பழக்கத்தில் உள்ளவர்களுக்கும் சளி நிச்சயம் பிடிக்கும்.


புனிதா : சளி பிடித்தவர்கள் என்ன செய்ய வேண்டும், மாமா?

நான் : சளி பிடித்தவர்கள் வெந்நீர் அருந்த வேண்டும். குளிர்ந்த நீரில் குளிக்கக் கூடாது. பனி விழும் இடங்களில் படுக்கக்கூடாது. புகை பிடிக்கக் குடாது. வெந்நீரில் டிங்க்சர் பென்சாயின் **(Tincture Benzoin)** மருந்தை சுமார் இருபது சொட்டுக்கள் விட்டு ஆவி பிடிக்க வேண்டும். சளியில் ஆரம்ப கட்டத்திலேயே மருத்துவரை நாடி சளி பிடிப்பதற்கான காரணத்தை அறிந்து முறையாக மருத்துவம் பெற்றுக்கொள்ள வேண்டும். பொது இடங்களில் சளியை துப்பக்கூடாது. இதன் மூலம் மற்றவர்களுக்கு சளி பரவுவதைத் தவிர்க்கலாம்.


புனிதா : சரி மாமா, சளி பிடிக்காமல் இருக்க நாம் என்ன செய்ய வேண்டும்? அதைப்பற்றியும் சொன்னால் நான் பயன் அடைவேன்...

நான் : எப்போதுமே குடிதண்ணீரைக் கொதிக்கவைத்து ஆற வைத்து உபயோகித்தால் சளி பிடிப்பதை பெரும்பாலும் தவிர்த்து விடலாம். ஒவ்வொருவரும் தாங்கள் வாழும் இடங்களையும், சுற்றுப்புறங்களையும் சுத்தமாக வைத்துக் கொண்டால் சளிக்கிருமிகள் நம்மை அண்டுவதில்லை. குறிப்பாக வீட்டில் தூசு, ஒட்டடை போன்றவை சேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அசுத்தமான இடங்களில் நடப்பதையும், விளையாடுவதையும் தவிர்க்க வேண்டும். புகை பிடிக்கவே கூடாது. சிறுவர்களும் குழந்தைகளும் முறையாகத் தடுப்பு ஊசிகளைப் போட்டுக் கொள்ள வேண்டும். சத்துள்ள உணவுகளை உட்கொண்டு நோய் எதிர்ப்பாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். இம்மாதிரியான தடுப்பு முறைகளை அனைவரும் மேற்கொண்டால் சளி பிடிப்பதைத் தவிர்க்க முடியும்.


புனிதா : நன்றி மாமா. சளி பிடிப்பதைப் பற்றி விளக்கமாக அறிந்து கொண்டேன்.



பாரத அரசின் சுற்றுலா இலாகா



HTA 6401 TAM



* ஆறு. அண்ணாதுரை, பஞ்சை.

கே: சீன நாட்டவர்கள்தான் காகிதத்தைக் கண்டுபிடித்தார்கள். யார் என்று குறிப்பாகச் சொல்ல முடியுமா?



ப: புராதன எகிப்தியர்கள் பேப்பிரஸ் **(papyrus)** என்ற நாணல் போன்ற ஒரு செடி வகையை வெட்டிப் பிரித்து நீட்டிப் பதப்படுத்தி அதில் எழுத ஆரம்பித்தார்கள். அந்தப் பேப்பிரஸிலிருந்துதான் பேப்பர் என்ற சொல்லே பிறந்தது. அதற்காக அவர்கள்தான் பேப்பரைக் கண்டு பிடித்தவர்கள் என்று சொல்ல முடியுமா? இன்றைய பேப்பர் உருவாக்கியவர்கள் நீ குறிப்பிட்டது போல் சீனர்கள்தான். காலம் கி.மு. 105. அப்போது சீன மாமன்னனாய் இருந்த ட்ஸ் அய் லன் **(Ts'ai Lun)** பட்டிலும் மூங்கிலிலும் எழுதுவதில் அலுத்துப் போனான். அதிருப்திப்பட்டான். எழுதுவதற்கு வேறு நல்லதாய் ஏதேனும் தேவை என்று ஆராய்ந்தான். மல்பரி மரத்தினுள் இருக்கும் நடுப் பகுதியை — மெல்லிசாய் வரும் — எடுத்துப் பரப்பி அழுத்தி உலர்த்தி, அதில் எழுத ஆரம்பித்தான். அதுதான் இன்று பயன்படும் காகிதத்தின் துவக்கம். தொடர்ந்து சீனர்கள் உபயோகமற்ற கந்தல் கூளங்கள், நைந்து போன மீன் பிடி வலைகள் இவற்றைக் கொண்டு நல்ல காகிதங்கள் செய்யலாம் என்று கண்டுபிடித்தார்கள். அது ஒருவகை. இன்றைக்கு உலகளாவிய அளவில் 7,000 விதமான காகிதங்கள் செய்கிறார்கள். எந்தக் காகிதமாய் இருந்தால் என்ன, சரியான விடை எழுதித் தேறினால் போதாதா?

* த. இராஜசேகரன், குறிஞ்சிப்பாடி.


கே: பென்சிலைக் கண்டுபிடித்தவர் யார்?

ப: எகிப்தியர்களும் ரோமர்களும்தான் பென்சில் என்று ஒன்றைப் பயன்படுத்த ஆரம்பித்தவர்கள் என்று சரித்திரம் பேசுகிறது. ஆனால் இது காரீயத்தை **(Lead)** வைத்துச் செய்யப்பட்டது. அதைவிட கிராஃபைட் இன்னும் கறுப்பாக எழுதும் என்று பின்னாளில் கண்டுபிடித்தார்கள். அது இன்னார்தான் என்று பெயர் விவரம் தெரியவில்லை. போன நூற்றாண்டில்தான் (1861) நியூயார்க்கில் உலகத்திலேயே முதன் முதலாகப் பென்சில் பாக்டரி நிறுவப்பட்டது. அந்தப் பென்சில் தொழிற்சாலை இன்று வரை தொடர்ந்து நடந்து கொண்டிருப்பதுதான் விசேஷம்.

* ஜி. சுஜாதா கௌரி, (இனி நம்பர் வேண்டாம். அட்ரஸ் ப்ளீஸ்!)

கே: திருமூலர் திருவாவடுதுறையில் ஓர் அரச மரத்தடியில் அமர்ந்து, ஆண்டிற்கு ஒரு பாட்டாக மூவாயிரம் பாடல்களைப் பாடியிருக்கிறார் என்று படித்தேன். அப்படியென்றால் அவர் எத்தனை ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார்? எப்படி மூவாயிரம் பாடல்களைப் பாடியிருக்க முடியும்?

ப: திருமூலரைப் பற்றி மேலும் சுவாரஸ்யமான விவரம் கொஞ்சம் தெரிஞ்சுக்கோ. சுந்தரநாதர் என்ற மகா தபஸ்வி ஒருத்தர் இமயமலையில் குறுமுனியின் எட்டு சீடர்



களில் ஒருத்தராய் இருந்தார். அங்கிருந்து பொதிய மலை திரும்பினார். ஆகமங்களைப் பரப்பும்படி திருவருள் ஆணை. வழியில் திருவாவடு துறையில் அவரைத் தங்க வைக்கச் சிவபிரான் ஒரு தந்திரம் செய்தார். அங்கு மூலன் மூலன் என்று ஒரு மாட்டுக்காரன். அவனை இறந்துபடச் செய்தார். அவனிடம் உயிராய் இருந்த ஆவினங்கள் அவனைச் சுற்றிக் கண்ணீர் சொரிந்த காட்சி தவயோகி சுந்தரநாதரை நெக்குருகச் செய்து விட்டது. அவர் கூடு விட்டுக் கூடு பாயும் உத்தியில் தனது உடலை ஒரு மரப் பொந்தில் விட்டு விட்டு, மூலனின் உடலுக்குள் உயிர் செலுத்தி மூலனாக எழுந்தார். ஆவினங்களுக்கு ஆறுதல் அளித்தார். ஓர் இரவுக்குப் பிறகு திரும்பி வந்து பார்த்தால் மரப் பொந்தில் வைத்த உடல் இறை விதியால் மறைந்து விட்டது. பிறகுதான் திருமூலர் என்ற திருநாமத்தோடு திருமந்திரம் எழுதத் துவங்கிய வருடம் கி.மு. 3100. ஆண்டுக்கு ஒரு பாடலாய் கி.மு. 100 வரை மூவாயிரம் பாடல்களைத் தமிழுக்குத் தந்து விட்டு, கயிலைக்குத் திரும்பி இறையொடு கலந்தார் என்பது வழி வழி வரும் வரலாறு.

தங்கச்சி, நமக்குக் கிடைத்திருக்கும் அரிய நூல்களின் மதிப்பை உயர்த்துவதற்காக அது கிடைத்த வரலாற்றில் இப்படி எத்தனையோ கதை கூட்டுவதுண்டு. அதை எப்படி ஏற்பது என்று ஐயப்படுவது கூடாது. அதை நாம் கவனிக்க வேண்டிய தேவையும் இல்லை. விஷயத்தைக் கவனிக்க வேண்டியதுதான் முக்கியம். வாய்க்கின்ற குரு வகையாய் வாய்க்க வேண்டும். இது பற்றித் திருமூலரே கிண்டல் பண்ணுகிறார், பாருங்கள்:


குருட்டினை நீக்குங் குருவினைக்
கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக்
கொள்வார்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடி
குருடுங் குருடுங் குழிவிழு மாறே.

அதனால் ப்ளீஸ், முதுபெரும் மூலவர்கள் வரலாற்றை ஆராய்வதைக் காட்டிலும் அவர்களது வாக்கிலுள்ள உண்மைகளை ஆராய்ந்து நெஞ்சில் சார வைத்துக் கொள்ளுங்கள். சத்தியமாய் அது உங்களை மேம்படுத்தும்.

* தி. சிங்காரம், சென்னம்பட்டி.

கே: அதிக ஒளியைப் பார்க்கும் போது கண்கள் கூசுவது ஏன்?


ப: கண்ணை வைத்துத்தான் காமிரா உருவாயிற்று. துரதிர்ஷ்டம் பார், உன் கேள்விக்குக் காமிராவை வைத்துக் கண்ணைப் பற்றி விளக்க வேண்டியிருக்கிறது. ஸ்பீடு, லைட் அட்ஜஸ்ட்மெண்ட் உள்ள காமிராவைக் கவனித்திருக்கிறாயா? அதிலே டயாஃப்ரம் என்ற பகுதி ஒளியைக் கட்டுப் படுத்துவதற்காக. எப்படி? அதிக வெளிச்



சம் என்றால் ஒளிவாங்கும் பகுதியைச் சுருக்க வேண்டும்; ஒளி குறைந்தால் விரிக்க வேண்டும். அப்போதுதான் படம் தெளிவாக விழும். அதே போலத்தான் கண்ணிலே **Retina** என்ற உறுப்பு. அதிக வெளிச்சம் என்றால் இந்த **Retina**வைச் சுருக்கியாக வேண்டும். அப்போதுதான் கண் கூசுகிறது. இல்லா விட்டால் மனசில் தெளிவான படம் விழாதே!

* மு. பூபாலன், மூஞ்சூர்பட்டு.

கே: குழந்தைக் கவிஞர் எழுதிய கடைசிப் புத்தகம் எது?



ப: அந்தப் புத்தகத்தின் பெயர்: 'திரும்பி வந்த மான் குட்டி'. இன்னும் அது எழுத்துப் பிரதியாகத்தான் இருக்கிறது. கூடிய விரைவில் அச்சேறிப் புத்தக வடிவம் பெறும். அதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. மேற்கொண்டு விவரம் தேவையானால்—குழந்தைப் புத்தக நிலையம், AL 183, அண்ணா நகர், சென்னை 600 040 என்ற முகவரிக்கு எழுதிக் கேளுங்கள்.

சின்ன அண்ணன்,



நல்லவன் வாழ்வான் — திரு. சம்பந்தம்

புத்தகத்தின் தலைப்பிலேயே ஒரு நீதி போதனை தென்படுகிறதில்லையா? இதில் உள்ள பத்துக் கதைகளும் இப்படித்தான் ஏதாவதொரு நீதியை வலியுறுத்துகிறது. அதே சமயம் கதையின் சுவாரஸ்யமோ விறுவிறுப்போ கெடவில்லை. படிக்கத் தூண்டும் விதத்தில் பத்துக் கதைகளுக்கும் முத்தான கதைப் படங்கள். கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து. நல்லவன் வாழ்வான், உங்களையும் வாழ வைப்பான்.

— ரூ. 8 — பக். 104 — கங்கை புத்தக நிலையம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை — 600 017.

உலகம் சுற்றும் குழந்தைகள் (இரண்டாம் பகுதி) — வாண்டு மாமா

அறிவியல் சமாசாரங்களைச் சிறுவர்களுக்கேற்ற வகையில் சொல்லுவதில் தமிழில் சிறந்தோங்கி நிற்பவர் இன்றைக்கு வாண்டு மாமாதான். அதிலும் பரமேசுவரத் தாத்தாவையும் அவருக்குப் பேரன் பேத்திகளாய்ப் பட்டு கிட்டுவையும் படைத்து அவர்கள் உலக நாடுகளைப் பற்றிய விவரங்களைத் தரும் உத்தியில் ஏற்கெனவே உலகம் சுற்றும் குழந்தைகள் — முதல் பகுதி வெற்றி பெற்றிருக்கிறது — இப்போது வந்திருப்பது இரண்டாவது பகுதி. இதில் இத்தாலி, மங்கோலியா, மலேசியா, ரொமானியா, நியூஸிலாந்து, மெக்ஸிகோ, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய எட்டு நாடுகளைப் பற்றிய விவரம் தந்திருக்கிறார். படிக்கும் போது இந்த நாடுகளையெல்லாம் நீங்களே சுற்றிப் பார்த்த அனுபவம் உங்களுக்கு ஏற்படும்.

— ரூ. 14. — பக். 120 — வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை — 600 017.

பொன்மொழி நானூறு — சா. அப்துல் கபூர்.

பொன்மொழிக்குப் புது அர்த்தம் கற்பித்திருக்கிறார் ஆசிரியர். பொன்மொழி கேட்டுணர்ந்து நடந்தால் நன்மைதானே விளையும்? அதனால் நன்மை பயக்கும் செயலும் செயலின் விளைவும் கூடப் பொன்மொழிதான் என்ற பொருளில் கையாண்டிருக்கிறார்.

இதோ முதல் பொன்மொழி:

எல்லா உலகும் படைத்தளிக்கும்
இறைவன் ஒருவன்; இணையில்லான்;
வல்லான் அவனை வணங்கிவரின்
வாய்க்கும் பேறுகள் பொன்மொழியே!

ஆமாம், இத்தகைய 'பொன்மொழி'களைத் தலைப்புக்குப் பத்துப் பாட்டாக நாற்பது தலைப்புக்களில் பாடி வைத்திருக்கிறார். படித்து நல்லவைகளை நினைவு கூரலாம்; அனுசரிக்கலாம்; மேம்பாடடையலாம்.

— ரூ. 7 — பக். 88 — பொன்மொழி.

அரும் பூ — சா. அப்துல் கபூர்

பாடல் வகையெல்லாம் அத்துபடி போலும் இந்தக் கவிஞருக்கு. மொத்தம் 150 பாடல்கள். புதிரோ புதிர் என்ற தலைப்பில் மட்டும் 6 பாடல்கள் இருக்கின்றன. அவை தவிர மற்றதெல்லாம் தனித்தனித் தலைப்புக்கள். தனித்தனிப் பாடல்கள். ஏதாவது சமாசாரம் சொல்ல வேண்டும் என்றில்லாத வெறும் சந்தப் பாடல்கள் நிறைய இருக்கின்றன. 'நாடு போற்றும் நல்லோர்' நல்வழி காட்டுகிறார்கள். வாய்விட்டுப் படிக்கத் தக்க — தாளலயம் தட்டாத பாடல்கள்.

— ரூ. 25 — பக். 272 — இரண்டு புத்தகங்களும்: பொன்மொழிப் பதிப்பகம், 14—69—ஏ, மேட்டுக்கடை, தக்கலை — 629 175.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157, 434190.
ஆறுமாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—



REGISTERED NO. TN MS (S) 281

Registered as a Newspaper in Srilanka

